Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර්

பெப். 09 - 15, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 649

## வடக்குக் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்
## சாதகமும் பாதகமும்



## வெலிக்கந்தையில் கடத்தல் முகமூடிக்குள் யார்?

## அதிரும் கொலையாளி கைது!

அதிர்வு 2

ஸ்பெஷல்


## காதலித்துப் பார் பெப்ரவரி - 14

## கணவன் விரும்பினால் நடிப்பேன்!

— சிம்ரன்

## எல்லாம் சக்தி மயம்

# ஆன்மீகம்



**எட்டு** என்ற எண்ணுக்கு எப்போதுமே ஒரு மகிமை உண்டு. பால்வெளியில் திசைகள் கிடையாது. ஒன்றுமில்லாத அகண்ட வெளியிலே ஒரு புள்ளி வைக்கப்படும்போது அங்கே எல்லாம் தோன்றிவிடுகிறது. அந்தப் புள்ளியே பிந்து. அதுவே சக்தி. எட்டு திசைகளும் பதினாறு கோணங்களும் கிடைக்கின்றன.

எட்டுத் திக்கிலும் சென்று வெற்றியடைந்தான் என்பார்கள். அஷ்டதிக்கஜங்கள் எனப்படும் யானைகள் எட்டும் திசைகளையும் தாங்குவதாக மரபு. அஷ்ட மூர்த்திகளாக சிவபிரானுக்கு வடிவங்கள் உண்டு. ஏன், அஷ்டாஷரம் நம் ஸ்ரீக்குப் பிடித்த மணாளனின் மந்திரம் அல்லவா? ஓம் நமோ நாராயணாய என உச்சரித்தாலே அஷ்ட ஐஸ்வர்யங்களும் கிடைத்துவிடுமல்லவா?

இப்பேர்ப்பட்ட எட்டு என்ற வடிவங்களின் சிறப்புக் காரணமாக நம்முடைய ஸ்ரீ அஷ்டலக்சுமியாக உருவெடுக்கிறார். லக்சுமி என்றாலே செல்வத்தின் அதிதேவதை என்ற எண்ணத்தைப் போக்க அஷ்டலக்சுமியாகிறாள். உலகின் அனைத்துப் பொருள்களின் வடிவமாக, புஷ்டியான சிறப்பியல்புகளின் வடிவமாக, எங்கெங்கு காணினும் ஸ்ரீயே நிறைந்து நிற்கிறாள் என்ற உண்மையின் வடிவமாகவும் தன்னை நிரூபித்துக் கொள்ள ஸ்ரீ அஷ்டலக்சுமியாகிறாள். இதுவே செல்வ மகள் மட்டுமல்ல, அனைத்துமே அவள்தான் என்று நிரூபிக்கிறது.

**-சுரேஷ், வவுனியா.**

## இயேசு கிறிஸ்து வாழ்வு அளிக்கிறார்

**கேளுங்கள்,** அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப் படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிற வனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?

-மத்தேயு 7:7-11.

**ஜோசப், மட்டக்களப்பு.**

## இறைவன் இரக்கமுடையவன்

**நிலையற்ற** இந்த உலகத்திலே மனிதன் மரணத்தை நினைத்தானாயின் வாழ்க்கை சிறக்கும். அதை மறப்பதால்தான் குற்றங்களை செய்கிறான். இவ்வாறு தீமை செய்பவன் நன்மையையும் செய்யும் போது மறுமையில் இறைவன் மனிதனுக்கு இரக்கமே காட்டுகிறான்.

அதாவது... "எவர் (இறைவனின் திருமுன்) நன்மையை கொண்டு வருவாரோ!...அவருக்கு அதைப்போல் பத்து மடங்கு நற்கூலியுண்டு. எவர் தீமையைக் கொண்டு வருவாரோ!..அவருக்கு அவர் செய்த தீமையின் அளவுக்கு தண்டனை கொடுக்கப்படும்" (6:160)

எனக் கூறப்பட்டுள்ளதை சிந்திக்கும் போது, இலாபகரமாகப் புரிந்து கொள்ளமுடியும். சுருங்கக் கூறின் ஒரு நன்மைக்கு பத்து ரூபாய் பரிசும் ஒரு தீமைக்கு ஒரு ரூபாய் அபராதமுமாகும்.

**-அ.கா.மு.றிஸ்வின், மூதூர் - 01.**

---

### கவிதைப் போட்டி இல.646



பரிசுக்குரிய கவிதை

## கலங்காதே கண்மணியே

துஷ்டர்களின் பட்டியலில்
துரோகியானார் உன் தந்தை
துணையற்ற இவ்வுலகில்
துயரங்கள் துரத்தினாலும்
துவண்டிடாமல் துணிந்து நின்று
உனைக் காப்பேன்
கலங்காதே கண்மணியே!

*எஸ். சுரேஷ்,*
*வவுனியா.*

# கவிதைப் போட்டி இல.649



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 14.02.2006.

கவிதைப் போட்டி இல.649
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### நிம்மதி கொள்வோம்

பனி மூடி
நம்மூரை
பலிகொள்ளும்
போது
நாம் கிலி கொள்தல்
பலனில்லை மகளே
நம்மையும் பலி
கொள்ளட்டும்
அதுவரை
நிம்மதி கொள்வோம்

*– காமீம் செய்னுலாப்தீன், கிண்ணியா – 05.*

### தியாகம்

ஆதரித்து
அரவணைக்கும்
அன்பின்
உறைவிடம்
அன்னை
அகிலத்தில்
அவளோர்
அதிசயம்!!

*ஏ.ஆர்.நதார், திருமலை.*

### பரிதாபம்

யுத்தமும், பசியும்
இணைபிரயா நண்பர்கள்
இவைகளுக்கு
தாயும், சேயும்
இனிமையான
இரைகள்

*– ரி.எல்.எம்.அனீஸ், ஏறாவூர் – 01*

### குடியுரிமை

அகதிகளின் குலத்தில்
அவதரித்து விட்டதனால்
மனிதப் பிரதேசத்தில்
குடியிருக்க - இவர்களுக்கு
குடியுரிமை தடையும்
விதிக்கப்பட்டு விட்டது.

*– கேக்கே. டீன், ஏறாவூர் – 02.*

### முடிவில்

தொடங்கிய
யுத்தம்
முற்றுப் பெறாத வரை
தொடரும்
புலம்பெயர்வும்
அகதிவாழ்வில்
முடிவு காணாது!!

*கே.நௌஷாத், ஏறூர்.*

### தண்டனை


அயல் நாட்டை
அடிமைப்படுத்தி
அமைதியைக்
கெடுப்பதால் தான்
கடவுளின் தண்டனையாய்
கத்தரீனா
கற்பித்தது பாடம்

*வினோதினி, வெள்ளவத்தை.*

### சுமை தாங்கி

ஆயிரம்! ஆயிரம்!
சுமைகளைத்
தாங்கினாலும்
அன்புச் சுமையால்
அத்தனையும் மறந்து
விடுவாள்
அவள் தான் தாய்.

*அக்ஹாத் எம். ஜே., சீனக்குடா*





### தெய்வம் துணை

நரகமென்ற சொல்லெமக்கு
கண்முன்னே காட்சியாக...
கதியற்ற கலியுகத்தில்
கைகொடுப்பார் யாருமில்லை
திக்கற்ற எமக்கு தெய்வமே
துணையென தொடர்ந்திருவோம்
பயணத்தை....

*– மாலினி, கண்டி.*

### பால் வார்ப்பது?

பச்சைக் குழந்தைக்கு
பாசம் காட்டும் இவள்
பால் வார்த்து
பாதுகாப்பது
பந்த பாசத்துக்கல்ல
மனிதம் என்றும்
மகத்தானது என்பதை நிரூபிக்க!

*ஏ.எஸ்.எம். ரவூப், கொழும்பு 15.*

### அகதியாகி

வீடற்று.....
துணையற்று......
அகதியாகி.....
இன்னும் எத்தனை
காலம்
அலைவது!
எப்போது எமக்கு
விடிவு வரும்.

*த.ஜெசிக்கா, யாழ்ப்பாணம்.*

### அகதி உருவம்

தீவிரவாதத்
துப்பாக்கியின்
எச்சில்கள்!
ஜனநாயகத்திற்கு
கொடுத்த பரிசுகளாக
அகதிகள் உருவில்
இங்கே!!

*மீரா முகைதீன் ஹாலித், ஏறாவூர் 03. ஏ*

# உங்கள் பக்கம்

## கொழும்பு நகர் நாறுகிறது

கொழும்பு நகர் நாறுகிறது. கொழும்பில் நாலா பக்கங்களிலும் தற்போது குப்பைகள் மலைபோல் உயர்ந்துள்ளது. இது சம்பந்தமாக நகரசபையுடன் சேர்ந்து செயல்படும் 'கெயார் கிளீன்' நிறுவனத்திடம் கேட்டால் குப்பை கொட்ட இடமில்லை என்கின்றனர். இது விந்தையாக இல்லையா? பாதையில் நடக்கமுடியவில்லை. மூக்கைப் பொத்திக் கொண்டுதான் செல்ல வேண்டும்.

குறிப்பாக மட்டக்குளிப், பகுதியில் அதாவது, பிரதான வீதி (சென்டர் ரோட்) சந்தியில் மலைபோல உயர்ந்து குப்பைகள் காணப்படுகின்றன. இதனால் மக்கள் நாற்றத்தினாலும், விஷக்கிருமிகளாலும் பாதிக்கப்படுகின்றனர். ஆதலினால் தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே இது சம்பந்தமாக மாநகர சபையும் 'கெயார் கிளீன்' நிறுவனமும் துரித நடவடிக்கை எடுத்து, குப்பைகளை உடன் அகற்ற வேண்டுமென பொதுமக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

**-ஏ.எஸ்.எம்.ரவூப், கொழும்பு - 15.**


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk


# வாசகர் சாலை

பத்திரிகையின் ஊடாக உதித்த உதய சூரியனே! உன் புகழ் என்றும் அஸ்த்தமிக்கப் போவதில்லை. தரணிக்கே ஒளிதரும் தங்க நிலவே, உன் வாழ்வில் வசந்தங்கள் மட்டும் வீசட்டும். உன் குணம் இமயத்தைவிட உயர்ந்தது. உன் புகழ் எல்லையற்றது. சோதனைகளை சாதனைகளாய் மாற்றத் தெரிந்தவனே! இனியவனே! இளையவனே! தலைவனே! உன் வெற்றி இமயத்தை விடவும் உயரட்டும்! நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் சூப்பரோ சூப்பர்......

*–என்.மாலதி, புத்தளம்.*

இனிய முரசே!
நீ வாரா வாரம் வாசகர் இரசனை அறிந்து புதுப்புது விடயங்களைப் புதுப்பொலிவுடன் தருவதால் எமது குடும்பத்தில் ஒருவனாகி விட்டாய். வீட்டில் பாப்பா முதல் பாட்டனார் வரை, சமயலறையில் இருந்து ஜெனீவா வரை கலக்குகின்றாய். தடைகள் பல தாண்டி நீ மென்மேலும் பிரகாசிக்க எமது வாழ்த்துக்கள்.

*–க.லோகிதாகரன்,களுவாஞ்சிக்குடி.*

அன்பின் முரசிற்கு!
வாரா வாரம் வர்ண ஜாலங்கள் தரும்
வண்ண முரசே!
நீ தாங்கி வரும் அனைத்து ஆக்கங்களும்
வறண்ட எம் உள்ளத்தை
வெள்ளமாக்குகின்றன.
எங்கும் என்றும் ஒலிக்கும் முரசே, தொடர
வேண்டும் உன் சேவைகள்; மகிழ
வேண்டும். எம்மைப்போல உள்ளங்கள்.

*–ஷப்ரினா பாயிஸ் அகமட், மூர்வீதி, திருமலை.*

கனம் மதிப்பிற்குரிய ஆசிரியர்
அவர்களுக்கு!
முரசு 648ஆவது இதழ்
அனைத்து விடயங்களும்
அருமையாக இருந்தது.
மதியூகியாரின் "காட்டில்
இருந்து கட்டுப்பாட்டுப்
பகுதிக்கு" அரசியல் அலசல்
நிதர்சனமான உண்மைகளைப்
பட்டவர்த்தனமாக
வெளிக்காட்டியது. ஏனைய
பகுதிகளும் அப்படியே. தரமான
விடயங்களையும், உண்மை
நிலைமைகளையும்
வெளிக்காட்டி நிற்பதற்குப்
பாராட்டுங்கள்.

*–விநோதரன், உரும்பிராய்.*

அன்பு முரசே!
வாரம் தோறும் எம் தெருவில்
பவனி வரும் தினமுரசே!
இலைமறை காயாக இருந்த
எம் போன்றவர்களின்
ஆக்கங்களைப் பிரசுரித்து
மேலும்
உற்சாகப்படுத்துகிறாய்.
அறியாத பல விடயங்களை
உன் மூலம்
தெரியப்படுத்துகிறாய்.
உன்னால் நாம் பெற்ற
பயன்கள் ஏராளம். உன்னிடம்
குறை என்பது கிடையாது.
மேலும் மேலும் புதுமை தரும்
உன்னை வாழ்துகிறேன்.

*–எஸ்.ஷியாமளா, சரஸ்வதிகம.*

# வடக்கு - கிழக்கில் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த ராதிகாவின் ஐ.நா. நியமனம் உதவும்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவி கலாநிதி ராதிகா குமார சுவாமி ஆயுதப் பிணக்குகளில் சிக்கியிருக்கும் பிள்ளைகள் தொடர்பான ஐ.நா.வின் விசேட பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருப்பது வரவேற்கக் கூடிய விடயமென்று மனித உரிமை ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். தனது பாரம்பரிய வேர்களை யாழ்ப்பாணத்தில் கொண்டிருக்கும் செல்வி ராதிகா வடக்கு, கிழக்கில் கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்றுவரும் கோர யுத்தத்தின் வடுக்களை நன்கு தெரிந்து கொண்டவர். அதுமட்டுமல்ல, அப்பகுதிகளில் தொடர்ச்சியாக இன்று வரை இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்களையும் நன்கு தெரிந்து கொண்டு அவற்றைக் களை வதற்கான காத்திரமான பல நடவடிக்கை களை எடுத்து வருகிறார். அண்மைய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் மனித உரிமை மீறல் கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டுமென்று ஒப்பந்தத்தின் 2.1ஆவது ஷரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் யுத்த நிறுத்தம் அமுலிலிருக்கும் கடந்த நான்கு வருட காலங்களில் 500க்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் அநேகமானோர் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருந்தமைக்காகவே சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். யுத்தத்தின் மற்றொரு பக்க விளைவுதான் ஆயுதப் படைகளுக்கு வயது குறைந்த சிறுவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதாகும். யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் இலங்கை ஆயுதப் படைகளைப் பொறுத்தவரையில் 19 வயதுக்குக் குறைந்தவர்கள் சேர்த்துக்

## சிறுவர்களைக் கடத்துபவர்களுக்கும் ஆபத்து


கலாநிதி ராதிகா குமாரசுவாமி

கொள்ளப்படுவதேயில்லை. ஆனால், யுத்தத்தில் சம்பந்தப்பட்ட மறுதரப்பான புலிகள் இயக்கம் வயது குறைந்த பிள்ளை களைத் தமது படையணிகளில் சேர்த்துக் கொள்வதாக சர்வதேச மன்னிப்புச் சபை கடந்த வாரம் தெரிவித்திருந்தது. இத்தொகை அண்மைக் காலங்களில் அதிகரித்திருப் பதாகவும் கண்டனம் தெரிவிக்கப்பட்டி ருக்கிறது. இதற்கு முன்னர் எட்டு வருடங் களாகப் பதவி வகித்த ஒலரா ஒட்டுண்ணு இலங்கைக்கு விஜயம் செய்து, வன்னிக்கும் சென்று நிலைமைகளை ஆராய்ந்த பின்னர், ஐ.நா.சபைக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் புலிகள் இயக்கத்தின் மீது கண்டனம் தெரிவித்திருந்தார். புலிகள் இயக்கம் வயது குறைந்த பிள்ளைகளைத் தமது படையணிகளில் சேர்த்துக் கொள்வதாகவும் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் அவர் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. பத்து வயதுச் சிறுவர் களைக் கூடப் புலிகள் இயக்கம் பலாத்கார மாகக் கடத்திச் செல்வதாக சர்வதேச அமைப்பான மனித உரிமை கண்காணிப்புக் குழு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஐ.நா.சபையின் மூன்றாவது தரத்திலுள்ள உயர் நிலைப் பதவிக்கு இலங்கையைச் சேர்ந்த தமிழ் பெண்மணி ஒருவரை ஐ.நா.சபை தெரிவு செய்திருப்பது இதுவே முதற் தடவையாகும். இலங்கையின் ஆயுதப் பிணக்கு வடக்கு, கிழக்கையும் தாண்டி கொழும்பு வரை விஸ்தரிக்கப் பட்டிருப்பதால் ராதிகாவுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென்றும் அப்பேச்சாளர் சொன்னார்.

## கனடாவிலிருந்து 100க்கு மேற்பட்ட தமிழர்கள் நாடு கடத்தப்பட்டனர்

கனடாவில் குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் ரொறன்ரோ பகுதியில் வன்செயல்களிலும் கோஷ்டி மோதல்களிலும் ஈடுபட்டுவரும் தமிழ் குழுக்களை வளைத்துப் பிடிக்கும் நடவடிக் கைகளில் கனடிய பொலிஸார் ஈடுபட் டுள்ளனர். அண்மைய மாதங்களில் நூற் றுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டிருப்பதாகக் கனடிய எல்லைச் சேவைகள் அமைப்பின் பேச்சாளரான திருமதி அன்னா பாயே தெரிவித்தார். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சீலப்பு குழுவென்றழைக்கப்பட்ட வன்செயல் கோஷ்டியின் தலைவரான ஜெயசீலன் துரைசிங்கம் என்பவர் கடந்த மாதம் 23ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். தெருச் சண்டை உட்பட பல்வேறு வன் செயல்களில் ஈடுபட்டு வந்த இவர், பல தடவைகள் கனடிய நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டவராவார். இவர் சமூகத்துக்கு ஆபத்தானவரென்ற குற்றச்சாட்டின் பேரில் கனடிய குடியேற்ற அதிகார சபை தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு கடந்த 23ஆம் திகதி அளிக்கப்பட்டது. அவரை நாடு கடத்துமாறு நீதிமன்றம் தீர்ப்பளித்த அன்றை தினமே அவர் நாடு கடத்தப்பட்டார். இதைப்போன்று கைலாஷ் தனபாலசிங்கம், ஏ.கே. கண்ணன் போன்ற குழுக்களும் கனடிய அதிகாரிகளின் கவனத்துக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. விரைவில் மேலும் பலர் இலங்கைக்கு நாடு கடத்தப்படுவார்களென்று கனடிய அதிகாரி கள் கூறினர். இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட ஜெயசீலன் கட்டுநாயக்க விமான நிலையத் தில் வந்திறங்கி, எவ்விதத் தொந்தரவுகளு மின்றி யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்திருப்ப தாகத் தகவல்கள் கிட்டியுள்ளன.

(மேலதிக விபரங்கள் 06ஆம் பக்கத்தில்)

## 'கூடார்த்தச் சித்திரமும் கூடாத செய்கைகளும் கூடா'

டென்மார்க் பத்திரிகையொன்று நபிகள் நாயகத் தைக் கூடார்த்தச் சித்திரமாகப் பிரசுரித்தமைக்காக லெபனானிலும் சிரியாவிலும் டென்மார்க் மற்றும் நோர்வே நாட்டுத் தூதரகங்கள் எரிக்கப்பட்டமை அநாகரிகமான செயல். ஒரு பத்திரிகையின் அருவருக் கத்தக்க செயலுக்காக மேற்கு நாடுகளின் தூதரகங் களை எரிப்பதும் தாக்குவதும் முஸ்லிம்களுக்கு தலைகுனிவை ஏற்படுத்தும் செயலென்று கல்முனையைச் சேர்ந்த மௌலவி அப்துல் ஜப்பார் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார். முஸ்லிம்களின் ஆத்திரம் நியாயமானது. ஆனால் அது அர்த்தமற்ற அடாவடித்தனமாக மாறக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## இந்தியாவில் கற்க புலமைப்பரிசில்கள்

இந்தியப் பல்கலைக் கழகங்களில் சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய நுண் கலைகளில் கல்வி கற்பதற்கான புலமைப் பரிசில்களை வழங்க புதுடில் லியிலுள்ள கலாசார உறவுகளுக்கான இந்திய சங்கம் முன் வந்துள்ளது. சம்பந்தப்பட்ட துறைகளில் தராதரம் பெற்ற 22-25 வயதிற்கிடைப்பட்ட இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக் கலாம். சம்பந்தப்பட்ட துறையில் திறமைச் சித்தி உட்பட ஜீ.ஸி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற வர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரிகள் ஜீ.ஸி.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலத் தில் சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பப் படிவங்களை இலக்கம் -133, பௌத்தாலோக மாவத்தை, பம்பலப்பிட்டி, கொழும்பு - 04 என்ற இடத்திலுள்ள இந்திய கலாசார நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

## வெலிக்கந்தை கடத்தலின் பின்னணி இதுதான்

மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்கப்பால் இருக்கும் வெலிக்கந்தை என்ற இடத்தில் வைத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊழியர்கள் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தில் பெரும் மர்மம் நிலவுவதாக மட்டக்களப்பு தன்னார்வத் தொண்டர் நிறுவன அதிகாரியொருவர் தெரிவித்தார். கடந்த 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஐந்து பேரும், மறுநாள் ஐந்து பேருமாக பத்துப் பேர் கடத்தப்பட்டனரென்றும், இவர்களில் பின்னர் கடத்தப்பட்ட ஐவரில் இருவர் விடுவிக்கப் பட்டதாகவும் கூறப்படுகிறது. விடுவிக்கப்படாத வர்களென்று கூறப்படுவோர், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கொக்கட்டிச் சோலையில் தங்க வைக்கப்பட்டிருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக் கழக மட்டக்களப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. விடுவிக்கப் பட்டதாகக் கூறப்படும் முன்பள்ளி ஆசிரி யைகள் இருவரிடமும் 'கடத்தல்' பற்றி விரி வாக விளக்கம் அளிக்கப்பட்டே சம்பந்தப் பட்டவர்களால் அனுப்பப்பட்டிருக்கிறார்க ளென்றும் அவ் வட்டாரங்கள் கூறின. 'உயர் பாதுகாப்பு வலய மக்கள் படை', 'பொங்கு தமிழ் படை' போன்ற போலி அமைப்புகள் போன்றதே இக் கடத்தல் நாடகமும் என்று அவ் வட்டாரங்கள் கூறின. இவ்வாறான படைகள் இல்லவேயில்லை. புலிகளே தாக்குதல்களைத் தொடுத்துவிட்டு இவ்வாறான பெயர்களைக் கூறி, மக்களே படையினர் மீது தாக்குதல்கள் நடத்துவதாகக் கூறிவந்தார்கள். புலிகளும் அரசும் பேச்சுவார்த்தைக்கான இணக்கத்துக்கு வந்ததுமே இந்தப் படைகள் தாக்குதல்களை நிறுத்திவிட்டன. ஒன்றில் அவை புலிகளின் துணைப்படைகளாக இருக்க வேண்டும். அல்லது புலிகளே தாக்குதல்களை நடத்தி விட்டு 'மக்கள்' என்ற பெயருக்குள் மறைந்து கொள்கிறார்கள். இதில் பின்னர் கூறப்பட்டதே உண்மை. இதைப் போன்றுதான் வெலிக் கந்தை கடத்தல் நாடகமும். பேச்சுவார்த் தையை இழுத்தடிப்பதற்கான தந்திரோ பாயமே இது என்கின்றன அவ் வட்டாரங்கள்.

## சமஷ்டிக் கருத்தரங்கிலிருந்து அமெரிக்கத் தூதுவர் வெளிநடப்பு

கொழும்பிலுள்ள பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற கருத்தரங்கில் தமிழ் தேசியக் கூட்ட மைப்பு எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் பேச எழுந்ததும் அமெரிக்க உயர் ஸ்தானிகர் ஜெப்ரி லங்ஸ்டட் கூட்ட மண்டபத்தை விட்டு வெளியேறினார். 'இலங்கையின் எதிர்காலமும் சமஷ்டி எண்ணக் கருவும்' என்ற தலைப்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது. அமெரிக்கா புலிகள் இயக்கத்தைத் தடை செய்திருப்பதால் புலிகளின் முகவரமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. பேச எழுந்ததால்தான் அவர் வெளிநடப்புச் செய்தாரென்று அங்கிருந்த பலர் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

கருத்தரங்கில் பேசிய அனைவரும் எழுதி வாசிக்காமல் எழுந்தமானமாகப் பேசினார்கள். ஆனால் சுரேஷ் பிரேமச் சந்திரன் மட்டும் எழுதிக் கொண்டு வந்ததை வாசித்தார். இந்த உரையை எழுதிக் கொடுத்தவர் அன்ரன் பால சிங்கமா? அல்லது தமிழ்ச் செல்வனா? என்று கூட்டத்திலிருந்த ஒருவர் கேள்வி எழுப்பினார்.

"இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு காண முடியாது என்பதை நான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எடுத்துக் கூறியுள்ளேன். ஒற்யைாட்சியின் கீழ் தீர்வுகாண முடியுமென்று ஜே.வி.பி.யும் ஜாதிக ஹெல உறுமயவும் கூறுவது அர்த்தமற்றது" என்று அரசியல் விவகார அமைச்சர் டி.யூ.குணசேகரா அங்கு கூறினார். அவர் அங்கு மேலும் பேசுகையில், 'நான் இந்த அரசாங் கத்தில் அமைச்சர் பதவி வகித்தாலும் அரசாங்கத்தின் சகல கொள்கை களையும் ஏற்றுக்கொள்பவன் அல்லன். அதிகாரப் பகிர்வு மூலமாகவே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியு மென்பதே எனது கருத்தாகும். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இதே கருத்தையே கொண்டிருக்கிறார்' என்றார்.

## கல்லூரி அதிபரின் விடுதலைக்காக மாணவர்கள் போராடினர்

அண்மையில் புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட வாழைச்சேனை இந்துக் கல்லூரி அதிபர் முருகேசு தவராசா விடுவிக்கப் பட்டமைக்கு ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் நடத்திய போராட்டமே காரணமென்று கல்லூரி ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். தமது படையணிகளில் சேர்த்துக் கொள்வதற்காகப் புலிகள் மாணவர்களைக் கடத்திச் செல்வதற்கு கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்து வந்தவர் கல்லூரி அதிபரென்பது குறிப்பிடத்தக்கது. இவர் கடத்தப்பட்டமை குறித்து பொலிஸாருக்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களுக்கும் பெற்றோர் முறைப்பாடு செய்திருந்தனர்.

## வறிய குடும்பங்களுக்கு மாதாந்தம் 3000 ரூபா

வறிய குடும்பங்களில் கும்பத் தலை வனோ அல்லது கும்பத் தலைவியோ அங்கவீனராக இருக்கும் பட்சத்தில் அக் குடும்பத்துக்கு மாதாந்தம் மூவாயிரம் ரூபா உதவித் தொகை வழங்கப் படவிருக்கிறது. இதற்கான நடவடிக்கை களை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு எடுத்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

## ஊவாவில் தமிழ் பாடசாலைகளின் வசதிகளை அதிகரிக்க நடவடிக்கை

கடந்த 60 வருடங்களாக மலையகத் தமிழ் மக்களுக்கும் தோட்டத் தொழிலாளர் களுக்கும் இ.தொ.கா. பாரிய சேவைகளை


அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான்

யாற்றி வந்துள்ளது. அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஆரம்பித்து வைத்த சமூகப் பணிகளை இ.தொ.கா. தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லுமென்று பதுளை மாவட்ட எம்.பி.யும் இ.தொ.கா. முக்கியஸ் தருமான எம்.சச்சிதானந்தன் தெரிவித்தார். "நான் மாகாண சபை கல்வியமைச்சராக இருந்த காலத்தில் மலையகக் கல்வியை அபிவிருத்தி செய்ய பாரிய சேவைகளை யாற்றியுள்ளேன். ஊவா மாகாணத்தில் தற்போது 68 தோட்டங்கள் இருக்கின்றன. இங்கு 365 டிவிஷன்கள் இருக்கின்றன. அறுபதாயிரம் தோட்டத் தொழிலாளர்கள் இங்கு பணிபுரிகிறார்கள். 196 தமிழ் பாடசாலைகளும் 153 தோட்டப் பாடசாலைகளுமிருக்கின்றன. ஊவா மாகாணத்தில் பணி புரியும் 1700 ஆசிரியர்களில் 400 பேர் மட்டுமே தமிழ் மொழி மூல ஆசிரியர்களாவார்கள். தமிழ் மொழி மூல பாடசாலைகளின் உட் கட்டமைப்பு வசதிகளையும் ஆளணியின ரையும் அதிகரிப்பதற்கு சகல நடவடிக்கை களையும் நான் எடுக்கவுள்ளேன்" இவ்வாறு சச்சிதானந்தன் எம்.பி. தெரிவித்தார்.

## தமிழர்கள் காட்டுமிராண்டிகள் அல்லர்

### -வி.ஆனந்தசங்கரி

"கிளைமோர் கண்ணிவெடித் தாக்கு தல்கள் பொதுமக்களால் மேற்கொள்ளப் பட்டனவே அன்றி தங்களால் அல்லவென புலிகளின் தலைவர்களில் ஒருவர் கூறியதை வன்மையாகக் கண்டிக்கின்றேன். இலங்கைத் தமிழர்கள் அநாகரிகமாக நடந்து கொள்ளும் காட்டுமிராண்டிகள் என்ற எண்ணம் சர்வதேச சமூகத்தினரிடம் பதிய முன்பு அக் கூற்றை சம்பந்தப்பட்டவர் வாபஸ் பெற வேண்டும்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி விடுத்த அறிக்கை யில் கேட்டுள்ளார்.

இந்த கிளைமோர் தாக்குதல் சம்பவங் கள் நடைபெற்ற இடத்தில் உள்ள எவரேனும், இக் கூற்றுக்கு ஆதாரம் ஏதும் இருப்பின் அதை முன்வைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். இராணுவத்தினர் மீது பொது மக்களால் கிளைமோர் தாக்குதல்கள் நடத்தப்பட்டதென வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 21 தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களில் எவரேனும் ஒருவர் துணிந்து கூறுவாரா? சமாதானத் தையே விரும்பும் அப்பாவி மக்கள் கிளை மோர், கைக்குண்டு தாக்குதல்கள் பயத் தையும், பீதியையும் மட்டுமே உண்டு பண்ணும் என்பதையும் உணர்ந்துள்ளனர். மதிப்போடு வாழ்கின்ற தமிழ் இனத்துக்குப் புலிகள் அபகீர்த்தியை ஏற்படுத்தக்கூடாது.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்ந்த மக்கள், போர் நிறுத்த உடன்படிக்கை ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்பு, மிக அமைதியாகவே வாழ்ந்தார்கள். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின் அரச கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் பிரவேசித்து அரசியல் பணியில் ஈடுபடக் கிடைத்த பொன்னான வாய்ப்பு, ஹர்த்தால்களும், ஆர்ப்பாட்டங் களும் நடத்தவல்ல. அரச நிர்வாகத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் அப்பாவி மக்களைப் பீதியூட்டவும், கிளைமோர் தாக்குதல்கள், கைக்குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளவும் அல்ல. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் எத்தகைய எத்தனை யுத்த நிறுத்த மீறல்கள் நடைபெற்றுள்ளன என்பதை யாரும் அறிய முடியாது. ஆனால் ஏனைய பகுதிகளில் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட தடவைகள் ஒப்பந்த மீறல்கள் இடம்பெற்றுள்ளன. புலிகளோ அன்றி அவர்களின் ஆதர வாளர்கள் எவரேனும் அவர்களின் கட்டுப் பாட்டுப் பிரதேசத்துக்குள் தடுப்பு முகாம்கள், சித்திரவதை முகாம்கள், இருட்டறைகள் இல்லை என்பதை மறுக்க முடியுமா? அத்துடன் ஆட்கடத்தல், பணம் பறித்தல், கொலைகள், சிறுவர்களைப் படையணிக்குச் சேர்த்தல் போன்றவையும் நடைபெறுகின்றன என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## மொழிக் கற்கைகளுக்கான நிலையம்

இலங்கையில் அரச கரும மொழியாகத் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டு எதிர்வரும் ஜூன் மாதத்தோடு ஐம்பது ஆண்டுகள் நிறைவுபெறப்போகின்றன. இந்த நாட்டில் இனப்பிரச்சினை கொழுந்து விட்டெரிவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். எனவே அரசாங்க ஊழியர்கள் தமிழிலும் சிங்களத்திலும் பயிற்சி பெறுவதற்காக மொழிக் கற்கைகளுக்கான நிலையமொன்றினை ஏற்படுத்தவுள்ளோம். இதற்கான மசோதா பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படுமென்று அரசியல் விவகார அமைச்சர் டியூ.குணசேகரா தெரிவித்தார்.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## சுயலாப அரசியலுக்காக தேர்தலை வற்புறுத்தாதீர்!

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

அரசுக்கும் - புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை இம்மாதம் 22ஆம் - 23ஆம் திகதிகளில் ஜெனீவாவில் நடைபெறுமென்று பேச்சுவார்த்தையின் ஏற்பாட்டாளர்களான நோர்வே அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பையிட்டு மகிழ்ச்சி கொள்ள முடியவில்லை. ஏனெனில், பேச்சுவார்த்தைக்கான சம்மதம் அறிவிக்கப்படுவதற்கான சூழலை தோற்றுவிப்பதில் சர்வதேச சமூகம் காட்டிய அழுத்தம் மிகப் பெரியதாகும். அதைத் தொடர்ந்து, இருதரப்பிலிருந்தும் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்பவர்களின் விபரங்களை இறுதி செய்வதில் காட்டப்பட்ட இழுபறிகள் கவனத்துக்கு அப்பாற்பட்டதல்ல. இப்போது திகதி அறிவிப்பு - இதுகூட இருதரப்பினரின் ஏகோபித்த திருப்தியிலிருந்து வெளியிடப்பட்டதாக கருதமுடியவில்லை. அரசின் விருப்பங்களையும் ஆர்வத்தையும் புலிகள் மறுதலித்தே வருகின்றனர்.

இந்தப் போக்கானது பேச்சுவார்த்தைகள் மீதான நம்பிக்கையைக் கேள்விக்குள்ளாக்கி வருகிறது. இது இவ்வாறு இருக்க, மற்றுமொரு சர்ச்சைக்குரிய விடயமாக இருப்பது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல், வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரை அங்கு நியாயமான ஒரு தேர்தல் நடத்தப்படுவதற்கான ஏறு நிலை இல்லை. மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்து கொண்டிருப்பதும், சுதந்திரமான வாக்களிப்புக்கு வாய்ப்பின்மையும் தேர்தல் மீதான எதிர்பார்ப்பை ஈடுசெய்வதாக இல்லை எனலாம்.

இந்த நிலையில் மக்கள் மீது தேர்தல் ஒன்றைத் திணிக்கின்ற விதமாக வற்புறுத்தி தேர்தல் நடத்தப்படுமானால் அது உள்நோக்கம் கொண்டதாகவே இருக்கும். ஆகவே வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும், அமைப்புகளும் இந்த விடயத்தில் நிதானமாகவும் - விவேகமாகவும் முடிவுகளை எடுப்பது மக்கள் நலன் சார்ந்ததாக இருக்கும். எனவே தேர்தல் ஒன்றுக்கு முன்னர் மக்களின் இயல்பு வாழ்வு உறுதிப்படுத்தப்பட வேண்டும். பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். சிவில் நிர்வாகத்துக்குள் ஆயுதத் தலையீடு - அது அரசினுடையதாக இருக்கலாம் அல்லது புலிகளுடையதாக இருக்கலாம் - அறவே இல்லாது செய்யப்படல் வேண்டும். நெருக்கடிக்குள்ளும் அச்சுறுத்தல்களுக்குள்ளிருந்தும் மக்கள் விடுவிக்கப்பட வேண்டும். அரசின் ஒதுக்கீடுகள் வெளிநாடுகளின் நிதி உதவிகள் எவரது சுரண்டலுக்கும் உட்படாமல் உரிய மக்களைச் சென்றடைய வேண்டும். போராட்டம், ஹர்த்தால் என்பவற்றின் பெயரால் தொழிலாளர்கள், மாணவர்கள் பாதிக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். படுகொலைகள் முற்றுப்பெற்று வாழ்வின் மீதான பிடிப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான உடனடியானதும், அவசரமானதுமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுகின்ற அவசரத்தை ஒவ்வொரு தரப்பும் வெளிப்படுத்த வேண்டும். அதைவிடுத்து சமாதானத்தின் பெயரால் இந்தப் பிரச்சினை நீடித்துக்கொண்டு செல்ல முடியாது. அவ்வாறு மக்களின் சுமுக வாழ்க்கைக்கான உத்தரவாதத்தை வழங்கமுடியாத எவரும் சுயநல அரசியல் லாபத்தை மட்டும் கவனத்தில் கொண்டு தேர்தல் பற்றி பேசுவதும் பதவிகளுக்காக வாக்குறுதிகளை வாரி இறைப்பதும் ஏமாற்றுத்தனமேயன்றி நாட்டுக்கும் - மக்களுக்கும் நன்மையானதில்லை. ஆகவே அடிப்படைப் பிரச்சினைகளின் தீர்வுக்காக முயற்சி பண்ணும் அதேவேளை, மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைக்கு விரைவான தீர்வு காண்பதிலும் அக்கறை செலுத்த வேண்டும்.

இந்த வற்புறுத்தலை தனியே அரசின் மீது மட்டும் விடுத்து விட முடியாது. இந்தக் கடமையை நிறைவேற்றுவதில் புலிகளுக்கும் ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் கடப்பாடு உண்டு என்பதை புரிந்து நடப்பதே நன்மையாக அமையும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை


**என்றென்றும் அன்புடன்,**
**ஆசிரியர்.**

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# வெலிக்கந்தைக் கடத்தல் முகமூடிக்குள் யார்?

**ஜெனீவாவில்** அரசாங்கத் தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தப் புலிகள் இணக்கம் தெரிவித்தார்களென்ற செய்தி, இலங்கை மக்களையும் சர்வதேச சமூகத்தையும் நிம்மதிப் பெருமூச்சு விட வைத்தது உண்மைதான். வடக்கையும் கிழக்கையும் உலுப்பிவந்த உடனடிப் பிரச்சினையான படுகொலை வேகத்துக்கு இந்தப் பேச்சு, 'பிரேக்' போடுமென்ற நம்பிக்கையே அந்தப் புளகாங்கிதத்துக்குக் காரணமாக அமைந்திருந்தது. ஆனால், புலிகள் பேச்சுக்கு வர இணக்கம் தெரிவித்திருப்பது 'வெறும் பம்மாத்து' என்று சில தரப்பினர் சந்தேகம் தெரிவிக்கவும் தவறவில்லை. இதற்கு உதாரணமாக, திம்புவுக்குப் பின்னர் நடைபெற்ற சகல பேச்சுவார்த்தைகளிலும் புலிகள் 'பாச்சா' காட்டி வந்ததை இவர்கள் சுட்டிக்காட்டினர். அதுமட்டுமல்ல, நோர்வேயின் அனுசரணையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் 'சேடம்' இழுக்கத் தொடங்கியதையும் அவர்கள் உதாரணமாகக் காட்டினர். அத்துடன் கடைசியாக நடைபெற்ற பேச்சுவார்த்தையிலும் ஆறே ஆறு மாதங்கள் மேசையில் அமர்ந்து விட்டுப் புலிகள் ஓடிப்போனதையும் அவர்கள் காரணம் காட்டினர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டுமென்ற சக்திகளும் யுத்தத்தின் மூலமே தீர்வு காணப்பட வேண்டுமென்று கூறும் சக்திகளும், சகல தரப்பிலும் சகல இனங்களின் மத்தியிலும் இருக்கவே செய்கின்றன. அதாவது, யுத்த எதிர்ப்பு சக்திகளும் சமாதான விரோத சக்திகளும், யுத்தத்தோடு சம்பந்தப்பட்ட இரு தரப்புகளிலுமே இணைந்து நிற்கின்றன. ஒஸ்லோவைத் தவிர வேறு எங்குமே முதல் சுற்றுப் பேச்சுக்கு வரமாட்டோமென்று அடம் பிடித்த புலிகளை படியிறங்க வைத்தது சர்வதேச சமூகத்தின் அழுத்தம்தான் என்பதை எவரும் மறுத்து விட முடியாது. இந்த நிலையில் சமாதான விரோத சக்திகள், அவை எத் தரப்பிலிருந்தாலும் அவற்றைக் குழப்பு வதற்கான சேஷ்டைகளில் ஈடுபடுமென்பது உண்மைதான். கிட்டத் தட்ட 33 மாதங்களுக்கு முன்னர் சமாதான மேசையை விட்டுப் போன புலிகள் மீண்டும் வருவதற்கான இணக்கம் தெரிவித்து, விரல் விட்டு எண்ணக்கூடிய நாட்களுக்குள் தமிழர் புனர் வாழ்வுக் கழக ஊழியர்கள் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் செய்தி,



அதிர்ச்சித் தகவலாக வெளிவந்தது. உண்மையில் இந்தக் கடத்தல் செய்தியின் பின்னணியில் இருக்கும் முகமூடிக் கொள்ளையர்கள் யார் என்பதே இன்றைய முக்கியமான கேள்வியாகும். தமக்கு விரோதமான சக்திகளே தமிழர் புனர்வாழ்வுக் கழக ஊழியர்களைக் கடத்திச் சென்றனரென்று புலிகள் கூறுவது பம்மாத்து வேலையென்ற சாரப்பட அமைச்சர் மங்கள சமரவீர கண்டனம் தெரிவித்திருக்கிறார். இது எப்படியிருந்தாலும் பேச்சுவார்த்தை குழப்பப்படவேண்டும் என்று விரும்பும் சக்திகளே இதற்குப் பின்னணியில் இருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாதது. கடந்த 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பிலிருந்து வவுனியாவுக்குப் புறப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக ஊழியர்கள் 15பேரில் ஐவர் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்பட்டது. அதாவது அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள வெலிக்கந்தையில் வைத்து இவர்கள் கடத்தப்பட்டனரென்று புலிகள் கூறுகின்றனர். வெலிக்கந்தை இராணுவ சோதனைச் சாவடியைத் தாண்டி சுமார் நூறு மீற்றர் அப்பால் சென்றதும் வெள்ளை வானொன்றில் வந்தவர்கள் இவர்களை வழி மறித்து கடத்திச் சென்றதாகப் புலித் தரப்பு தெரிவிக்கிறது. பிற்பகல் 2 மணியளவிலேயே இவர்கள் கடத்தப்பட்டனரென்று புலிகளின் சமாதான செயலகத் தலைவர் புலித்தேவன் அன்றைய தினம் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கடத்தல்காரர்கள் சரளமாகத் தமிழில் பேசினார்களென்றும் "பொலிஸ் ஜீப் ஒன்று வருகிறது" என்று கடத்தல்காரர் ஒருவர் கூறியதும், 'பரவாயில்லை வரட்டும்" என்று மற்றொருவர் கூறியதாகவும் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும், பெண்கள் தெரிவித்தனர். அதாவது கடத்தல்காரர்கள் தமிழர்களென்றும் அவர்கள் படையினரின் துணையுடன் தான் இதனை நடத்தினரென்று சாட்டுவதுமே விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் பெண்களின் கூற்றாகவுள்ளது. இன்னொரு வார்த்தையில் சொல்வதானால், துணைப் படையினரே கடத்திச் சென்றனர் என்பதைக் காட்டுவதற்காகவே இவ்வாறு கதையளக்கப்படுகிறதென்று கூறப்படுவதையும் நாம் நிரா கரித்துவிட முடியாது.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆதரவாக பிரபா அணிப் புலிகள் மீது தாக்குதல் நடத்தமாட்டோமென்று ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தப் பிரகடனத்தை கருணா தரப்பினர் வெளிப்படுத்தியதையும் நாம் இங்கு கவனத்திற் கொள்ள வேண்டும். வெலிக் கந்தையில் வைத்து 29ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக ஐவரும் அதன் கணக்கு வழக்குகளோடு சம்பந்தப்பட்டவர்கள். அதாவது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கணக்கியலாளர்கள். இவர்களில் எவருமே பட்டம் பெற்ற கணக்கியலாளர்களல்லர் பிரேமினி தனுஷ்கோடி என்ற யுவதி கிழக்குப் பல்கலைக்கழக மாணவி என்றும் கூறப்படுகிறது.

மறுநாள் கிளிநொச்சியிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற ஐந்து முன்பள்ளி ஆசிரியைகள் கடத்திச் செல்லப் பட்டதாகவும் கூறப்படுகிறது. இந்தக் கடத்தலையும் ஒரு நாடகம் என்ற பாணியில் அமைச்சர் மங்கள சமரவீர கேள்விகளையெழுப்பியுள்ளார். வெலிக்கந்தை கடத்தல் சம்பவம் இடம்பெற்று 30 மணித்தியாலங்களுக்குப் பின்னரே பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாக அவர் கூறுகிறார்.

அத்துடன் வைபவமொன்றில் கலந்துகொண்ட பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவிடம் தமிழர் புனர்வாழ்வுக் கழக முக்கியஸ்தரொருவர் இக் கடத்தல் சம்பவம் பற்றி வெறும் தகவலாகக் கூறினாரென்றும் அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார். கடத்தல் சம்பவம் உண்மையானால், ஏன் உடனடியாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யவில்லையென்று அமைச்சர் எழுப்பும் கேள்வியில் நியாயங்கள் இல்லாமலில்லை. ஆக 15ஆம் திகதி ஜெனீவா பேச்சு ஆரம்பமாகுமென அரசு அறிவித்திருந்தது. மறுகணமே கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக ஊழியர்கள் விடுவிக்கப்படும்வரை பேச்சுவார்த்தைக்கு வரமாட்டோமென்று புலிகள் அறிவித்துள்ளனர். மொத்தத்தில் நாம் கடந்த வாரம் கூறியதைப் போன்று பேச்சுவார்த்தைக்கு எதிரான வேதாளங்கள் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறி நிற்கின்றன.

எனவே இக் கடத்தல் பற்றிய தகவல்களுக்குப் பின்னால் பேச்சுவார்த்தையை விரும்பாத சக்திகளே உள்ளன என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய உண்மையாகும். உண்மையிலேயே தமிழர் புனர்வாழ்வுக் கழக ஊழியர்கள் கடத்தப்பட்டார்களா? அல்லது இந்தக் கடத்தல் ஒரு நாடகமா? என்பதே கண்டறியப்பட வேண்டிய உண்மையாகும். தமிழர் புனர்வாழ்வுக் கழக ஊழியர்கள் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் வெலிக்கந்தையில் பாரிய தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொலிஸார் வெறுங்கையோடு திரும்பியிருக்கின்றனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மீது தேசியரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டிருக்கின்றன. நிவாரண நடவடிக்கைகளுக்கென்ற பெயரில் உலக நாடுகளில் திரட்டப்படும் பணம், புலிகளின் ஆயுதக் கொள்வனவுக்கு பயன்படுத்தப்படுவதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருக்கிறது. புலிகளின் முகவராண்மை அமைப்பாகவே தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செயற்படுகிறது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டிருக்கிறது. இதனால் கனடா, அவுஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளில் இவர்களின் அலுவலகங்கள் சோதனைகளுக்கு உள்ளாக்கப் பட்டிருக்கின்றன. இவர்களின் கணக்கு வழக்குகள் பரிசீலிக்கப் பட்டிருக்கின்றன. சில ஆவணங்களும் கைப்பற்றப்பட்டிருக் கின்றன. இந்நிலையில் இலங்கையின் தேசிய பந்தோபஸ்துக்கு அச்சுறுத்தலாக தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் செயற்படுகின்றனவா என்பதைக் கண்டறியவும் அப்படிச் செயற்படும் நிறுவனங்களின் கணக்கு வழக்குகளை பரிசீலிக் கவும் இலங்கையில் பாராளுமன்றத் தெரிவு கமிட்டியொன்று நிறுவப்பட்டிருக்கின்றது. இந்தப் பின்புலத்தோடுதான் கடத்தல் பற்றிக் கூறப்படும் குற்றச்சாட்டை ஆராய வேண்டியிருக்கிறது. கடத்தப்பட்ட ஊழியர்களுக்கு ஏற்கனவே பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருப்பதாகவும் மேற்படி கழகத்தின் பணிப்பாளர் கே.பி. ரெஜி குறிப்பிட்டிருக்கிறார். எனவே இக்கடத்தல் நாடகத்திற்கும் ஜெனீவா பேச்சுவார்த்தைக்குமிடையில் நெருங்கிய சம்பந்தமிருப்பதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை யாரும் மறுத்து விட முடியாது. சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் சிக்கலுக்குள்ளாகி வரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடுகளை மூடி மறைப்பதற்காகவே இவ்வாறானதொரு நாடகத்தைப் புலிகள் ஆடுகின்றனரெனக் கூறப்படுகின்றது. ஒரு வாதத்திற்காக, தமிழர் புனர்வாழ்வுக் கழக ஊழியர்கள் கடத்தப்பட்டுள்ளனரென்று வைத்துக் கொள்வோம். அவர்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டார்கள் என்பதற்காக அரசாங்கமே சம்பந்தப்பட்டது என்று கூறுவது அர்த்தமற்றது. ஜெனீவா பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டு அதில் இந்தக் கடத்தல் விவகாரத்தை ஏன் புலிகளால் கிளப்ப முடியாது. உண்மையில் படுகொலை அக்கிரமங்கள் அற்ற ஒரு சமாதானச் சூழலில் வடக்குக் கிழக்கு மக்கள் வாழ வேண்டுமென்று புலிகள் விரும்பியிருந்தால், புலிகள் அதைத்தான் செய்திருக்க வேண்டும் என்று எரிக் சொல்ஹெய்ம் பாலசிங்கத்தை வலியுறுத்திய பின்னரே புலிகள் பேச்சுக்கு வரச் சம்மதித்தார்கள். ஒன்றரை மாத இடைவெளிக்குள் 96 படைச் சிப்பாய்களை வடக்குக் கிழக்கில் கிளைமோர் குண்டுத் தாக்குதல்கள் மூலமும் வேறு தாக்குதல்கள் மூலமும் கொன்றவர்கள் புலிகள்தான். ஆனால் பொங்கு தமிழ் படை மற்றும் மக்கட்படை என்ற அமைப்புகளே இக் கொலைகளைச் செய்ததாகக் கதையளக்கப்படுகிறது. அப்படியானால் இவை புலிகளின் துணைப் படைகளா? மீண்டுமொரு யுத்த கலாசாரத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்காகவே இக் கடத்தல் நாடகம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறதா? படையினர் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்காகவே அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு அழுத்தத்தைப் பிரயோகித்து புலிகளை ஜெனீவாவுக்கு வரச் சம்மதிக்க வைத்தது. மீண்டும் தாக்குதல்களைத் தொடர்வதற்காகவே இந்தக் கடத்தல் நாடகம்



மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பிற்பகல் 2 மணிக்கு கடத்தல் இடம்பெற்றிருப்பதாகப் புலித்தேவன் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். பிற்பகல் 3.40 மணிக்கு வாகனத்தில் சென்றவர்கள், வாகன விபரம் யாவுமே வெலிக்கந்தை சோதனைச் சாவடியில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஏன் இந்த முரண்பாடு? அது மட்டுமல்ல, ஊழியர்கள் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் நாமல்கம அல்லது பிள்ளையாரடி என்ற இடம் சிறிது தூரத்துக்கப்பால் அமைந்துள்ளது. இப்பகுதியில் வைத்துத்தான் முன்னாள் மட்டு. மாவட்ட அரசாங்க அதிபர் மோனகுருசாமி சுடப்பட்டார். புலிகளின் கௌசல்யன் சுட்டுக் கொல்லப்பட்டார். அண்மையில் புலிகளின் கபிலன் உட்பட பல புலி உறுப்பினர்கள் மீதான தாக்குதலும் இங்கு இடம் பெற்றிருக்கிறது. கருணா தரப்பை துணைப் படையென்று குற்றம் சாட்டும் புலிகள் அவர்களின் ஆயுதங்களைக் களைவதற்கு ஓர் உத்தியாகவே இந்த நாடகத்தை ஆடுகின்றனரென்றும் குற்றம் சாட்டப்படுகிறது. கருணா, புலிகள் இயக்கத்தின் ஓர் அங்கமாகச் செயற்பட்டவர். அவரின் இயக்க உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் அவரின் இயக்க உறுப்பினர்களையும் பல நூற்றுக்கணக்கில் சுட்டுக் கொன்றவர்கள் பிரபா அணிப் புலிகளே. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கருணா தரப்பை மட்டம் தட்டுவதற்கான ஒரு காய்நகர்த்தலே இக் கடத்தல் நாடகமெனக் கூறப்படுவதை மறுக்க முடியுமா? இக் கடத்தல் நாடகத்தைப் பயன்படுத்தி கடத்தப்பட்ட ஊழியர்கள் விடுவிக்கப்படும் வரை பேச்சுக்கு வரமாட்டோமென்று தமிழ்ச்செல்வன் கதையளந்தார். ஆனால் சர்வதேச சமூகத்தின் அழுத்தம் புலிகளைப் பேச்சுக்குச் செல்லுமாறு வலியுறுத்தியிருக்கிறது. பேச்சு வார்த்தைக்குப் போவதற்கிடையில் வேறு என்ன நாடக அரங்கேறுமோ தெரியவில்லை. ■

ந
ர
ன்

## ஊரிலிருந்து....



கோப்பாய் கைதடி வீதியில் உள்ள இராணுவ முகாமில் இரவு வேளைகளில் பெண்களின் அவலக்குரல்கள் கேட்கின்றன. உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கடந்த மாத இறுதியில் குதிரை கஜேந்திரன் பெரிய குண்டொன்றை தூக்கிப் போட்டார். தொட்டதுக்கு எல்லாம் போராட்டம், டயர் எரிப்பு எண்டு நடத்துறவர் அதை ஒண்டும் நடத்தாமல் அல்லது நடத்த முடியாமல் வெறும் அறிக்கையிலேயே கலங்கடிச்சுப் போட்டார்.

'என்ன மாஸ்டர் விஷயம் உண்மையோ?' எண்டு மாஸ்டரிட்டைக் கேட்டன். 'பெண்களின்ட குரல் மட்டுமில்ல அடிச்சு நொறுக்கிற அலறல், அவலம் ஏன் இடையிடையே குழந்தைகளின்ட குழறல் கூட கேட்டுக் கொண்டிருக்குது' எண்டு சொல்லவும். 'என்ன மாஸ்டர் வலு சீரியஸான விஷயத்தை கூலாகச் சொல்லுறியள்' எண்டு கேட்டன்.

'பின்ன என்ன? ஒவ்வொரு நாளும் டி.வி. டெக்கில ஹிந்திப்படம், பார்க்கிறாங்கள். அதுவும் ஆமிக்காரர்கள் என்ன குடும்ப கலையம்ச படமே பாக்கப் போறாங்கள், ஸ்பீக்கர் கனக்ஷன் குடுத்துப் பார்க்கிறாங்கள். சத்தம் கேக்காமல் என்ன செய்யும்? நம்பாட்டி நீங்களும் ஒருக்கா பொழுது படேக்க அதால போய்ப்பாருங்கோ' எண்டார்.

மருண்டவன் (குதிரையின்) கண்களுக்கு (காதுகளுக்கு)?

# வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் சாதகமும் பாதகமும்

அலசுவது
**- மதியூகி -**

**மீண்டுமொரு** யுத்தம் என்றிருந்த நிலை தற்சமயம் முற்றாக இல்லையென்று கூற முடியாதுள்ளது. ஏனெனில் ஜெனீவாவில் பேச்சுவார்த்தைக்கு அரசும் - புலிகளும் தயார் என்று தெரிவித்திருக்கின்ற போதும், திகதியை தீர்மானிக்கின்ற விடயத்தை தேவையற்ற சர்ச்சைக்குள் விழுத்திவிட்டுள்ளனர். இப்போது ஜெனீவா பேச்சு நடக்குமா, நடக்காதா என்ற விடயம் விவாதப் பொருளாக மாறியுள்ளது.

வெலிக்கந்தையில் புலிகளின் சார்பு அமைப்பான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உறுப்பினர்கள் கடத்தப்பட்டதாகக் கூறப்படுவதும், பின்னர் இருவர் விடுவிக்கப்பட்டதும், யாழ்ப்பாணத்தில் மீண்டும் இராணுவத்தினர் மீதும் மாற்று ஜனநாயக சக்திகள் மீதும் தாக்குதல் நடைபெறுவதற்கான தயாரிப்புகள் இடம் பெறுவதும், வவுனியாவில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் சந்திரபாலா கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டதுமான சம்பவங்கள் பழைய குருடி கதவைத் திறவடி என்று ஆரம்பமாகிவிட்டுள்ளது. இதற்கிடையே நாடு பூராகவும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரை உள்ளூராட்சிச் சபைகள் விசேட ஆணையாளரின் கீழேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் நீண்டகாலமாக உள்ளூராட்சிச் சபைகளுக்காக தேர்தலே நடைபெறவில்லை. மேலும் சில சபைகள் கடந்த 2003ஆம் ஆண்டுக்குப் பின்னர் தேர்தல் நடத்தப்படாமல் விசேட ஆணையாளர்களினால் நிர்வகிக்கப்படுகின்றன.

பொதுவாகவே உள்ளூராட்சிச் சபைகளின் செயற்பாடுகளுக்கும் - இவை விசேட ஆணையாளர்களால் நிர்வகிக்கப்படுவதற்கும் இருக்கக் கூடிய வித்தியாசத்தை மக்கள் அவ்வளவாகப் புரிந்து கொள்வதில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் நேரடியாக உள்ளூராட்சிச் சபைகளை நிர்வகித்து பணியாற்றுகின்றபோது, மக்களின் உரிமை அதிகமாக இருக்கும். தேவைகளை உரிமையோடு கேட்கவும், குறைபாடுகளைச் சுட்டிக்காட்டவும் முடியும். அதே போல் உறுப்பினர்களும் பதிலளிக்கக் கூடியவர்களாக இருப்பர். ஆனால் விசேட ஆணையாளர்கள் நிர்வகிக்கின்றபோது ஏற்கனவே அரச இயந்திரமாகக் கூறப்படுவது, மேலும் இயந்திரத்தனமாகி விடுவதோடு செயல்திறன் மந்த கதியை அடைந்துவிடுகின்றது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சிச் சபைகள் இருந்த அடையாளங்களைத் தொலைத்து விட்டிருந்தன. இவற்றுக்கான தேர்தல் நடைபெறாமைக்கு யுத்த நிலைமையே காரணம். இந்த நிலையில் 1998ஆம் ஆண்டு யாழ்ப்பாணம், படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்ததால் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நடைபெற்று யாழ்ப்பாணத்தில் ஒரு மாநகர சபையும் மூன்று நகர சபைகளும், பதின்மூன்று பிரதேச சபைகளும் புத்துயிர் பெற்றதோடு அந்தந்தப் பகுதிகளில் அபிவிருத்தியும் செய்யப்பட்டது. இயல்பு வாழ்க்கை திரும்பியது. ஐந்து வருட ஆட்சி அதிகாரத்தைக் கொண்ட உள்ளூராட்சித் தேர்தல் 2003ஆம் ஆண்டு நிறைவடைந்ததோடு வேட்பு மனுத் தாக்கலும் செய்யப்பட்டது. பின்னர் தேர்தல் நடைபெறாததால் விசேட ஆணையாளரின் அதிகாரத்துக்குக் கீழ் கொண்டுவரப்பட்டது. ஆக ஐந்து ஆண்டுகளாகப் புத்துயிர் பெற்ற உள்ளூராட்சிச் சபைகள் மீண்டும் தேய்வு நிலைக்குத் தள்ளப்பட்டன.

> வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரை இப்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒன்றை நடத்தக்கூடிய சுமுகமான நிலை இல்லை. கடந்த காலத்தில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கவில்லை. வாக்காளர்கள் மீது அழுத்தங்களும், எச்சரிக்கைகளும் பிரயோகிக்கப்பட்டதோடு கள்ள வாக்குகள் மிக அதிகமாகவே இடப்பட்டன. இதற்கு ஆதாரமாக, சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுவினரே வடக்கு - கிழக்கில் மோசமான தேர்தல் மோசடிகள் இடம்பெற்றதாகத் தெரிவித்திருந்திருந்தனர்.

தேர்தல் நடத்தப்படாமைக்குக் காரணமாகப் பாதுகாப்புக் காரணங்கள் இருந்தன. அத்தோடு மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க முடியாத நிலையும் இருந்து வருகிறது. இது தவிரவும், யாழ். மாநகர சபையின் மேயராக இருந்த சரோஜினி தேவி, புலிகளால் கொல்லப்பட்டார். அவரைத்தொடர்ந்து மேயராகப் பதவியேற்ற சிவபாலனும் புலிகளால் கொல்லப்பட்டார். இது தவிர ஈ.பி.டி.பீ.யின் பிரதேச சபை உறுப்பினர்கள் ஜெயராஜ், ஜெகதீஸ், அருள்தாஸ், நாகேந்திரம், திருப்பதி, ரகு ஆகியோரும் ஈ.பீ.ஆர்.எல்.எப்.பின் பிரதேச சபை உறுப்பினரான வல்லிசுந்தரம் ஆகியோர் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஒழுங்காக இயங்கிக் கொண்டிருந்த யாழ்ப்பாணம் உள்ளூராட்சிச் சபைக்கு இவ்வாறாக சாவு மணி அடிக்கப்பட்டது.

வடக்கின் ஏனைய பகுதிகளான கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் 1983க்கு முன்னரே செயலிழந்துபோய் கிடக்கின்றன. இதில் வவுனியாவில் சிங்களப் பிரதேச சபைகளும் இருப்பதால் 1998ஆம் ஆண்டு உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடைபெற்றது. அதுவும் 2003ஆம் ஆண்டு வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டதோடு விசேட ஆணையாளரின் கீழ் கொண்டுவரப்பட்டது.

இதேபோல் கிழக்கில் திருகோணமலையில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் 1994ஆம் ஆண்டு நடைபெற்று 1999ஆம் ஆண்டு வரை ஒழுங்காக நடைபெற்றது. எனினும் உரிய காலத்தில் தேர்தலை நடத்தாமல் மேலும் ஒரு வருடம் அதே நிர்வாகச் செயற்பாடுகள் நீடிக்கப்பட்டன. அதனடிப்படையில் 2000ஆம் ஆண்டு வரை செயலில் இருந்த உள்ளூராட்சிச் சபை பின்னர் விசேட ஆணையாளரின் கீழ் கொண்டு போகப்பட்டது. இதுவும் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டுப் பின்னர் தேர்தல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் நகர சபைகள் இரண்டும், பிரதேச சபைகள் 11உம் தமது செயற்பாடுகளை இழந்து போயுள்ளன. இதேபோல் மட்டக்களப்பில் இரண்டு நகர சபைகளும், 10 பிரதேச சபைகளும் 2003ஆம் ஆண்டுக்குப் பின் தமது செயற்பாட்டை இழந்து விசேட ஆணையாளரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டம் மட்டும் 2003ஆம் ஆண்டும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடத்தப்பட்டதால் இயங்கி வருகிறது. இங்கு தமிழ், முஸ்லிம் பகுதிகளாக ஒரு மாநகர சபையும், ஒரு நகர சபையும், ஐந்து பிரதேச சபையும் இயங்கிவருகின்றன. இதில் தமிழ்ப் பகுதியான ஆலையடிவேம்பு பிரதேச சபைக்குப் போட்டியிட்டு தலைவராகத் தெரிவான ஈ.பி.டி.பீ. உறுப்பினர் ஜெகதீஸ் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவருக்கு அடுத்தபடியாக தலைவராகப் பதவியேற்ற ஈ.பி.டி.பீ. உறுப்பினர் ரவீந்திரன் என்பவரும் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். பிறகு பிரதேச செயலாளர் தவராஜா, பளீல் என்று இன்னும் அரச உத்தியோகத்தர்கள் மீதான படுகொலைகள் தொடர்ந்தன.

இந்த நிலைமையில் எதிர்வரும் மார்ச் மாதம் நாடு பூராகவும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதற்கான வேட்பு மனுக்கள் இம்மாதம் 9ஆம் திகதியிலிருந்து 16ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தேர்தலானது 126 மாநகர சபைகளுக்கும் 18 நகர சபைகளுக்கும் சுமார் 270க்கும் அதிகமான பிரதேச சபைகளுக்குமான தேர்தலாக இருக்குமென தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரை இப்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒன்றை நடத்தக்கூடிய சுமுகமான நிலை இல்லை. கடந்த காலத்தில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கவில்லை. வாக்காளர்கள் மீது அழுத்தங்களும், எச்சரிக்கைகளும் பிரயோகிக்கப்பட்டதோடு கள்ள வாக்குகள் மிக அதிகமாகவே இடப்பட்டன. இதற்கு ஆதாரமாக, சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுவினரே வடக்கு - கிழக்கில் மோசமான தேர்தல் மோசடிகள் இடம்பெற்றதாகத் தெரிவித்திருந்திருந்தனர்.

அடுத்து கடந்த வருடம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலிலும் தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டிருந்தது. இதற்குக் காரணம் புலிகள் வாக்களிப்பை நிராகரிப்பதாகத் தெரிவித்ததோடு, மக்களையும் அச்சுறுத்தி, வாக்களிக்கவிடாமல் தடுத்தமையேயாகும். இந்த நிலையிலேயே தற்போது உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு தேர்தல்கள் மீது அக்கறையில்லை என்பது ஒருபுறமிருக்க, வட-கிழக்கைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்க் கட்சிகள் மத்தியில் தற்போது உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடத்தப்படுவதில் விருப்பமில்லையென்பது தெளிவாகிறது. அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள், தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சி சபை தேர்தல் நடத்துதற்கான சூழல் இல்லையென்று தெரிவித்திருந்தனர். அதே கருத்தையே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் மற்றும் தமிழ் கட்சிகளும் கொண்டிருக்கின்றன. ஆகவே, அநேகமாக வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறாது என்றே நம்பலாம்.

இருந்தாலும் பின்னர் புலிகளுடன் கலந்துரையாடிய தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கருத்துக் கூறும்போது, வடக்கு - கிழக்கில் தேர்தல் நடத்தப்பட்டால் தாம் போட்டியிட தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். இதைப்போல ஏனைய தமிழ்க் கட்சிகளும் கட்சி மட்டத்தில் தேர்தல் ஒன்றுக்குத் தயாராகி வருகின்றனவென்பதை அவதானிக்க முடிகிறது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடி அய்யாத்துரை



**டென்மார்க்கில** ரெண்டெழுத்தாருக்கு வரி வாங்கிற வையில பேர் போனவை ரெண்டு பேர் இருக்கினமுங்கோ. உதயன் எண்டவரும், அன்ரு எண்டவரும். தமிழ் வாசம் வீசிற ஒவ்வொரு கதவிலையும் வரி கிடைக்கும் வரையும் ஓட்டிக் கொண்டிருப்பினமாம். அதிலையும் அன்ரு எண்டவர் இருக்கிறாரெல்லோ அவர் நல்லா ரோலிங் செய்யிறாராம். எப்புடித் தெரியுமோ கப்பமாக் கிடைக்கிற காசை வட்டிக்கும் கொடுப்பாராம். அப்புடி வட்டிக்கு பணம் வாங்கிறவரிட்டையே வரியும் தாங்கோ எண்டும் கேட்பாராம். உவரின்ர உந்த அதி புத்திசாலித்தனத்தை புரிஞ்சு கொள்ளாதவை, நாங்களே. உங்களிட்ட வட்டிக்குப் பணம் வேண்டுறம் உந்த கஷ்ட்டமான நேரத்தில வரியெண்டால் நாங்கள் என்ன செய்யிறது எண்டு கேட்பினமாம். அதுக்கு மிஸ்டர் அன்ரு சொல்வாராம், 'வட்டிக்கு வாங்கினாலும் அது பணம் தானே. மண்ணை மீட்கிறதுக்கு வட்டிக்குப் பணம் வேண்டிக் கொடுக்கிறது தப்பில்லையுங்கோ. சப்போஸ் தமிழீழம் கிடைச்சிட்டுது எண்டால், நான் தார துண்டைக் காட்டி தமிழீழ வைப்பகத்தில போய் வட்டியும் முதலுமா உங்கட பணத்தை வித்ரோ பண்ணுங்கோ எண்டு கதையளந்து கொண்டு திரியிறாராம். அன்ரு தலைமைக்கும் விசுவாசமில்லாமல், சனத்துக்கும் விசுவாசமில்லாமல் ஏதோ தேசியத்தின்ர தயவில புழைப்பு நடத்திறாருங்கோ.

**வவுனியாவைச்** சேர்ந்த கூத்தமைப்பு எம்.பி. முன்னாள் சிகப்புச் சிலுவைக்காரரோடை கார் ஓட்டிக் கொண்டிருந்ததாலையோ என்னவோ, ஊருக்குள்ள பெடியளை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கிறன் எண்டு சொல்லி நல்லா காசு பாக்குறாராம். தான் எம்.பி.யானதாலை கோட்டாவில கொண்டுபோய் இறக்கி விட்டிடுவன் எண்டும் சொல்லுறாராம். அட அவர்தான் ஏதோ பணத்தாசையில உப்பிடிப் புழுகி பணம் சம்பாதிச்சாரே, உண்மையைச் சொல்லித் திருத்துவம் எண்டில்லாமல் அவரின்ர திருமதியும் சேர்ந்து கொண்டு கணவன் வாங்கிற பணத்தை கணக்குப் பாத்து கல்லாவில அடுக்கி வைக்கிறாராம். உப்பிடி தம்பதி சகிதமாச் சேர்ந்து இதுவரைக்கும் பதினேழு லகரமளவில லவ்விக் கிட்டினமாமெண்டு பணம் குடுத்த பெடியள் வீட்டுக்கும் ஒப்பீசுக்குமா நடையா நடக்கினமாம். பெடியள் போட்டிருக்கிற செருப்பு தேஞ்சாலும், எம்.பி.யின்ர மனசு இளகுதில்லையாம். உந்தப் பணம் தலைக்கு ஒரு லகரமெண்டு வாங்கினதுதானாம். லகரங்களை வாங்கினாலும் அவர், என் தாடி வழிக்கக்கூட பணமில்லையெண்டுதான் சொல்லுறவராம். உந்த எம்.பிப் பதவியை வாங்கினது உதுக்குத்தானாக்கும். அவரின்ர காட்டில மழை பெய்யேக்க கி....கி..எண்டு இல்லாம கோர் எண்டுதானுங்னோ பெய்யுதாம். வாங்கடா மாப்பிள்ளை வாங்கு. வாங்கினதில கொஞ்சத்தை வரியா குடுத்திட்டால் போதுமடா எண்டு நினைக்கிறாராம்.

**வெலிகந்தையில** ரி.ஆர்.ஓ. ஆக்களை இனந்தெரியாதவை பிடிச்சுக் கொண்டு போயிட்டினமெண்டும், அவையை விடுவிச்சுப் போட்டு, இனந்தெரியாதவையை சட்டத்துக்கு முன்னாலை கொண்டு வந்து நிறுத்துங்கோ எண்டும் ரெண்டெழுத்தார் சொன்னதோடை நிக்காம, உது ஜெனீவாப் பேச்சையும் பாதிக்கும் எண்டும் சொல்லிச்சினம் வாத்தியார் உதுக்கு என்ன சொல்லுறார் தெரியுமோ. தெரியாதவை பிடிச்ச வையையே விடுவிக்கச் சொல்லினமே உவை தெரிஞ்சே மன்னாரில பிடிச்ச ரெண்டு பொலிசையும் ஏன் விடமாட்டம் எண்டினம். அதுபோக வவுனியாவில வீணைக் கட்சிக்கார உறுப்பினர் ஒருவரை கொலை செய்திச்சினமே உதெல்லாம் ஜெனீவா பேச்சுக்குத் தேவையெண்டு நினைக்கினமோ எண்டு கேக்கிறார். வாத்தியாருக்குத் தெரியாதுங்கோ, உதுதான் இங்க சமாதானம் எண்டதும், சமத்துவம் எண்டதும். ஐயோ ஐயோ....

**பரம்பரை** பரம்பரையா பொலிரிக்ஸ் செய்தவையை விட்டுப்போட்டு, புதுசா கொஞ்சப் பேர் ஆளும் தரப்போடை சேர்ந்து பொலிரிக்ஸ் பண்ணினமெல்லோ. அவையின்ர போக்கு சுமாரா இருந்தாலும் போகப் போக என்ன செய்யப் போகினம் எண்டதை கவனிக்க வேணுமுங்கோ. ஏன் தெரியுமோ, பொலிரிக்ஸ் எண்ட பேரில பழைய கட்சிக்காரர் வெட்டி வச்சிருக்கிற பள்ளத்துக்குள்ள விழுந்திடாமப் போக வேணுமெல்லோ. இப்ப இருக்கிற உஷார் கடைசி வரைக்கும் இருக்கணுமுங்கோ. அதை விட்டுப் போட்டு பெருந்தலையளுக்கு படிப்பிக்கிறம் பார் எண்டு பள்ளம் மேடு தெரியாம நடந்து போட்டு பிறகு முழிக்கக் கூடாதுங்கோ. ஏன் உதைச் சொல்லுறன் எண்டால் பேயோடையெண்டாலும் கூட்டுச்சேர்ந்து மிஸ் பண்ணின பொலிரிக்ஸை கைப்பற்றியே தீருவதெண்டு பெருச்சாலிகளெல்லாம் தருணம் பாத்துக்கொண்டிருக்கினமாமெண்டு கதை கசியுதுங்கோ. எதுக்கும் கவனமா இருங்கோ...

**போன** வாரம் திங்கக்கிழமை பீ.எம்.சி. எச்.சில மாற்றுக் கொள்கை நிலையத்துக்கான அமைப்பு ஒரு கருத்தரங்கு நடத்திச்சுதுங்கோ. அதில சமஷ்டியை வலியுறுத்தித்தானுங்கோ அது நடந்தது. அந்த வைபவத்துக்கு பிரதம அதிதியாக அமெரிக்காவின்ர இலங்கைக்கான தூதுவர் கலந்து கொண்டவர். உந்த வைபவத்திலை, அமைச்சர்மாரும் பேசிச்சினம் நாட்டின்ர சகல பகுதிகளில இருந்தும் ஆயிரத்து ஐநூறுக்கு கூடுதலானவை வந்திருந்திருச்சினம். உந்த கருத்துப் பறிமாற்றத்தின்ர தீர்மானமாக ஒரு முடிவெடுத்திச்சினம். அது என்ன தெரியுமோ. சமஸ்டி தொடர்பான விளக்கத்தை ஒருவர், தான் சந்திக்கிற இன்னும் ரெண்டுபேருக்கு சொல்ல வேணுமாம். நல்ல திட்டந்தானுங்கோ. யுத்தத்தாலதான் தீர்வெண்டு ஆண்டாண்டு காலமாக அழிஞ்சது போதுமுங்கோ. அதிகாரத்தை பகிர்ந்து கொண்டு வாழிறது எண்டதை ஒரு ஆள் இரண்டு பேருக்கு ரெண்டு பேர் நூறுபேருக்கு எண்டு பரப்புரை செய்தால் சமஸ்டி எண்டால் ஏதோ ஒத்துக் கொள்ளாத விஷயமெண்டு நினைக்கிறவைக்கு விளக்கமா இருக்கும் எண்டது சரிதானுங்கோ. உதெல்லாம் ஒரு ஓரமாப் போடுப்போல ஒரு விஷயம் நடந்துச்சுதுங்கோ. அமெரிக்காவின்ர தூதுவர், தான் உரையாற்றிப்போட்டு, அமைச்சர்மாரும், முக்கியமானவையும் உரையாற்றும் வரைக்கும் பொறுமையா இருந்த மனிசன் அடுத்ததா கூத்தமைப்பு எம்.பி. பிரேமமான சந்திரனார் உரையாற்றுவார் எண்டு அறிவிச்சவுடன் சரியா சுரேஷானவர் மேடையில ஏறவும் தூதுவர் எழும்பி வெளியில போயிட்டாருங்கோ. அந்த நேரத்தில பிரேமமானவரின்ர முகம் போன போக்கு எனக்கே ஒருமாதிரியாப் போட்டுதுங்கோ. பாத்தியளோ எங்கட கூத்தமைப்பு எம்.பி.மாரை எந்த அளவில கணக்கில சர்வதேசம் வச்சிருக்கெண்டு. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமெண்டு உதைத்தான் சொல்லுறதாக்கும்.




## வாசகர்களின் கவனத்திற்கு...

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர் களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**

## மண் வாசனை வீசுமா?

**இலங்கையில்** இன்று அநேக தமிழ் பேசும் மக்களினால் அவதானிக்கப்படும் தனியார் தொலைக்காட்சியாக சக்தி ரி.வி. விளங்குகின்றது. இதில் ஒளிபரப்பப்படும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில நிகழ்ச்சிகளைத் தவிர மீதி அனைத்துமே சன் ரி.வி.யின் மறு ஒளிபரப்பாகவே தொடர்ந்தும் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. அதேவேளை சக்தியின் சகோதர தொலைக்காட்சியான சிரச ரி.வி.யினை எடுத்துக் கொண்டால் அது பல்வேறு வெளிநாட்டு அலைவரிசைகளை கொப்பி அடித்தாலும் மண் வாசனை வீசும் நமது நாட்டு தயாரிப்புகளாகவே காணப்படுவது சிறப்பம்சமாகும். ஒரே நிறுவனத்தின் ஒரே கூரையின் கீழ் இயங்கும் சகல வளங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கும் சக்தி ரி.வி.யானது சிரச ரி.வி.யில் செய்ய முடிந்ததை தன்னால் செய்ய முடியாமற் போனது ஏன்? ஒரு தொகுப்பாளினிக்கே பல இலட்சம் செலவு செய்து தமிழ் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் சக்தி ரி.வி. ஏன் அந்தப் பணத்தில் நம் நாட்டுத் தயாரிப்புகள் பலவற்றை மண்வாசனை கமழும் வண்ணம் உருவாக்க தயாரிக்க முடியாது?

*–இசைச்செல்வன், வெள்ளவத்தை.*

## பயன் தரும் டிஸ்கவரி

**ரூபவாஹினி** தேசிய தொலைக்காட்சியில் தற்போது தொடர்ச்சியாக ஒளிபரப்பட்டு வரும் டிஸ்கவரி சனல் ஒளிபரப்பானது அனைவருக்கும், அனைத்துத் தரப்பினருக்கும் மிகவும் பயன்தரும் நிகழ்ச்சியாக உள்ளது. நிலத்தில், நீரில் ஆகாயத்தில் வாழ்வு நடாத்தும் பல்வேறு ஜீவராசிகளின் வாழ்க்கை முறைகளையும், எவ்வித கணனி மாயத்தோற்றத்திற்கும் உட்படுத்தாது காட்டுதல் அறிவுபூர்வமாக அமைவதுடன் சிறுவர் முதல் பெரியோர் வரை அமர்ந்து இரசிக்கக்கூடியதாக உள்ளது. குறிப்பாக மாமிச பட்சிகளான காட்டு மிருகங்களின் வேட்டையானது, எந்த ஒரு திகில் சினிமா படத்திற்கும் குறைவில்லாதபடி ஆச்சரியமாக உள்ளது. இவ் ஒளிபரப்பினை பார்ப்பதற்கு மொழியறிவு தேவையில்லை என்றாலும் விநோதமான விசித்திரமான ஜீவராசிகளின் பெயர்களை தமிழில் உபதலைப்பாக இட்டால் பிரயோசனமாக இருக்கும்.

சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுப்பார்களா?

*–ரஞ்சனி, மவுண்ட்லெவினியா.*

## ‘தெரண’ வளர வாழ்த்துக்கள்

**இலங்கையில்** தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவைகளில் இறுதியாக இணைந்து கொண்டு வந்த வேகத்திலேயே தனக்கென ஒரு தனியிடத்தினை தெரண தொலைக்காட்சி பிடித்துள்ளது. குடும்பப்பாங்கான நிகழ்ச்சிகளையும், அனைத்து தரப்பினரும் அமர்ந்து பார்க்கும் படியாக, எடுத்த எடுப்பிலேயே சொந்த தயாரிப்பாக வழங்கி வருகின்றமை உண்மையிலேயே பாராட்டுக்குரியது. “புதுத்தும்புத்தடி நன்றாகக் கூட்டும் எனும் பழமொழியை பொய்ப்பித்து எதிர்வரும் காலங்களில் தனது நேரத்தையும் பிரதேசத்தையும் விஸ்தரித்து சிறப்பாக வளர்ச்சி பெற தெரணவிற்கு வாழ்த்துக்கள்.

*–முஸ்தபா கிஸ்மித், கிராண்ட்பாஸ்.*

## பிரதான செய்திகள் தரம் தாழக்கூடாது

**வானொலியில்** பிரதான செய்திகளின் நம்பகத்தன்மை எவ்வளவு முக்கியமோ அந்த அள விற்கு அதன் செய்தித் தரமும் சிறப்பாக விளங்கவேண்டும். தனியார் வானொலி ஒன்றின் செய்திகளில். தரமானது அண்மைக்காலத்தில் மிகவும் பின்னடைவைச் சந்தித்துள்ளதை அநேகர் அவதானித்திருக்கலாம். பழம்பெரும் செய்தி ஆசிரியர் இருந்தும் கூட, புதியவர்களின் வருகையினால் இவ்வாறு நிகழ்ந்து விட்டது என சமாதானம் காண முயலக்கூடாது. ஓர் உதாரணம் :- இலங்கையில் மத்திய மலைப் பகுதியில் தேயிலை பயிரிடப் படுகின்றது. தேயிலைச் செடியில் உருவாகும் கொழுந்தினை பறித்து தொழிற்சாலைக் கொண்டு செல்லப்பட்டு தேயிலை தயாரிக்கபபடுகின்றது. அந்த தேயிலை விற்பனை செய்யப்படுவதன் மூலம் வரும் வருமானம் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளமாக வழங்கப் படுகின்றது. இவ்வாறு கடந்த வாரம் பிரதான செய்தி அறிக்கையில் வாசிக்கப் பட்டது. இதுபோல பல உதாரணங்களைக் கூறலாம்.

வானொலி ஒலிபரப்பில் பிரதான செய்தி அறிக்கை என்பது அதன் உயிர்நாடி போன்றது. (பத்திரிகைக்கு ஆசிரியர் தலையங்கம் போல) எனவே கடுமையான பயிற்சி உழைப்பு இத்துடன் புதியவர்களாயின் சரியான மேற்பார்வை இல்லாவிடின் செய்தியானது சக்தி இழந்து போய்விடும்.

*–ஏ.எம்.எச்.நௌஷாட், நிந்தவூர்.*

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத் தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய . எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

**- ஆசிரியர்**

## கனடாவில் குற்றச் செயல்களில் ஈடுபடும் தமிழ் இளைஞர்களுக்கு ஆபத்து

**கனடிய** குடியேற்ற அதிகாரிகள் இலங்கையைச் சேர்ந்த துரைசிங்கம் ஜெயசீலன் என்ற தமிழ் வாலிபரை இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளனர். 17 வருடங்களுக்கு முன்னர் அகதியாக கனடாவிற்கு வந்த இவர் பாரிய குற்றச் செயல்களிலும் வன்செயல்களிலும் ஈடுபட்டதால் இவர் நாடு கடத்தப்பட்டுள்ளார். தமிழ் இளைஞர்களைக் கொண்ட பாதாள உலக குழு ஒன்றினை இவர் வழி நடத்தி வந்தார் என்றும் இந்தக் குழு டொரன்டோவிலிருந்து செயல்பட்டதாகவும் நஷனல் போல்ட் என்ற கனடிய பத்திரிகை தெரிவித்துள்ளது.

சீலப்பு குழு என்ற பாதாளக் கோஷ்டியின் தலைவராக இவர் விளங்கினார். பல்வேறு தெருவோர சண்டித்தன இலங்கைத் தமிழ்க் குழுக்கள் டொரன்டோவில் இயங்கி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். 2001ஆம் ஆண்டில் இருந்தே இக்குழுக்களைச் செயலிழக்கச் செய்வதற்கு டொரன்டோ பொலிஸாரும் கனடிய குடியகல்வு அதிகாரிகளும் செயற்பட்டு வந்தனர். கடந்த வாரம் இவரது மேன் முறையீடு கனடிய நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டதை அடுத்து அன்றைய தினமே விமானத்தில் ஏற்றி இவர் இலங்கைக்கு அனுப்பப்பட்டார். பொதுமக்களுக்கு இவர் ஆபத்தானவர் என்று கனடிய எல்லைச்சேவைகள் முகவராண்மை நிறுவனம் அறிவித்திருந்தது.

ஜெயசீலன் கிரிமினல் குற்றச்செயலில் ஈடுபட்டதற்காக 1997ஆம் ஆண்டு முதன் முதலாக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டார். அன்றில் இருந்தே ஜெயசீலனை நாடு கடத்துவதற்கு தனது எல்லை சேவைகள் முகவராண்மை நிறுவனம் முயன்று வந்துள்ளதாக அதன் பேச்சாளரான அன்னா பாப்பே என்ற பெண்மணி தெரிவித்தார். சீலப்பு துரைசிங்கம் என்று அழைக்கப்படும் இவர் 1989ஆம் ஆண்டு கனடா வந்து சேர்ந்தார். அடுத்த வருடமே இவர் நிரந்தர வதிவிட உரிமை பெற்றுக்கொண்டார். பின்னர் இவர் கொடூரமான தமிழ் குழு ஒன்றில் சேர்ந்து கொண்டதை அடுத்து பலமுறை கைது செய்யப்பட்டார்.

இராணுவப் பயிற்சி பெற்ற இலங்கைத் தமிழ் பயங்கரவாதிகளைக் கொண்ட வல்வெட்டித்தறைக் குழுவில் ஸ்காபரோ கிளைக் குழுவாக இவரது கும்பல் இயங்கின வந்தது. கனடாவில் புலிகளுக்கு இவர்கள் நிதி சேகரித்து வந்தனர்.

1990களில் மற்றொரு போட்டிக் குழுவான ஏ.கே. கண்ணன் கோஷ்டியோடு பல தடவைகள் மோதல்களில் ஈடுபட்டு வந்துள்ளது. இதனால் ஆகக்குறைந்தது 3 பொதுமக்களானது கொல்லப்பட்டுள்ளனர். 1050 திட்டம் என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட கூட்டு விசாரணையை அடுத்து 2001ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அதன் பின்னர், கனடிய குடியேற்ற சட்டத்தினை மீறியமைக்காக பலர் நாடு கடத்தப்பட்டனர்.

ஜெயசீலனை பகிரங்கமாகவே வல்வெட்டித்துறைக் குழுவோடு ......புலிகளோடும் கனடிய பொலிஸார் சம்பந்தப்படுத்தியதால் அவரை நாடு கடத்த வேண்டாம் என்று அவர் சார்பாக ஆஜரான வழக்கறிஞர்கள் வாதிட்டனர்.

அப்படி அவர் நாடு கடத்தப்பட்டால் இலங்கையில் அவர் துன்புறுத்தப்படுவார் என்று சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

சமஷ்டி நீதிமன்ற நீதிபதி ஒருவர் இந்த வாதங்களை ஏற்றுக்கொண்டு அவரை நாடு கடத்தக்கூடாது என்று 2004ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கினார். ஆனால் கடந்த டிசம்பர் மாதம் 8ஆம் திகதி அவர் மக்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு ஜனவரி 23ஆம் திகதி இவரை நாடு கடத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டது. கனடிய குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் எவ்வித தாமதமும்இன்றி அன்றைய தினமே இவரை விமானத்தில் ஏற்றி இலங்கைக்கு அனுப்பி வைத்தனர்.

கனடிய குடிவரவு மற்றும் அகதிகள் சபை மற்றொரு தமிழ் பாதாள உலக குழு அங்கத்தவரான கைலேசன் தனபாலசிங்கம் என்பவரை நாடு கடத்துவதற்கு இம்மாதம் அனுமதி வழங்கியது. ஏற்கனவே நூற்றிற்கு மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் கனடாவில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் இலங்கையில் எவ்வித துன்புறுத்தலுக்கும் உள்ளாகவில்லை என்றும் அச்சபை தெரிவித்துள்ளது.

கடந்த பாராளுமன்ற தேர்தலின் போது புலிகள் இயக்கத்தை கனடாவின் பயங்கரவாத இயக்கப்பட்டியலில் சேர்த்துக் கொள்வது என்று கொன்சர்வேட்டிக் கட்சி உறுதி அளித்திருந்தது. அத்துடன் பயங்கரவாத நடவடிக்கைகளிலும் வன்செயல்களிலும் ஈடுபடும் நாடு கடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டவர்களை திருப்பி அனுப்புவோம் என்றும் கொன்சர்வேட்டிக் கட்சியினர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

*–நன்றி – நஷனல் போஸ்ட், கனடா.*

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 4,300 | ரூ.2,150 | ரூ.1,100 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,900 | ரூ.2,450 | ரூ.1,250 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,800 | ரூ.1,900 | ரூ. 950 |
| உள்ளூர் | ரூ. 1,500 | ரூ.750 | ரூ. 375 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் D.D. Enterprises என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் “Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- (E-mail):– murasu@sltnet.lk





## மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P .K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam ,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 -11 - 2344831
web- www.drpksamy .com

## இன்னொருவர் பார்வையில்

# இரு தரப்பு புலிகளுடனும் அரசு ஒப்பந்தங்கள் செய்ய வேண்டும்

**பேராசிரியர் சுமணசிறி லியனகே என்ற அரசியல் ஆய்வாளர் துணைப் படைகளின் ஆயுதங்களைக் களைவது தொடர்பாக எழுதிய கட்டுரை, கடந்த 2ஆம் திகதி 'டெயிலி மிரர்' ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. பேராதனைப், பல்கலைக்கழகத்தில் அரசியல் பொருளாதாரம் கற்பிக்கும் பேராசிரியர் புதிய கோணத்திலிருந்து நிலைமைகளை ஆராய்கிறார். அக்கட்டுரையிலிருந்து முக்கிய சில பகுதிகளின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.**

**எரிக்** சொல்ஹெய்மின் இலங்கை விஜயத்தினை அடுத்து அரசாங்கமும் புலிகளும் இறுதியில் மீண்டுமொரு முறை சந்தித்துப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளன. 33 மாத இடைவெளிக்குப் பின்னர் பேச்சு மீள ஆரம்பிக்கப்படவிருக்கிறது. பிணக்குகளில் சம்பந்தப்படும் இரு தரப்புகள் பரஸ்பரம் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயாராக இல்லாதபோது, அவர்களுக்கிடையே பேச்சுவார்த்தைகளை ஒழுங்குபடுத்தும் திறமை நோர்வேக்கு இருக்கிறது. பிணக்குகள் ஏற்பட்ட பல்வேறு நிலைமைகளில் இவ்வாறு செய்வதில் அவர்கள் வெற்றி கண்டிருக்கிறார்கள்.

இலங்கை அரசாங்கத்தின் தூதுகோஷ்டி ஒன்றினைச் சந்திப்பதற்கு புலிகள் இயக்கம் இணங்கியிருப்பதோடு, தமது தூதுகோஷ்டியில் அங்கம் வகிப்பவர்களின் பெயர்களையும் வெளியிட்டுள்ளனர். அத்துடன் சொல்ஹெய்ம் புலிகளைச் சந்தித்துப் பேசிய பின்னர் எவ்வித வன்செயல்களிலும் ஈடுபட மாட்டோமென்று புலிகள் இயக்கம் உறுதியளித்துள்ளது. பேச்சுவார்த்தை இடம்பெறும் இடத்தைத் தெரிவு செய்வதில் இரு தரப்புகளுமே நெகிழ்ச்சித் தன்மையைக் காட்டியுள்ளன. இதன் மூலம் ஆரம்பத்தில் கொண்டிருந்த கடினப் போக்கை தளர்த்தியுள்ளன. எனவே இரு தரப்புகளுமே ஜெனீவாவில் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாகச் சொல்ஹெய்மின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டுள்ளன. இரு தரப்பையும் மேசைக்குக் கூட்டி வருவதில் நோர்வே வெற்றிபெற்று விட்டது என்பதற்காக நோர்வே தலையீடு செய்யும் பாணியில் காணப்படும் பலவீனங்களைப் புறந்தள்ளிவிட முடியாது. இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிணக்கைக் கையாள்வதில் நோர்வே மேற்கொண்ட முன்முயற்சியில் காணப்பட்ட சில தவறுகள் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

பேச்சுவார்த்தையின் முக்கிய அம்சம் யுத்த நிறுத்தம் பற்றியதே என்பது வெளிப்படையானது. என்றாலும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை எவ்வாறு வலுப்படுத்துவது என்பது குறித்து இரு தரப்புகளுமே வெவ்வேறான அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளன. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்துவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்குவதில் இரு தரப்புகளுமே வெவ்வேறு பதப் பிரயோகங்களைப் பயன்படுத்துகின்றன. இருந்தபோதிலும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகிறது. கடந்த நான்கு வருடங்களில் பல யுத்த நிறுத்த மீறல்கள் ஏற்பட்டிருக்கின்றன. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு "யுத்த நிறுத்தம் இன்னமும் நின்று பிடிக்கிறதா" என்று அண்மையில் கேள்வி எழுப்பியிருந்தது.


2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு செய்யப்பட்ட 8,064 முறைப்பாடுகளில், 3633 முறைப்பாடுகள் யுத்த நிறுத்த அத்துமீறல் பற்றியதென்று கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. இவற்றில் 3471 அத்துமீறல்களுக்கு புலிகளே பொறுப்பு என்றும் 162 அத்துமீறல்கள் படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து கணிசமாக மாற்றம் பெற்றுள்ளது. 2005ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து நிலைமை மோசமாகியுள்ளது. "யுத்தமுமில்லை சமாதானமுமில்லை" என்ற நிலையிலிருந்து குறைந்தளவு மோதல்கள் ஏற்படும் அளவுக்கு நிலைமை மாற்றம் பெற்றுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதத்திலும் இவ்வருடம் ஜனவரி முதல் வாரத்திலும் ஏற்பட்ட மாற்றங்கள், நாடு இரண்டாவது பரிணாம மாற்றத்தை நோக்கிச் செல்வதைக் காட்டியது. அதாவது குறைந்தளவு வன்செயல்கள் என்ற நிலையில் அதிகரிப்பை எடுத்துக் காட்டியது. சம்பந்தப்பட்ட தரப்புகள் அவசியமான சீர்திருத்தச் செயற்பாடுகளை மேற்கொள்ளத் தவறினால் பெரும் மோதலுக்கு இது வழிவகுக்கலாம்.

அரசியல் படுகொலைகள், போட்டித் தரப்புகள் மீதான தாக்குதல்கள், கற்பழிப்பு, மனித உரிமை மீறல்கள் ஆகியவை மூன்று தரப்புகளால் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது புலிகள் இயக்கம், பாதுகாப்பு படையினர், துணைப் படையினர் (குறிப்பாக கருணா தரப்பினர்) ஆகியவர்களே அத்துமீறல்களில் ஈடுபடுகின்றனர்.

ஜெனீவா பேச்சுவார்த்தைகளின்போது மேலும் நிலைமைகள் சீர்குலைவதைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்டத் தரப்புகள் ஏதாவதொரு வழிவகையைக் காணுவார்களென்றும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு இணங்கி நடக்க சம்மதிப்பார்களென்றும் சமாதானத்தை விரும்பும் மக்கள் எதிர்பார்க்கின்றனர். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் பந்தி 1.8உம் பந்தி 2.1 உம் மிக முக்கியமானவை. தமிழ் துணைப் படைக் குழுக்களின் ஆயுதங்கள், ஆகக் குறைந்தது முப்பது நாட்களுக்குள் இலங்கை அரசாங்கத்தினால் களையப்பட வேண்டுமென்று பந்தி 1.8 கூறுகிறது. இத் துணைப் படைகளில் அங்கம் வகித்த தனிநபர்கள் இலங்கை அரசாங்கத்தின் ஆயதப்படைகளின் ஒழுக்காற்று அதிகார அமைப்பின் கீழ் இணைக்கப்பட வேண்டும். அத்துடன் வடக்குக் கிழக்கு மாதகாணங்களுக்கு வெளியே இவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டுமென்றும் அந்தப் பந்தி கூறுகிறது. மறுபுறத்தில் பந்தி 2.2 வித்தியாசமானதொரு விடயத்தைக் கையாளுகிறது. அதாவது சம்பந்தப்பட்ட தரப்புகள் சர்வதேச சட்டத்திற்கிணங்க குடிமக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். சித்திரவதை, மிரட்டல், ஆட்கடத்தல், பணம் பறித்தல், தொந்தரவு செய்தல் ஆகியவையும் தவிர்க்கப்பட வேண்டுமென்று அதில் கூறப்பட்டுள்ளன.

இந்த இரண்டுமே ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டதால் இந்த இரண்டு விடயங்களையும் கையாள்வதற்கு வழிமுறை ஒன்றினை ஏற்படுத்தலாமென்று நியாயபூர்வமாக யாரும் கூறலாம். இவை பற்றி வெவ்வேறாக ஆராய்வதன் மூலம் சம்பந்தப்பட்ட விடயங்களை அறிந்து கொள்ள முடியும். துணைப் படைகளை நிராயுதபாணிகளாக்குவது பற்றிப் பார்ப்போம். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி 2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதியளவில் துணைப் படைகள் அரசாங்கத்தினால் நிராயுதபாணியாக்கப்பட்டு அரசாங்கத்தின் பந்தோபஸ்துப் படை அமைப்புக்குள் இணைத்துக் கொள்ளப்பட்டு வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கு வெளியே அனுப்பப்பட்டிருக்க வேண்டும். இது மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்பாடுகள் குறித்து புலிகள் கேள்வியெழுப்பவில்லை. எனினும் கருணா தரப்பு மற்றும் முஸ்லிம்களின் சிறிய ஆயுதக் குழுக்கள் (இன்னமும் வலுவாக ஸ்தாபிக்கப்படவில்லை) ஆகிய துணைப் படைகள் புதிதாகத் தோற்றம் பெற்றதையடுத்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்ற விவகாரம் மீண்டும் மேலெழுந்தது. புலி இயக்கத்தின் பின்னணியோடு வடக்கில் பொங்கு தமிழ் மக்கள் படையும் கிழக்கில் மறவர் படையும் புதிதாக இயங்குவதாக தகவல்கள் கூறுகின்றன.



**புலிகள் இயக்கத்திலிருந்து பிரபாகரனோடு ஏற்பட்ட முரண்பாடு காரணமாக பிரிந்து சென்றவரே கருணா அம்மான். இப் பிரச்சினையை உட்கட்சி விவகாரமென்று அன்று கூறிய புலிகள், இன்று கருணா அணியை துணைப் படையென்று அழைப்பது அர்த்தமற்றது. கருணா தரப்புப் புலிகள் இராணுவத்தோடு சேர்ந்து செயற்படவில்லை என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழு தெரிவித்திருக்கிறது.**

புதிதாகத் தோன்றுகின்ற ஆயுதக் குழுக்களை எப்படி நிராயுதபாணியாக்குவதென்று வெறுமனே கவனம் செலுத்தவதை விடுத்து, இந்தக் குழுக்கள் எந்தச் சூழ்நிலையின் கீழ் உருவாகின? ஏன் உருவாகின? என்பதை இருதரப்பும் ஆராய வேண்டும். உதாரணத்திற்குக் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக புலிகளின் கருணா தரப்பு கொலைகளில் ஈடுபட உந்தியது என்ன? என்பது கண்டறியப்படவேண்டும். புலிகளால் கிழக்கிலிருந்து பிரத்தியேகமான பிரதிநிதித்துவத்தையும் முஸ்லிம் சமூகங்களின் பிரதிநிதித்துவத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாமல் போனது ஏன்? புதிய குழுக்கள் பாதுகாப்புக்காக ஆயுதம் ஏந்துவதற்குத் தூண்டிய சக்திகள் என்ன?

இலங்கை அரசாங்கத்தின் பந்தோபஸ்து படைகளும் புலிகளும் துணைப்படை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனவா? கிழக்கிலுள்ள மனித உரிமை அமைப்புகள் இலங்கை அரசாங்கம் துணைப் படைகளுக்கு உதவி வருவதாக கடந்த சில மாதங்களாகக் குற்றம்சாட்டி வருகின்றன. இந்த கேள்விகளெல்லாம் கஷ்டமானவைதான். என்றாலும் கேட்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. தற்பாதுகாப்புக்காகத் தவிர புலிகள் இயக்கம் ஆயுதங்களைப் பயன்படுத்துவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். தமது அரசியல் எதிரிகளுக்கும் முஸ்லிம்களுக்கும் உடல் ரீதியாக பாதிப்புகள் ஏற்படுத்துவதைப் புலிகள் நிறுத்திக் கொள்ள வேண்டும். புலிகள் இயக்கம் தம்மை ஏகப்பிரதிநிதிகள் என்று அழைத்துக் கொள்வது குறித்து ஆகக் குறைந்தது அரசியல் பரப்பிலாவது புலிகள் மீளச் சிந்திக்க வேண்டும். மேலும் இலங்கை அரசாங்கம் துணைப் படைக் குழுக்களுக்கு ஆதரவளிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும். துணைப்படையைச் சேர்ந்த சிலர் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகும்பொழுது இலங்கை அரசு அவர்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும். இராணுவம், அதிரடிப்படை, பொலிஸ் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தப்படும் பொழுது பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதை இந்தப் படைகள் நிறுத்திக் கொள்ள வேண்டும். அண்மைய சில மாதங்களாக வடக்குக், கிழக்கிலும், தெற்கிலும் தமிழர்கள் மீதான தொந்தரவுகள் அதிகரித்துள்ளன. கொழும்பில் கடந்த சில மாதங்களாக தமிழர்கள் சுற்றிவளைக்கப்பட்டமை அவர்கள் தொடர்ச்சியாக இலங்கை அரசின் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர் என்ற உணர்வை அவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் உள்ளடக்கிய வட்டமேசை பேச்சுவார்த்தைகளை நடத்துவது ஒரு வழியாகும். எனினும் புலிகள் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஏனெனில் இலங்கை வாழ் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் தாங்களே என்று புலிகள் கூறிக் கொள்வதால் கருணா தரப்புடன் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வரமாட்டார்கள்.

கருணா விவகாரம் புலிகளின் உட் பிரச்சினை என்பதை சில பிணக்குகளைத் தீர்க்கும் நிபுணர்கள் நிராகரிக்கின்றனர். எனவே அதனைக் கவனத்திற்கெடுக்கத் தேவையில்லை என்று சிலர் கூறுகின்றனர். எனவே இரண்டாவது மாற்று வழிகள் குறித்து சம்பந்தப்பட்டத் தரப்புகள் யோசிக்க வேண்டும். இதனால் இலங்கை அரசாங்கம் ஒரே நேரத்தில் இரண்டு தரப்புகளுடன் ஒப்பந்தங்களுக்கு வருகின்ற உத்தியொன்றினைக் கையாளக்கூடிய தேவை அவசியமாகிறது. அதாவது ஒன்று இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையிலானது. மற்றது இலங்கை அரசுக்கும் துணைப் படைகளுக்குமிடையிலானது. குறிப்பாக கருணா தரப்புடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு பரஸ்பரம் புரிந்துணர்வு ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 1.8 பந்தி அர்த்தமுள்ளதாகயிருக்கும். உண்மையில் இந்த விவகாரம் அடிப்படையில் மனித உரிமைகளுடன் சம்பந்தப்பட்டதென்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

*–நன்றி :- "டெயிலி மிரர்"*


# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**இந்த** நாடகத்தை அந்நாளைய புகழ் வாய்ந்த இயக்குநர் திரு.பீம்சிங் அவர்கள் படமாக்க விரும்பி என்னோடு தொடர்பு கொண்டார்.

சிவாஜி அவர்களின் சகோதரர் அமரர் திரு. வி.சி.சண்முகம், திரு.என்.எஸ். மணியன் இயக்கத்தில் படமாக்க விரும்பி, தன் வீட்டிற்கு என்னை அழைத்துப் பேசினார்.

ஆனால்,



இவர்களுக்கெல்லாம் முன்னால், இயக்குநர் திரு.ரா.சங்கரனும், தயாரிப்பாளர் திரு.கணேசயரும் - நாடக அரங்கேற்றத்திற்கு முன்னதாகவே, ஒரு சிறு தொகையை என் கையில் திணித்து, நாடகத்தை படமாக்கும் உரிமையைத் தங்களுக்குத் தர வேண்டுமென்று கோரியிருந்தனர்.

நாடக அரங்கேற்றம். அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கவில்லை. எனவே படமாக்கும் எண்ணத்தை அவர்களாகவே கை விட்டனர்.

பத்து நாடகங்கக்குப் பிறகு தான் 'கிருஷ்ண விஜயம்' பிரும்மாண்டமான வெற்றி நாடகமாக உருப்பெற்றது. திரு. எவி.எம். செட்டியார், திரு. கண்ணதாசன் போன்றவர்களெல்லாம், தாங்களாகவே வந்து நாடகத்தைப் பார்க்கத் தொடங்கினார்கள்.

இந்த அளவு இந்த நாடகத்தை நாடு பேசுமளவிற்கு நிலை நிறுத்தியது, கலாகேந்திரா கிருஷ்ணனின் இடையறா உழைப்புதான்.

தேங்காய் சீனிவாசன் மிகச் சிறந்த குணச்சித்திர நடிகராக இந்த நாடகத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டார். சபாக்கள் போட்டி போட்டுக் கொண்டு தேதிகள் கேட்டன. ஒவ்வொரு நாடகத்தின் போதும் அரங்கம் நிரம்பி வழிந்தது.

என்னுடைய உரையாடல்களை நான் சொல்லிக் கொடுத்த ஏற்ற இறக்கங்களோடு நடிகர்களைப் பேச வைத்தவர் கிருஷ்ணன். இதன் காரணமாகவே பின்னாளில் என் எழுத்துக்கு நான் அவரை உரைக்கல்லாகக் கொண்டேன்.

கிருஷ்ணன் ஓர் அற்புதமான ரசிகர். என் உரையாடல்களின் சிறப்பை தலைமேல் சுமந்து கொண்டு ஒருவர் பாக்கிவிடாமல் ஊர் முழுதும் சுற்றிச் சுற்றிச் சொல்லி வருவார்.

பணம் படைத்தவர்களும், பராரிகளும், பண்டிதர்களும், பாமரர்களும் இந்த நாடகத்தின் உரையாடல்களில் தம்மை இழந்தனர்.

'கிருஷ்ண விஜயம்' நாடகத்தை எழுத இறைவன் என்னைப் பணித்தது. குறித்து, இன்றளவும் நான் பெருமையோடு நினைத்துப் பார்க்கிறேன்.

வாழ்க்கையில் நிலையாமையை சிரிக்கச் சிரிக்கச் சொல்லி சிந்திக்க வைத்த வகையில் இந்த நாடகம் ஒரு சாதனை என்பதை நான் தன்னடக்கத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

கடவுள் இந்த நாடகத்தில் நேரே வருகிறார். மனிதனின் அத்துணை சந்தேகங்களுக்கும் சலிக்காமல் பதில் சொல்கிறார்.

இறுதியில் 'தன்னையறிந்தவனே; எனனையறிந்தவன்' என்று சொல்லி அறிவு வெளிச்சம் கொளுத்தி, அப்பிக் கிடக்கும் அறியாமை இருட்டை அகற்றுகிறார்.

துணுக்குத் தோரணங்கள் கோலோச்சிக் கொண்டிருந்த நாடக மேடைகளில், இத்தகு, தத்துவக் கருத்துக்கள் தகத்தகாயமாகப் பிரகாசித்து வெகுஜன ஆதரவைப் பெற்றன என்றால், என் நண்பர் கிருஷ்ணனின் விடாமுயற்சியே காரணம் என்பேன்.

இந்த நாடகத்தை நாள் தவறாமல் பார்த்துப் பரவசப்பட்டு வந்த சேலம் நடராஜன் என்னும் ரசிகர் ஒருவரே, பல லட்சங்களைக் கொட்டி இதைப் படமாக்க முன் வந்தார்.

(தொடரும்.......)




---


## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....

**இவற்றின்** தாக்கம் உளவு பார்த்தலிலும் பெரிய அளவில் இருக்கவே செய்தது. அதற்கு முன்பெல்லாம் உளவாளிகள் எடுபிடிகளாக நுழைந்து ஒட்டுக் கேட்டு தகவல் கொடுப்பது வழக்கமாக இருந்தது. அதெல்லாம் இப்போது பழங் கதையாகி விட்டது. ரேடியோக்கள், எலட்ரானிக் சாதனங்கள் இந்த வேலைகளை வெகுத் திறமையாகச் செய்கின்றன. நவீன உளவுத் துறையில் இரண்டு விஷயங்கள் அதிக முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. கிடைக்கின்ற செய்திகளைப் பகுத்துப் பார்த்து விமர்சித்து அதற்குப் பின்னேயுள்ள ஆதாரத் தகவல்களை அறிவது ஒன்று. நுட்பமான சாதனங்களை தகவல் அறிவதற்கு எவ்வாறு கெட்டிக்காரத்தனமாகப் பயன்படுத்துவது என்பது மற்றொன்று.

முதல் வேலையை Analyst செய்கிறார்; இரண்டாவது வேலையை Technician செய்கிறார்.

ஒருவர் Analyst ஆக இருக்க வேண்டுமானால் படித்தவராகவும் படித்த விஷயங்ககளை எளிதில் புரிந்து கொள்ளுகின்றவராகவும், மொழிகளில் தேர்ச்சி பெற்றவராகவும், மனோதத்துவத்தை உணர்ந்தவராகவும் இருப்பது அவசியமாகிறது. இப்படிப்பட்டவர்களே உளவுத்துறைக்கு தகுதியானவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

Technician களாக வேலை பார்க்கின்றவர்கள் அந்தந்த துறைக்கென்று விசேஷமான பயிற்சி பெற்றவர்களாக இருப்பது




அவசியமாகிறது.

மொழி வல்லுனர்கள் பல்வேறு மொழிகளில் வெளியாகும் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் பார்த்து அதில் கிடைக்கின்ற தகவல்களை பார்த்து ஒரு நாட்டினுடைய சாதனங்களையும் பலத்தையும் பலவீனத்தையும் துல்லியமாகக் கணித்து வீடுகிறார்கள்.

### தேர்வு செய்யும் முறை

தகுதியுள்ள உளவாளிகளை தேர்ந்தெடுத்த பிறகு உளவு நிறுவனங்கள் அவர்களுக்குத் தீவிரமான பயிற்சிகளை அளிக்கிறது. சகிப்புத் தன்மை பரிசோதனைகள் (endurance tester ) அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. சில சமயங்களில் அவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு மன உறுதி தளராத நிலையில் இருக்கிறார்களா எனப் பரிசோதிப்பதும் உண்டு. சரித்திரம், இலக்கியம், பூகோளம் ஆகியவற்றில் பயிற்சிகளையும் அவர்கள் பெறுகிறார்கள்.

ஒரு சமயம் அமெரிக்காவிலுள்ள ரஷ்யத் தூதரகத்தில் வேலை பார்த்த அதிகாரி ஒருவர் உளவு வேலைகளில் ஈடுபட்டதாகச் சொல்லி அவரை ரஷ்யா திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டுமென அமெரிக்கா நிபந்தனை விதித்து அவரை வெளியேற்றியது. அமெரிக்க ராணுவம் வெளியிட்ட புத்தகங்களையும் குறிப்புக்களையும் அவர் தேடிப் பெற்றார். என்பதுதான் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு. காசு கொடுத்தால் எந்தப் புத்தகக் கடையிலும் அவை கிடைக்கும்.

ரஷ்ய அதிகாரி புத்தகக் கடைகளில் விலைகொடுத்து அவற்றை வாங்கியிருந்தால் இந்தக் குற்றச்சாட்டை அவர் மீது சுமத்த முடியாது. ஆனால் அமெரிக்கப் பத்திரிகையாளர் ஒருவரைப் பயன்படுத்தி இவற்றை அவர் சேகரித்ததுதான் அவர் செய்த தவறு. உள்ளபடியே பார்த்தால் அந்த ரஷ்ய அதிகாரி செய்ததும் அமெரிக்க அரசாங்கம் அவர் மீது நடவடிக்கை எடுத்ததும் தேவையற்ற விஷயங்களே.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---

ஒரு கொடியில் பூத்து வந்த ஜாதி மல்லி - இப்போ ஒதுங்கி நின்னு தவிக்கிறதே வீதி மல்லியாய்... இறைவா உன் படைப்பினிலே ஏன் இந்த சோதனையோ? உன் ஓய்வு நேர விளையாட்டில் உதித்து வந்த யோசனையோ?"

- லேசான கரகரப்பு இருந்தாலும், மனசைக் கவ்வுகிற குரலில் பாடுகிற ரேவதியின் சிறகடிக்கும் விழிகளில் தெரிவது பெரும் சோகம்.

"என்னை மாதிரியான அரவாணிகளைப் பற்றி யாரோ எழுதிய கவிதை இது.

அம்மாவும் சேர்ந்து திட்டும். 'இங்க இருந்தா ஒரு நாள் இவங்களே நம்மை அடிச்சுக் கொன்னுடுவாங்க' என்ற பயத்தில் ஓட ஆரம்பித்தேன். வீடு, வீதி, தேசம் எல்லா இடங்களிலும் மனிதர்கள் ஒரே மாதிரி தான் இருக்கி றார்கள். நானும் ஓடிக் கொண்டே இருக்கிறேன். நின்று இளைப்பாற நிழலில்லாத ஓட்டம் என்னுடையது; என்னைப் போன்ற ஆயிரமாயிரம் அரவாணிகளுடையது!' "ஆணாகப் பிறந்து, பெண்ணாக உணர்ந்து. அரவாணியாக விதியின் விளையாட்டில் சிக்கி, தீராத வலியையும் வேதனையையும்

# நாங்கள் நசுக்கப்படுகிறோம் நண்பர்களே!

இப்போ என் கதை சொல்லட்டுமோ?

நான் ஒரு தமிழன், தமிழச்சி, தமிழ்ப் பிறப்பு.

இதே தமிழ் நாட்டில் ஒரு கிராமத்தில்தான் நான் பிறந்தேன். எனக்கு ஒரு அக்கா. மூன்று அண்ணன்கள். நான் கடைக்குட்டி என்பதால், ரொம்பச் செல்லம் அதிகாலைகளில் அக்கா கோலம் போடும் போது பக்கத்தில் போய் உட்காருவேன். அக்காவின் மனசுக்குள் இருக்கிற அழகான கோலம் வரி வரியாக நெளி நெளியாக எப்படி வாசலில் உருவெடுக்கிறது என்பதை ஆசை ஆசையாகப் பார்ப்பேன்.

விதைவிதையாய் அக்கா புள்ளி வைத்து, அதையே அழகான மலராக, மயிலாக எப்படியெல்லாம் மாற்றுகிறாள் எனப் பார்ப்பதில் ஒரு ஆனந்தம். அப்புறம் அக்கா எழுந்திருக்கும் முன்பே நானே கோலங்கள் வரைய ஆரம்பித்தேன் 'அண்ணாத்துரை எவ்ளோ அழகா கோலம் போடறான்' என எல்லோரும் வியப்பதில் என் மனசு பூக்கும். சமையலுக்கு அம்மாவுடன் பக்கத்தில் போய் நிற்பேன். பாத்திரங்கள் கழுவித் தருவேன். சமையல் அறையின் வாசனை என்னை மயக்க, அம்மபவை நகர்த்திவிட்டு, ரசனையுடன் ஒரு நாள் நானே சமைக்க ஆரம்பித்தேன்.

ஒரு பெண்ணுக்கு இன்னின்ன வேலைகள் எனச் சமூகம் என்னென்ன தீர்மானித்ததோ, அது அத்தனையையும் பழகினேன். பிறப்பால் ஆண் பிள்ளையானாலும், எனக்குள் நான் பெண்ணாக மாறிக் கொண்டு இருந்தேன். 'என்ன இது, பொட்டச்சிகள் மாதிரி திரியுறான் அண்ணாத்தொர பய' எனக் கேலி பேச ஆரம்பித்தனர் எல்லோரும். அப்படிச் சொல்லச் சொல்ல, என் ஆனந்தம் அதிகமானது.

ஸ்கூலுக்குச் செல்லும்போது, பெண் பிள்ளைகள் மாதிரி நோட்டுப் புத்தகங்களை என் மார்புடன் அணைத்துக்கொண்டு போவேன். கேலிப் பேச்சுக்கள், நக்கல் சிரிப்புகள், விகாரமான பார்வைகள், வக்கிரமான சீண்டல்கள் எனக் கொஞ்சங் கொஞ்சமாக கூனிக் குறுக ஆரம்பித்திருந்தேன். வகுப்பில் ஆண்கள் பக்கம் அமர்ந்திருப்பேன். மனசு முழுக்க பெண் பிள்ளைகள் பக்கம்தான் இருக்கும். என் சந்தோஷங்களே, துக்கமாக மாறத் துவங்கியபோது. 'ஆண்டவா! என்னை மட்டும் ஏன் இப்படிச் படைச்சே?' என இரவெல்லாம் குமுறிக் குமுறி அழுவேன்.

'வைதேகி காத்திருந்தாள்' படத்தில் 'அழகு மலராட, அபிநயங்கள் கூட, சிலம்பொலியும் குலுங்குவதைக் கேள்' பாட்டுக்கு ரேவதி ஆடுவாரே, அந்தப் பாட்டுக்கு என்னை நான் ரேவதி போலவே வேஷங் கட்டி, ஸ்கூல் நிகழ்ச்சியில் ஆடினேன். 'எல்லோரும் பாருங்கமா, நான் இனி பொண்ணு!' என இந்த உலகத்துக்குச் சொல்லிட்டேன் என்று நினைத்தேன். அந்த நிகழ்ச்சி பரபரப்பாகிவிட, பையன்கள், என் கன்னத்தைக் கிள்ளுவார்கள். அதுவரை அண்ணாத்துரையாக இருந்த நான் ரேவதி குட்டியானேன். நான் ஒரு பெண்ணாகவே மாறியது அப்போதுதான்!

என்னைப் போலவே சக ஜீவனான அருணாவுக்கு நடந்த கொடுமை எனக்கு நினைவிருக்கிறது. ஒரு நாள் வேதியியல் வகுப்பு. உலோகம் - அலோகம் பற்றின பாடம் 'உலோகம்னா இரும்பு போல கனமா இருக்கம். அலோகம்னா இரும்பு மாதிரி இருக்கும்; ஆனா, கனம் இருக்காது அது ஒழுங்கற்ற உருவம் அதுக்கு எடுத்துக் காட்டு இதோ இவன் தான் என்று அருணாவைக் கைகாட்டிய ஆசிரியர், 'பார்க்க ஆம்பளைமாதிரி இருக்கான். ஆனா பேச்சு நடவடிக்கை எல்லாமே பொம்பளை மாதிரி இருக்கு பாருங்க, இதுதான் அலோகம்' எனக் கிண்டலாகக் சொல்ல கிளாஸ் ரூமே சிரித்தது. என் தோழி அருணா நொறுங்கிப் போனாள்.

நான் பத்தாவது படிக்கும்போது, எனக்கும் அப்படி ஒன்று நடந்தது. கணக்கு டீச்சர் என்னை மட்டும் கேள்வி மேல் கேள்வி கேட்பார். 'ஏண்டா.... பொட்டை மாதிரி நிக்கிற, முதல்ல ஆம்பளை மாதிரி நிக்கப் பழகுடா' எனச் சிரித்துக்கொண்டே அடிப்பார். என் உடம்பிலும் மனசிலும் அடிகள் விழ விழ, வகுப்பறையே சிரிக்கும். நான் தப்பாகப் பதில் சொன்னதற்கு விழும் அடிகள் அல்ல அவை; நான் பொட்டை மாதரி நிக்கிறேன் என்பதற்காக விழுகிற அடிகள்.

வீடாவது ஆறுதலாக இருக்கும் என்பதும் போச்சு! கிரிக்கெட் மட்டையால் அண்ணன் அடிப்பான்.

சுமந்து அலைகிறார் ரேவதி. அரவாணிகளின் வலியான வாழ்க்கையை வாய்மொழிக் கதைகளாகக் கேட்டு 'உணர்வும் உருவமும்' என்ற நூலை எழுதியிருக்கிறார்.

ரேவதிக்கு இப்போது பல அடையாளங்கள்



உண்டு. 'தூக்கம்' (sleep) என்ற அரவாணிகள் பற்றிய படத்தில் நடித்திருக்கிறார். பாலின அடையாளத்தை பெண்ணாக சட்டபூர்வமாக நிரூபித்து, பாஸ்போர்ட் பெற்றிருக்கிறார். இப்போது ரேவதி ஒரு போராளி.

என் பயங்கள் அத்தனையையும் தொலைத்து விட்டேன். ஊரிலிருந்து ஓடிப்போய் டெல்லியில் இறங்கியபோது நான் புடவையில் இருந்தேன். என்னை மாதிரி அரவாணிகளைக் கண்டு அவர்களுடன் இணைந்தேன். பொதுவாக, ஓடி வருபவர்களை ஆதரவாக அணைத்துக்கொள்வது அரவாணிகளின் தர்மம். 'அலி, பொட்ட, ஒம்போது' என எங்களைக் கேவலமாக அழைத்த பெயர்களெல்லாம் போய் அழகாக 'இஜிடா' என்று அழைத்தார்கள். டெல்லியில் பதாய் என்றொரு சம்பிரதாயம் உண்டு. குழந்தை பிறக்கிற வீடுகளுக்குப் போய் ஆடிப் பாடி ஆசீர்வதித்து வருவதுதான் பதாய். அரவாணி ஸ்தானத்திலேயே மிக உயர்ந்ததும் உன்னதமானதும் பதாய். ஆனால் பதாய் பண்ண நான் போக முடியாது. காலங்காலமாக அந்தத் தொழிலில் ஈடுபடுபவர்கள், என்னைத் தங்களின் மகளாகத் தத்தெடுத்தால்தான், அந்த மரியாதை கிடைக்கும். அதனால், நான் வீதிவீதியாக, கடை கடையாக கை கொட்டிப் பாடும் தொழிலுக்குப் போனேன். அப்படிச் செல்கிறவர்களின் கடைசிப் புகலிடம் பாலியல் விடுதிகள்.

நானும் பாலியல் தொழிலாளியானேன். இரண்டு வருடம் அதில் கிடந்தேன். ஒருவன் காசு தந்தால், நான்கு ரௌடிகள் இலவசமாக வருவார்கள். வார்த்தைகளில் விவரிக்க முடியாத வக்கிரங்கள். பாலியல் தொழிலில் மிக மோசமான சுரண்டல் இது. 'நீ கூலி கொடு, என் உடம்பைத் தருகிறேன்' என்கிற பாலியல் தொழிலின் தர்மத்திலும் அரவாணிகளுக்கு இடமில்லை.

ஒவ்வொரு இரவும், விதவிதமான துன்பங்களில் சிக்கும்போது, ஸ்கூலில் என்னைப் 'பொட்டை' என அடித்த கணக்கு டீச்சர் நினைவுக்கு வருவார். அருணாவை 'அலோகம்' எனச் சொன்ன கெமிஸ்ட்ரி வாத்தியார் நினைவுக்கு வருவார். அவர்களைக் கூட்டி வந்து, எங்களின் பாலியல் கூடாரத்தைக் காட்ட வேண்டும் என நெஞ்சு துடிக்கும். அங்கே இருக்கிற ஒவ்வொரு அரவாணியின் கதையையும் அவர்கள் கேட்க வேண்டும். வாழ்க்கை எப்படியெல்லாம் எங்களைத் துரத்துகிறது பாருங்கள் என்று காட்ட வேண்டும். 'எங்களை ஏன் உலகத்தில் இருந்து துரத்தினீர்கள்? ஒரு வேளை உணவுக்கு இப்போது என்னவெல்லாம் செய்கிறோம் பாருங்கள்?' எனக் கதற வேண்டும் என நினைப்பேன்.

(தொடர்ச்சி 22 ஆம் பக்கம் பார்க்க)

# இரத்தம் உறைய வைக்கும் ஆட்டோ சங்கரின் கொலைகள்

## அதிர்வு 02

### 6ஆவது கொலை

சங்கரின் 4ஆவது மனைவியான பெங்களூர் லலிதாவை காணவில்லை. பொலிஸுக்குப் பயந்து அவள் ஓடி இருக்கலாம் என்று கருதப்பட்டது.

இந்த லலிதாவும் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாக மோகன் (ஆட்டோ சங்கர் தம்பி) பொலிஸாரிடம் தெரிவித்தான். இதனை அடுத்து திருவான்மியூர் பெரியார் நகரில் அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள ஒரு குடிசை வீட்டிற்குச் சென்று தோண்டினார்கள்.

சமையல் கூடத்தில் இருந்த அடுப்பை அகற்றியதும் சிமெண்டு தரை இருந்தது. அதை தோண்டியபோது நீண்ட வரிசையில் செங்கற்கள் அடுக்கிவைக்கப்பட்டு சிமெண்டு பூசப்பட்டு இருந்தது. அந்த செங்கற்களை பொலிஸார் அகற்றினார்கள். அதற்குக் கீழே மேலும் தரையைத் தோண்டியபோது உள்ளே எலும்புக் கூடு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

எலும்புக்கூட்டின் மீது எந்தவித துணியும் இல்லை. நிர்வாணமாக இருந்தது. எலும்புக்கூட்டை பொலிஸார் வெளியே எடுத்தனர்.

லலிதாவைக் கொலை செய்து நிர்வாணமாகப் புதைத்துள்ளனர் என்று தெரியவந்தது. அது பெண்ணின் உடல்தான் என்று டாக்டர்கள் உறுதி செய்தனர்.

இதனால் ஆட்டோ சங்கர் செய்த கொலை பட்டியலில் பலியானோர் எண்ணிக்கை 6ஆக உயர்ந்தது.

**கொலை செய்யப்பட்டவர்கள் விபரம் :-**

1.பெங்களூர் அழகி லலிதா (வயது 22.)
2. சுடலை (வயது 28). ஆட்டோ டிரைவர், தூத்துக்குடி மாவட்டம், பரமன்குறிச்சியைச் சேர்ந்தவன்.
3. திருவான்மியூர் ரவி. ஆட்டோ டிரைவர் (வயது 27).
4. சம்பத் மந்தைவெளியைச் சேர்ந்த டெய்லர் (வயது 30).
5. மோகன், பொதுப்பணித்துறை ஊழியர் (வயது 29)
6. கோவிந்தராஜ் (வயது 28).

கைது செய்யப்பட்ட ஆட்டோ சங்கர், மோகன் (சங்கர் தம்பி), எல்டின் என்கிற ஆல்பர்ட் (மைத்துனர்) கூட்டாளிகள் சிவாஜி, ஜெயவேலு, செல்வராஜ், தாமன் என்கிற ராஜாராமன், ரவி, பழனி, பரமசிவன் ஆகிய 10 பேரும் சென்னை மத்திய சிறையில் அடைக்கப் பட்டார்கள்.

ஆட்டோ சங்கரின் கூட்டாளிகளில் ஒருவரான பாபு என்கிற தேவேந்திரபாபு (வயது 34) அரசு தரப்பு சாட்சியாக (அப்ரூவர்) மாறிவிட்டார். இவர் கட்டிட காண்டிராக்டர் ஆவார்.

இந்த வழக்கு முக்கியமாக கருதப்பட்டதால் மாநில இரகசிய குற்றப்புலனாய்வுப் பொலிஸிடம் ஒப்படைக்கப்பட்டது. இன்ஸ்பெக்டர் சவுக்கத் அலி, விசாரணையை மேற்கொண்டார்.

ஆட்டோ சங்கர் தனது தொழிலுக்குப் போட்டியாக இருந்தவர்களையும், தனக்கு வேண்டாதவர்களையும் கொலை செய்தது எப்படி என்பது பற்றி பொலிஸாரிடம் வாக்குமூலம் கொடுத்தான்.

**சங்கரின் வாக்குமூலம் வருமாறு :-**

### படிப்புக்கு முற்றுப்புள்ளி

எனது பெயர் கவுரிசங்கர் என்ற சங்கர். நான் இளமையில் பெற்றோர்களுடன் கேரளாவில் இருந்து சென்னைக்கு வந்தேன். என் தந்தை சென்னையில் டீக்கடை நடத்தினார். என்னை கல்லூரியில் பி.யு.சி. வரை படிக்க வைத்தனர். அதன் பிறகு எனக்கு படிப்பு வரவில்லை. இதனால் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தேன்.



ஆட்டோ சங்கர் கைதான போது

படித்துக்கொண்டிருந்தபோது ஆட்டோ டிரைவர்கள் பலர் எனக்கு நண்பர்கள். அவர்கள்தான் எனக்கு ஆட்டோ ஓட்டுவதற்குக் கற்றுத்தந்தனர். அதன் பிறகு நான் தனியாக ஒரு வருடம் ஆட்டோ வாடகைக்கு வாங்கி ஓட்டி வந்தேன். ஒரு நாளைக்கு சாப்பாடு போக எனக்கு 15 ரூபாய் கிடைக்கும்.

திருவான்மியூரில் இருந்து கோவளத்துக்கு வாடிக்கையாக கள்ளச் சாராயம் ஏற்றிக்கொண்டு போவதற்கு ஒரு சாராய வியாபாரி என்னை அழைத்தார். அதிக பணம் தருவதாகச் சொன்னார். இதனால்தான் நான் ஆட்டோவில் கள்ளச்சாராயம் கடத்தினேன். எனக்கு அதிக பணம் கிடைத்தது.

### விபசார விடுதி

இதனால் நான் தினமும் சாராயம் குடித்துவிட்டு விபசார விடுதிக்குச் செல்லும் பழக்கம் ஏற்பட்டது. அதன் பிறகு சொந்தமாக கள்ளச்சாராய வியாபாரம் செய்தேன். அதில் எனக்கு பணம் அதிகம் கிடைத்தது. இதனால் நான் ஆட்டோ ஓட்டும் வேலையை விட்டுவிட்டு சாராய வியாபாரி ஆனேன்.

### சுடலையின் நட்பு

ஆட்டோவில் கள்ளச்சாராயம் கடத்திக் கொண்டு வருவதற்கு சுடலை என்ற ஆட்டோ டிரைவரை ரவி அறிமுகப்படுத்தினான். சுடலை மிகவும் தைரியமானவன். நான் மதுரைக்காரன். எதையும் துணிந்து தைரியமாக செய்வேன். வேலைக்கு தகுந்தாற்போல சம்பளம் கொடுத்துவிடு என்று என்னிடம் அடிக்கடி சுடலை சொல்வான்.

சுடலையின் தைரியத்தில் நான் திருவான்மியூரில் குடிசை வீட்டில் அழகிகளை அழைத்து கொண்டு வந்து விபசார தொழில் நடத்தினேன்.

கோடம்பாக்கம் மற்றும் திருவான்மியூர் ஆகிய இடங்களில் இருந்து அழகிகளை விபசார விடுதிக்கு அழைத்து வருவதில் சுடலை கில்லாடி. அவனை வைத்துத்தான் எனது விபசார விடுதி ஓகோ என்று ஓடியது. இதனால் நான் சுடலையை நம்பினேன். எனது தொழில் இரகசியங்கள் அத்தனையும் அவனுக்கு தெரியும்.

### காதலி

நான் தாலி கட்டிய மனைவியின் பெயர் ஜெகதீஸ்வரி. அதன் பிறகு விபசார விடுதிக்கு வந்த அழகி சுந்தரி மீது எனக்கு ஆசை ஏற்பட்டது. இதனால் அவளை விபசார விடுதிக்கு அனுப்பாமல் தனியாக வீடு எடுத்து அவளைத் தங்கச் செய்தேன். அவளை தாலி கட்டி மனைவியாக்கினேன்.

அதன் பிறகு சுமதி என்ற அழகியையும் நான் மனைவியாகச் சேர்த்துக் கொண்டேன்.

என் காதலி என்னைத்தவிர வேறு யாருடனும் பேசக் கூடாது என்ற கொள்கையுடையவன் நான். யாராவது காதலியுடன் பேசினால் எனக்கு பொல்லாத கோபம் வரும்.

சுடலைதான் சுந்தரி, சுமதி ஆகியோரை விபசார விடுதிக்கு அழைத்து வந்து எனக்கு அறிமுகப் படுத்தியவன். இதனால் அவன் அவர்களிடம் கள்ளத் தனமாக பேசிக்கொண்டு வந்தான். இதை நான் பலமுறை கண்டித்து இருக்கிறேன். ஒருநாள் நான் வெளியே போய்விட்டு வீட்டுக்கு வந்தபோது சுந்தரியை சுடலை கட்டாயப்படுத்தி கற்பழித்ததை பார்த்துவிட்டேன். அன்று அமாவாசை தினம். நான் பார்த்தது அவனுக்குத் தெரியாது.

ஒவ்வொரு அமாவாசை தினத்தன்றும் எனக்கு அந்த சம்பவம் நினைவுக்கு வரும். அப்போது நான் அதிகமாக குடிப்பேன். ஒருநாள் அமாவாசை தினத்தில் சுடலை என்னை வந்து சந்தித்து, அழகிகளுக்கு சம்பளம் கொடுக்க பணம் கேட்டான். அவனுக்கு நான் பிராண்டி கொடுத்தேன். இஷ்டம் போலக் குடித்தான்.

போதையில் அவன் தரையில் சாய்ந்தபோது அவனை கழுத்தை நெரித்து கொன்றேன். அவன் மூச்சு நின்றது. நான் நினைத்தபடி அவனை வஞ்சம் தீர்த்தேன்.

எனக்கு எதிராக விபசார விடுதி நடத்தியவனும், எனது காதலியை கற்பழித்தவனும் தொலைந்தான் என்று பெருமூச்சு விட்டேன். பிணத்தை என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தேன்.

அப்போது என்னுடன் இருந்த எனது தம்பி மோகன், மச்சான் எல்டின் ஆகியோர் சரியான ஐடியா கொடுத் தனர். "ஏன் தயக்கம்? காருக்கு வாங்கி வைத்துள்ள பெட்ரோல் கைவசம் இருக்கிறது. ஊற்றி எரித்து கணக்கை தீர்த்துவிடலாம்" என்று கூறினார்கள்.

அவர்கள் 2பேரும் சுடலையின் உடலில் பெட்ரோலை ஊற்றினார்கள். நான் பாண்ட் பாக்கெட்டுக்குள் வைத்திருந்த தீப்பெட்டியை எடுத்து குச்சியை பொருத்திப்போட்டேன். சுடலையின் சடலத்தை எரித்து தீர்த்தோம். அதன் பிறகு சாம்பலை முட்டுக்காடு கோவளம் கடற்கரையில் கரைத்தேன். நிம்மதியோடு வீடு வந்து சேர்ந்தேன்.

### 2ஆவது கொலை

ஒரு வாரம் கழித்து சுடலையைத் தேடி அவனது நண்பன் ஆட்டோ டிரைவர் ரவி வந்தான். அவனையும் கொலை செய்துவிட முடிவு செய்தோம்.

ரவியை மோகனும், எல்டினும் நைசாக குடிசை வீட்டுக்குள் அழைத்துச் சென்றனர். வழக்கம்போல் ரவிக்கு சாராயம் ஊற்றிக்கொடுத்து அவனை மயங்க வைத்தனர். அப்போது நான் வீட்டில் இருந்தேன்.

*(கொலைகள் தொடரும்....)*

# 2ஆம் உலகப் போர்

இரண்டாம் உலகப் போரின் கதாநாயகனும் வில்லனும் ஒருவரே. அவர்தான் ஹிட்லர். முதல் உலகப்போரின்போது ஜெர்மனி படையில் இராணுவ வீரராக இருந்த ஹிட்லர், இரண்டாம் உலகப் போரின் போது ஜெர்மனியின் சர்வாதிகாரியாக விளங்கினார். அவர் பெயரைக் கேட்டாலே உலகம் நடுங்கியது. இரண்டாம் உலகப்போர் மூள்வதற்கும், அதன் மூலம் கோடி பேருக்கு மேல் சாவதற்குக் காரணமாக இருந்த ஹிட்லரின் வாழ்க்கை, பல திருப்பங்களும், திடுக்கிடுத் சம்பவங்களும் நிறைந்தது.

ஜேம்ஸ்பாண்ட் சினிமா படங்களைவிட விறு விறுப்பானது. வட ஆஸ்திரியாவில் உள்ள பிரானவ் என்ற ஊரில் 1889ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் திகதி பிறந்தவர் ஹிட்லர். (நேருவை விட 7 மாதம் மூத்தவர்) இவருடைய தந்தையின் பெயர் அலாய்ஸ் ஷிக்கிள் கிரப்பர் ஹிட்லர். இவர் சுங்க இலாகா அதிகாரியாக வேலை பார்த்து வந்தார். இவருக்கு மூன்று மனைவிகள். மூன்றாவது மனைவியான கிளாராவின் நான்காவது மகன் ஹிட்லர். பிறந்தது முதலே ஹிட்லர் நோஞ்சானாக இருந்தார். அடிக்கடி காய்ச்சல் வரும். கிட்டத்தட்ட ஒரு வருடத்துக்குப் பிறகுதான் உடம்பு தேறியது.

தந்தை சுங்க அதிகாரியாகப் பணியாற்றியதால், அடிக்கடி வெளியூர் சென்று விடுவார். அதனால், ஹிட்லருக்கு அம்மாவிடம் செல்லம் அதிகம். தாய் மீது மிகுந்த பக்தியும், பாசமும் கொண்டவர் ஹிட்லர். பள்ளியில் படிக்கும்போது, ஹிட்லர் தான் வகுப்பில் முதல் மாணவர். பிறகு அவருக்குப் படிப்பில் ஆர்வம் குறைந்தது.



ஹிட்லரின் தாயார் கிளாரா — ஹிட்லர் குழந்தை பருவத்தில்

படம் வரைவதில் ஆர்வம் ஏற்பட்டது. விரைவிலேயே அழகாக படங்கள் வரையும் ஆற்றல் பெற்றார். மாணவப் பருவத்திலேயே நிறைய நாவல்கள் படித்தார். போர்கள் பற்றிய கதைகள் என்றால் நாட்டம் அதிகம்.

1903ஆம் ஆண்டு, ஹிட்லரின் தந்தை இறந்து போனார். தந்தையின் கண்டிப்பு இல்லாமல் வளர்ந்த ஹிட்லர், நாளுக்கு நாள் முரடனாக மாறினார். மாணவர்களுடன் சண்டை போடுவதுடன், ஆசிரியர்களுடனும் மோதுவார். தனது 17ஆவது வயதில், பள்ளி இறுதித் தேர்தவில் தேறினார். ஹிட்லர் அதற்காகக் கொடுத்த சான்றிதழை வாங்கிக்கொண்டு வருகிற வழியில் நண்பர்களோடு சேர்ந்து மது அருந்தினார். சர்டிபிகேட்டைக் கிழித்தெறிந்தார்.

இதை அறிந்த ஆசிரியர், அவரைக் கூப்பிட்டுக் கண்டித்தார். "இனி என் வாழ்நாளில் சிகரெட்டையும், மதுவையும் தொடமாட்டேன்" என்று சபதம் செய்தார், ஹிட்லர். அதன்படி, கடைசி மூச்சு உள்ள வரை சிகரெட்டையும், மதுவையும் அவர் தொடவில்லை. 1907இல் ஓவியப் பள்ளியில் சேர முன்றார். இடம் கிடைக்கவில்லை. அந்த ஆண்டின் இறுதியில் ஹிட்லரின் தாயார் இறந்து போனார்.

அதன்பின் ஓவிய அட்டைகள் தயாரித்து, பிழைப்பு நடத்தினார் ஹிட்லர். இரவில் கூட மண்ணெண்ணை விளக்கு வெளிச்சத்தில் ஓவியங்கள் வரைவார். சில மாடல் அழகிகளை வைத்து ஹிட்லர் வரைந்த படங்கள், நல்ல விலைக்குப் போயின. அதனால் சொந்தமாக ஒரு ஓவியக்கூடம் அமைத்தார். இந்தச் சமயத்தில், சிந்தியா என்ற பெண்ணை ஹிட்லர் காதலித்தார். காதல் தோல்வி அடையவே, இராணுவத்தில் சேர்ந்தார்.

1914இல் தொடங்கி, 1918 வரை நடந்த முதல் உலகப் போரின் போது ஜெர்மனி இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினார். 1918இல் போரில் ஜெர்மனி தோற்றது. இந்த தோல்விக்கு ஜனநாயகவாதிகளும், யூதர்களும்தான் காரணம் என்று ஹிட்லர் நினைத்தார்.


உலகில் ஜெர்மனியரே உயர்ந்த இனத்தினர். உலகம் முழுவதையும் ஜெர்மனி ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரவேண்டும் என்று விரும்பினார். ஹிட்லர் பேச்சு வன்மை மிக்கவர். தேசிய சோசலிஸ்ட் ஜெர்மன் தொழிலாளர் கட்சியில் ஒரு உறுப்பினராகச் சேர்ந்து, தனது பேச்சு வன்மையால் விரைவிலேயே கட்சித் தலைவரானார்.

அரசாங்கத்தின் நிர்வாகத்திறமை இன்மையால்தான் நாட்டில் வறுமையும், வேலை இல்லாத்திண்டாட்டமும் பெருகி விட்டதாகப் பிரசாரம் செய்தார். அரசாங்கத்துக்கு எதிராக மக்களைத் தூண்டி விட்டு, ஆட்சியைக் கைப்பற்ற முயன்றார். ஆனால் அந்த முயற்சியில் தோல்வி அடைந்தார். அரசாங்கம் அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. ஹிட்லருக்கு முதலில் 5 ஆண்டு ஜெயில் தண்டனை விதிக்கப்பட்டது.

பிறகு அது ஓராண்டு தண்டனையாகக் குறைக்கப்பட்டது. சிறையில் இருந்தபோது 'எனது போராட்டம்' என்ற பெயரில் தன் சுயசரிதையை எழுதினார் ஹிட்லர். உலகப் புகழ் பெற்ற நூல். 1928இல் நடந்த தேர்தலில் ஹிட்லரின் கட்சி தோல்வி அடைந்தது. ஆனால் ஹிட்லர் சோர்ந்து போய் விடவில்லை.

தன்னுடைய கட்சியின் பெயரை நாஜி கட்சி என்று மாற்றி நாடு முழுவதும் தீவிர வாததில் ஈடுபட்டார். அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் புரட்சிக்கு வழிவகுத்தார். அவருடைய இடைவிடாத உழைப்பும், பேச்சுவன்மையும், ராஜதந்திரமும் வெற்றி பெற்றன. ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து, பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்றக் கட்டடம் கொளுத்தப்பட்டது. ஜனாதிபதியாக இருந்த ஹிண்டன்பர்க் மக்கள் போராட்டத்திற்கு அடிபணிந்தார். 1933ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் திகதி ஹிட்லரை அழைத்துப் பிரதமராக நியமித்தார். அன்று முதல் ஹிட்லருக்கு ஏறுமுகம்தான். பிரதமராக இவர் பதவி ஏற்ற ஒரு வருடத்தில் ஜனாதிபதி ஹிண்டன்பர்க் மரணம் அடைந்தார். அவ்வளவுதான். ஜனாதிபதி பதவியையும் கைப்பற்றிக் கொண்டு, எதிர்ப்பாளர்களை எல்லாம் ஒழித்துவிட்டு, ஜெர்மனியின் சர்வாதிகாரி ஆனார் ஹிட்லர். பாராளு




ஹிட்லர்


மன்றத்தைக் கலைத்தார்.

இராணுவ இலாகாவையும், இராணுவ தளபதி பதவியையும் தானே எடுத்துக் கொண்டார். அரசியல் கட்சிகளை எல்லாம் தடை செய்தார். எதிரிகளைச் சிறையில் தள்ளினார். இனி ஜெர்மனியில் ஜனநாயகம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்று அறிவித்தார்.

*(தொடரும்...)*



> தேசுறு நீல நிறத்தினாள், அறிவாய்ச்
> சிந்தையிற் குலவிடு திறத்தாள்,
> வீசுறுங் காற்றில் நெருப்பினில் வெளியில்
> விளங்குவாள் தனைச்சரண் புகுந்தேன்.
>
> **- சுப்பிரமணிய பாரதியார்**



## வியாபாரியும், முட்டாள்களும்



முன்னொரு காலத்தில் பணக்கார துணி வியாபாரி ஒருவன் விற்பனைக்காக வெளியூர் செல்ல முடிவு செய்தான். விலை உயர்ந்த துணிகளை எல்லாம் நான்கைந்து பெட்டிகளுக்குள் வைத்து மூடினான். எல்லாப் பெட்டிகளையும் ஒரு ஒட்டகத்தின் முதுகில் ஏற்றிவிட்டு கூலிக்கு அமர்த்திய வேலைக்காரர்கள் இருவருடன் புறப்பட்டான். வணிகன் சரியான கஞ்சன்.

வழியில் பாரம் தாங்காமல் ஒட்டகம் கீழே விழுந்துவிட்டது.

வேலைக்காரர்களைப் பார்த்து அவன், "நீங்கள் இங்கேயே ஒட்டகத்தைப் பார்த்துக் கொண்டிருங்கள். நான் பக்கத்தில் இருக்கும் ஊருக்குச் சென்று இன்னொரு ஒட்டகம் கொண்டு வருகிறேன். பிறகு சுமையை இரண்டு ஒட்டகத்திலும் சமமாக வைத்துப் பயணத்தைத் தொடரலாம். நான் இல்லாத போது நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். நான் வருவதற்குள் மழை வந்துவிட்டால் பெட்டிகளை எப்படியாவது நனையாமல் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

வேலைக்காரர்கள் இருவரும் சரியான முட்டாள்கள். இது தெரிந்தும் குறைந்த கூலி கொடுத்து அவர்களை விலை பேசியிருந்தான் வணிகன். எல்லாரும் எவ்வளவோ சொன்னார்கள்.

**பாப்பா முரசு சிறுகதை**

ஆனால், வியாபாரியோ வழித்துணைக்குத்தானே இவர்களை அழைத்துச் செல்கிறேன். எடுபிடி வேலை செய்யணும். இதனால் எனக்கு ஒரு பாதிப்பும் வராது என்று நினைத்தான்.

சிறிது நேரத்தில் மழை பெய்யத் தொடங்கியது.

"நம் முதலாளி பெட்டிகளை நனையாமல் பார்த்துக் கொள்ளச் சொன்னார். இப்பொழுது என்ன செய்வது?" என்று கேட்டான் ஒருவன்.

"பெட்டிகளுக்குள்ளே இருக்கின்ற துணிகளை எல்லாம் எடுத்துப் பெட்டிகள் மேலே போட்டு மூடுவோம். பெட்டிகளை நனையாமல் பார்த்துக் கொள்வோம்" என்றான் அடுத்தவன்.

இருவரும் பெட்டிகளுக்குள் இருந்த விலையுயர்ந்த துணிகளை எல்லாம் எடுத்துப் பெட்டிகளுக்கு மேல் போட்டனர்.

மழையில் நனைந்து துணிகள் எல்லாம் ஈரமாகிவிட்டன.


ஒட்டகத்துடன் திரும்பிய வணிகன், "ஐயோ! என்னடா செய்தீர்கள், துணிகள் எல்லாம் நனைந்து வீணாகிவிட்டதே" என்று கோபத்துடன் கத்தினான்.

"முதலாளி நீங்க சொன்னபடி பெட்டிகள் நனையாமல் இருப்பதற்காகத் துணிகளை எல்லாம் அதன் மேலே போட்டோம். அந்தப் பெட்டிகள் சிறிது கூட நனையவில்லை. நீங்களே பாருங்கள்" என்றான் அவர்களில் ஒருவன்.

"முட்டாள்களான உங்களுக்கு இனி என்னிடம் வேலை இல்லை" என்று அவர்களை விரட்டினான் வணிகன்.

கொஞ்ச காசுக்கு சிக்கனம் பார்க்கப் போய், முதலுக்கே நஷ்டம் வந்ததை எண்ணி வேதனையுடன் ஊர் திரும்பினான் வணிகன்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 15.02.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 631**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
**கொழும்பு**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 629

**பரிசுக்குரியவர்:**
**எம். ஷர்பீன்,**
**46, வைதியா வீதி, தெகிவளை.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம். முஜாஹித், மக்குளூற்று, வெள்ளைமணல். | மர்சியா நாபீர், பாக்கீர் மாக்கார் அவனியூ, மருதானை, பேருவளை. |
| ஏ.சி.எம். காமில், பெருக்குவற்றான், கொத்தாந்தீவு 41. | ச. சஞ்ஜனா, நடுவில் தம்பி வீதி, வந்தாறுமூலை. |
| யோகராசா கலாரஞ்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. | நஸ்ஹா நிலாப்தீன், டோலை வீதி, மாத்தளை. |
| டி.ஏ.ஜே. சந்திரதாஸ், சாந்திபுரம், மன்னார். | ரி. ஜெசிக்கா, 21, புனித பத்திரிசியார் வீதி, யாழ்ப்பாணம். |
| அஸ்மிலா, மாக்கும்புர, நாவலப்பிட்டி. | ர. வினோ, ரி.வி.கே. மில் வீதி, செங்கலடி. |

## ஆத்திசூடி

### நிலையில் பிரியேல்

நீ எக்காரணம் பற்றியும் நடுநிலையாகி உயர்ந்த நிலையிலிருந்து விலகிப் பக்கச்சார்பாகச் செயல்படும் அநீதியான செயல்களைச் செய்யாதே.

-ஔவையார்

*எஸ் நிரஞ்சலா, கண்டி.*


## பாலும் சோறும் ஊட்டினார்

பத்து மாதம் சுமந்து பெற்றுப்
பாலும் சோறும் ஊட்டினாள்
அத்தை பாட்டி பேரைச்சொல்ல
ஆசையோடு கொஞ்சினாள்.


துள்ளிக் கொண்டு அண்ணா பின்னே
பள்ளிக் கோடும் போதிலே
வெள்ளைப் பல்லுச் சிரிப்புக்காட்டிக்
கைய சைத்துக் காட்டுவாள்

நோய் நொடிகள் வந்திடாமல்
தானே நொந்து காத்தவள்
தூ தமிழ் தாலாட்டினால்
தூங்கக் கண்டு களித்தவள்.

தாய் மடியில் பால்முலையில்
ஆய கல்வி ஊட்டினாள்
தூய கலா வல்லி போன்ற
தாயே எங்கள் தெய்வமே.



## அதிசய உலகம்




**இன்று** உலகம் முழுவதும் சிறப்பாகப் பேசப்படும் (கோகோ) கோலா பானத்தின் தயாரிப்பு இரகசியமாகவே வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கோலா என்பது என்ன? கோலா தென் ஆபிரிக்க மர வகைகளில் ஒன்று.

19ஆம் நூற்றாண்டில், ஆபிரிக்காவை ஆராயும் பொருட்டு வந்திறங்கிய பல ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்களுக்குப் பெட்டி தூக்கும் பணியை மேற்கொண்ட ஆபிரிக்க போர்ட்டர்கள் நடு வழியில் தங்கள் சுமையை இறக்கி வைத்துவிட்டு இளைப் பாறுவர். அப்போது கோலா மரத்திலிருந்து கொட்டைகளைப் பறித்து, உடைத்து அதன் விதைகளை உண்பர். அந்த விதைகளை மென்று கொண்டிருந்தாலே உடலில் புது உற்சாகம் தோன்றி, களைப்பு மறைந்து மறுபடியும் சுமையைத் தூக்கிக் கொண்டு நெடுந்தூரம் செல்வதற்குண்டான புத்துணர்ச்சி தோன்றுவதை அனுபவப்பூர்வமாகக் கண்டனர்.

களைப்பைப் போக்கி உற்சாகமூட்டும் ஒரு பொருளாகவே கோலாவின் விதைகளை அவர்கள் எண்ணியிருந்தனர். பின்பு விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சியில் விதைகளில் காபின் எனும் மருந்துப் பொருள் இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

மேற்கு ஆபிரிக்காவில் இந்தக் கோலா மரங்கள் மானாவாரியாய் மண்டிக்கிடக்கிறது. இவற்றின் உயரம் இடத்திற்கு இடம் மாறுப்படுகிறது. பொதுவாக 10லிருந்து 15 மீட்டர் வரை இவற்றின் உயரம் இருக்கும். கோலா மரத்தின் பழம் நட்சத்திரத்தைப் போன்ற தோற்றமுடையது. நட்சத்திரத்தின் ஒவ்வொரு மூலையிலும் சில கோலா விதைகள் இருக்கும். அதை 'கோலா நட்ஸ்' என்கின்றனர். அவையே கோகோ கோலா குளிர் பானத்தின் பிரதம மூலப் பொருள்!

## உங்கள் பொது அறிவு எப்படி?

### ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகள்

1866 - கொழும்பு மாநகர சபைக்கு முதலாவது தேர்தல் நடைபெற்றது.

1867 - கொழும்பு - கண்டி புகையிரதப் பாதை திறக்கப்பட்டு புகையிரதம் விடப்பட்டது.

1870 - கொழும்பு தேசிய மருத்துவமனையும் மருத்துவக் கல்லூரியும் ஒன்றிணைக்கப்பட்டது.

1871 - முதலாவது சனத்தொகை கணக்கெடுப்பு நடைபெற்றது.

1872 - இங்கிலாந்து பவுண், சிலிங்குக்குப் பதிலாக ரூபா, சதம் பாவனையில் விடப்பட்டது.

1873 - காஸ் மூலம் கொழும்புக்கு வெளிச்சம் வழங்கப்பட்டது.

1883 - பௌத்த - கத்தோலிக்க சண்டை கொட்டாஞ்சேனையில் நடைபெற்றது.

1883 - முதலாவது ரிக்ஷோ, வில்டல் கொம்பனியால் இறக்குமதி செய்யப்பட்டது. முதலாவது முறையாக இலங்கைத் தேயிலை ஏலத்துக்கு விடப்பட்டது.

1885 - புகையிரதப் பாதை தலவாக்கெல்லைக்கும் - நானுஓயாவுக்கும் திறக்கப்பட்டது.


1887 - இந்து சமயத்தைப் பரப்புவதற்காக இந்துக் கல்லூரியில் ஆறுமுக நாவலர் பாடுபட்டார்.

1888 - 1892இல் விவசாயிகள் சங்கம் - இலங்கை சி.எச்.சில்வாவினால் ஆரம்பிக்கப்பட்டது. இவர் சாதாரண வியாபாரிகளும் இலங்கை தேசிய காங்கிரஸில் இணைய வாய்ப்புக் கொடுத்தார்.

1892 - சித்திலெப்பை அவர்களினால் முஸ்லிம் சமூகத்திற்காக சாகிரா கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.


# தகவல் பெட்டி

## அன்னையின் அன்பு



**மலேசியா** கோலாலம்பூரில் அமைந்துள்ள தேசிய வன விலங்குகள் சரணாலயத்தில் மாஸ் சுறா என்ற ஒட்டகச் சிவிங்கி, பிறந்து நான்கே நாட்களான தனது குட்டியை அன்புடன் நாக்கால் வருடிக் கொடுக்கும் காட்சியே இது.

## ஒரே நிறம்



**ஒரே** நிறம் பூசப்பட்டு விற்பனைக்குத் தயாரான நிலையில் உள்ள பெருந் தொகைக் கார்களின் அணி வகுப்போ இது? இல்லவே இல்லை. பிரான்சின் மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலையொன்றில் விநியோகம் செய்வதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களின் மீது பனி படர்ந்ததனாலேயே இவ்வாறாக ஒரே நிறத்தில் காட்சி தந்தன இக் கார்கள்.





**வட** உலக நாடுகளில் தற்போது நிலவும் கடுங் குளிர் காலநிலை காரணமாக ஒரு டஜன் ஆடைகளை அணிந்து சென்றும் குளிரைச் சமாளிக்க முடியாமல் இருக்கிறது. ஆனாலும் வட சீனாவில் நீச்சல் உடையை மாத்திரம் அணிந்து கொண்டு பனிபடர்ந்த ஆற்றில் இவர்கள் நீந்திச் செல்வதைப் பார்த்தால் உஷ்ணமான இடங்களில் இருப்பவர்களுக்கும் நிச்சயம் உடல் புல்லரிக்கும்.




**பார்த்த** பார்வைக்குச் சந்தேகமில்லை, ஓர் அழகிய இளம் பெண்ணொருத்தி என்று எண்ணத் தோன்றுகிறதா? உங்கள் சிந்தனையைப் பிழையென்று சொல்ல முடியாது. ஏனெனில் உலோகத்தில் அவ்வளவு தத்ரூபமாக வடிவமைத்துள்ளனர். அண்மையில் ஜப்பானில் நடந்த ரோபோ கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த இந்த ரோபோ பொம்மை ஆய்வு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகிறதாம்.

**இக்** குளிர் காலத்தில் உலகின் பல நாடுகளிலும் பனி விளையாட்டுக்கு முக்கியத்துவம் கிடைக்கிறது. பிரான்ஸில் இம்முறை நடைபெற்ற பனி நடனப் போட்டிக்கு செக் குடியரசின் ஒல்காவும் கெரலும் மனம் நிறைந்த எதிர்பார்ப்புடனேயே கலந்து கொண்டனர். ஆனாலும் பலேஸ் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் விதியின் சதியால் அவர்கள் வைத்த அடி பிசகியதால் பனி மீது குப்புற வீழ்ந்தனர். வீழ்ந்தது அவர்கள் மாத்திரமல்ல, அவர்களுடைய எதிர்பார்ப்புகளும்தான்.





ப்ரிதிவிராஜ் - சரண்யா
பாரிஜாதம்

## கணவர் விரும்பினால் நடிப்பேன்

**- சிம்ரன்**

சோழிங்கநல்லூர் ஜேப்பியார் என்ஜினியரிங் கல்லூரி. பைஜாமா குர்தாவுடன் காரிலிருந்து இறங்கியவர்...நம்பமுடியாமல் கண்ணைக் கசக்கி மீண்டும் பார்த்தால், அட சிம்ரன்! கூடவே அவரது கணவர் தீபக் பாகா.

மனநலம் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கான அமைப்பு பான்யன். சென்னை முகப்பேரில் இயங்கிவரும் இவ்வமைப்பு, நலநிதிக்காக ஆண்டு தோறும் இசை நடன நிகழ்ச்சிகளை நடத்திவருகிறது. மணிரத்னம், வஸந்த், ராஜீவ்மேனன் போன்ற பெருந்தலைகள் இந்நிகழ்ச்சியின் ஆர்கனைசர்கள். கமல் தவறாமல் இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு ஒரு பாடல் பாடுவார். இந்த முறையும் (பெப்.5) இந்தப் பங்களிப்பு இடம்பெற ஏற்பாடாகியிருந்தது.

திருமணத்துக்குப் பிறகு டெல்லிவாசியாகிவிட்ட சிம்ரன், முதல் முறையாக திருமணத்திற்குப் பிறகு பொதுநிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்கிறார். அது பான்யன் நடத்தும் இந்த விழா. சிம்ரன் என்றாலே நடனம்தானே! இந்த முறை "ராக்கம்மா கையை தட்டு...." பாடலுக்கு ஆடுகிறார் சிம்ரன். அதற்கான ரிகர்சலுக்கு பைஜாமா குர்தா அணிந்து கணவருடன் கல்லூரி மைதானத்துக்கு வந்திருந்தார்.

அப்போ பார்த்த மாதிரியே இருக்கீங்க என்று சிம்ரனை மொய்த்தது ஒரு கூட்டம். கலா மாஸ்டர் ஸ்டெப்களை சொல்லிக்கொடுக்க, அனாயாசமாக ஆடினார் சிம்ரன். முப்பது நிமிட பயிற்சிக்குப் பிறகு வியர்க்க விறுவிறுக்க வந்தவரிடம், "சினிமாவில் எப்போது உங்களைப் பார்க்கலாம்" என்றோம். சிம்ரன் டெல்லியில் இருந்தாலும் பலரும் அட்வான்ஸுடன் அவர் வீட்டுக் கதவைத் தட்டிக்கொண்டுதான் இருக்கிறார்களாம். "கதையும், கதாபாத்திரமும் பிடித்திருந்து என் கணவரும் அனுமதி கொடுத்தால் கண்டிப்பாக நடிப்பேன்" என்றார்.

சினிமாவில் புதுமைப் பெண்ணாக வந்தாலும் அவரை இயக்குகிற சாவி இப்போது கணவர் தீபக் கையில். இந்திய கலாசாரம்?



வடிவேலு - நாவ்யாநா
பாசக்கிளிகள்

## மகனின் காதலுக்கு பச்சைக்கொடி காட்டிய பாரதிராஜா

'சாதுர்யன்' படத்தின் படப்பிடிப்பின் போதே அரசல் புரசலாகப் பேச்சு எழுந்தது. அதனை உண்மை என்று நிரூபித்திருக்கிறார்கள் மனோஜும், நந்தனாவும்.

தாஜ்மஹாலில் ஷாஜகானுக்குரிய பில்டப்புடன் அறிமுகப்படுத்தப்பட்ட மனோஜுக்கு நடிப்பு ஏனோ எண்ணெயும் தண்ணியுமாக விலகியே இருந்தது. கடைசியாக நடித்த 'சாதுர்யன்' வரை காலை வாரிவிட்டதே தவிர, இந்தக் கலையுலக வாரிசுக்கு கைகொடுக்கவில்லை. கிடைத்தவரை லாபம் என்று இப்போது லாமென் படத்தில் வில்லனாக நடித்துவருகிறார்.

சாதுர்யனில் நடித்தபோது உடன் நடித்த நந்தனாவுடன், 'காதல் யானை வருகுது ரெமோ...'என்று டுயட் பாடியிருக்கிறார் மனோஜ். 'சக்சஸ்' படத்தில் அறிமுகமாகி 'ஏ.பி.சி.டி', 'சாதுர்யன்' என சொதப்பல் படங்களில் நடித்துக்கொண்டிருந்த நந்தனாவுக்கு இந்த ரெமோ மனசைக் கவர்ந்துவிட்டான். காதலிப்பதாக இருந்தால் குடிக்கிறதை விட்டுரணும் என மனோஜிடம் கூறியிருக்கிறார் நந்தனா. காதலியரின் கடைக்கண் பார்வைபட்டால் காதலருக்கு மலையும் சிறு கடுகாகிவிடுமாம். குடி எம்மாத்திரம்? மனோஜும் ஆல்கஹாலை நிறுத்திவிட்டு, காந்தியவாதியாகியிருக்கிறார்.

அலைகள் ஓய்வதில்லை முதல் கண்களால் கைது செய் வரை எத்தனை காதல்களைப் பார்த்திருக்கிறார் பாரதிராஜா. மகனின் இந்தக் காதலும் இவர் பார்வையிலிருந்து தப்பவில்லை. 'சாதுர்யன்' படம் முடிந்து நந்தனா கேரளா சென்றபிறகு, போனில் மணிக்கணக்காக அவருடன் பேசிவந்துள்ளார் மனோஜ். ஒருநாள் போன் பில்லே ஆயிரங்களை விழுங்கியிருக்கிறது. "இதுக்கு அந்த பில்லே (தண்ணி பில்) பரவாயில்லை. அவனை 'அதையே கண்டினியூ பண்ணச் சொல்லு' என கமெண்ட் அடித்திருக்கிறார் பாரதிராஜா.

இப்படி போனும் பில்லும் கொடுத்து வளர்த்த காதல், இப்போது கல்யாணத்தில் வந்து நிற்கிறது. பாரதிராஜாவின் மனைவி சந்திரலீலாவும், மகள் ஜனனியும் கேரளா சென்று, வருங்கால மருமகள், நாத்தனாரைப் பார்த்துவிட்டு வந்துள்ளனர். இருவருக்கும் மனோஜின் செலக்ஷன் ஓ.கே.! அமெரிக்கா சென்றிருக்கும் பாரதிராஜா சென்னை திரும்பியதும் டும் டும் தானாம்!



ஜீவா - சந்தியா
டிஷ்யூம்

## நவ்யா 'மொட்டை' நாயர்!

கமலஹாசன், விக்ரம், சூர்யாவுக்கு சவால் விடும் வகையில் ஒரு நடிகை கோலிவுட்டை கலக்க ஆரம்பித்துள்ளார். அவர் நவ்யா நாயர்.

சாதாரணமாக நடித்து விட்டுப் போக, மற்ற சினிமாக்கள், சாதனை படைக்க தமிழ் சினிமா என்பதை நிரூபிக்கும் வகையில், மற்ற திரையுலகை விட தமிழ் சினிமாவில் தான் பல பிரம்மாக்கள், சகாப்தங்கள் உருவாகியுள்ளனர். நடிப்புக்குப் பெயர் போன எத்தனையோ நடிகர்களைக் கண்டது தமிழ் சினிமா. அவர்களுக்கு நிகராகப் பல சாதனை நடிகைகளும் இங்கே முத்திரை பதித்து விட்டுப் போயிருக்கிறார்கள்.

முந்தைய தலைமுறைக்கு ஒரு சிவாஜி, பத்மினி, சாவித்திரி. அடுத்த தலைமுறையில் கமல், ஸ்ரீதேவி. இந்தத் தலைமுறைக்கு விக்ரம், சூர்யா என நடிப்பிளவரசர்கள் நிறையவே உள்ளனர்.

முந்தைய நடிகைகளுக்கு நாங்கள் சற்றும் இளைத்தவர்கள் இல்லை என்பது போல சந்திரமுகியில் ஜோதிகா கலக்கினார். அதற்கு முன்பு வாலியில் சிம்ரன் மிரட்டினார். இப்போது இன்னொரு நடிகை புகுந்து விளையாட புதிய கோலம் பூண்டுள்ளார். நவ்யா நாயர் தான் அந்தப் புதுமை நடிகை.

'ஆடும் கூத்து' என்ற படத்தில் சேரனுக்கு ஜோடியாக நடித்து வருகிறார் நவ்யா நாயர். இதில் நவ்யாவுக்கு 3 விதமான கெட்டப்புக்களாம். இதில் ஒரு கெட்டப்புக்கு மொட்டை வேடமாம். இந்த கெட்டப்பை நவ்யாவிடம் கூறியதும் கொஞ்சம் கூட தயங்காமல், "அடிக்க நான் ரெடி, போட யாரு ரெடி" என்று கூறியதும் சேரன் உள்ளிட்ட அனைவருமே அசந்து விட்டனர்.

தற்போது மொட்டை கெட்டப்புக்கான படக் காட்சிகள் தான் படமாக்கப்பட்டு வருவதால் மொட்டையடித்து, படு பளபளப்பாகக் காட்சி தருகிறார் நவ்யா நாயர். நவ்யாவின் 'மொட்டை' கெட்டப் படு அசத்தலாக உள்ளதாம். படப்பிடிப்பின்போது அத்தனை பேரும் நவ்யாவின் முடியின் தியாகத்தையும், அவரது அசத்தல் கெட்டப்பையும் பாராட்டித் தள்ளுகிறார்களாம்.

தமிழ் சினிமாவில் இதுவரை முன்னணி நடிகைகள் யாருமே இப்படித் துணிந்து மொட்டை போட்டதில்லை என்று நவ்யாவுக்குப் பாராட்டுப் பத்திரம் கிடைத்துள்ளது. அத்தோடு நில்லாமல், முடியுடன் இருந்ததை விட இப்போதுதான் ரொம்ப அழகாக இருக்கிறீர்கள் என்று வேறு கூறி, நவ்யாவை வெட்கப்படுத்துகிறார்கள்.

அடிச்சுக் கலங்குங்கோ நாயரே!

## சூர்யாவை துரத்தும் ஹிந்தி சினிமா

கல்விச் சேவைக்காக ஒரு கோடி ரூபாய் சொந்தப் பணத்தைப் போட்டு எதிர் வரும் தமிழ் புத்தாண்டு தினத்தில் அறக்கட்டளை தொடங்குகிறார் நடிகர் சூர்யா.

திருச்சியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக வந்த நடிகர் சூர்யா நிருபர்களிடம் கூறியதாவது :

"கோவையில் வரும் ஏப்ரல் 14ஆம் திகதி (தமிழ்ப் புத்தாண்டு) 'சூர்யா கல்வி அறக்கட்டளை' என்ற அமைப்பை சுமார் ஒரு கோடி ரூபாய் மூலதனத்துடன் தொடங்க உள்ளேன். நான் விளம்பரப்படங்களில் நடிப்பதன் மூலம் வரும் நிதியை இதற்கு ஒதுக்குவேன். இந்த அறக்கட்டளை கல்விச் சேவை, சுகாதாரம், குழந்தைகள் நலன் ஆகியவற்றிற்காகப் பாடுபடும்.

தற்போது 'ஜில்லுன்னு ஒரு காதல்' உட்பட 3 படங்களில் நடித்து வருகிறேன். கஜினி தெலுங்கிலும் நன்றாக ஹிட் ஆகி உள்ளதால், தெலுங்கில் இருந்தும் நடிக்க வாய்ப்புகள் வருகின்றன. இருந்தாலும் தமிழ் படங்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பேன். இங்கு எனக்கென தனியிடம் உள்ளபோது வேறெங்கு போவதிலும் விருப்பமில்லை.

அதேபோல் தற்போது பாலிவுட்டில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் அமீர்கானின் 'ரங் தே பசந்தி'யில் நடிக்கும் வாய்ப்பை 'கஜினி' படத்துக்காகத் தான் இழந்தேன். அதில் நடிக்க என்னை அமீர்கான் கூப்பிட்டபோது 'கஜினி'க்காக கால்ஷீட் கொடுத்து, என் கெட்-அப்பையும் மாற்றியிருந்தேன்.

அதனால் அதில் நடிக்க முடியாமல் போய்விட்டது. ஆனால் இப்போதும் ஹிந்திப் படங்களில் நடிக்க வாய்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. ஹிந்தியில் ராம்கோபால் வர்மாவின் படத்தில் நடிக்க தற்போது பேச்சு நடத்தி வருகிறேன். தெலுங்கு, ஹிந்தி என அழைப்புகள் வந்தாலும் தமிழுக்குத்தான் நான் முக்கியத்துவம் தருவேன்.

இங்கு எனக்கென ஒரு இடத்தை மக்கள் கொடுத்திருக்கும்போது புதிதாக எங்கும் போக வேண்டிய தேவை இல்லை.


விளம்பர நிகழ்ச்சியில் பங்கேற்பதன் மூலம் இரசிகர்களை நேரடியாகச் சந்திக்கவும், அவர்கள் எண்ணங்களைப் புரிந்துகொள்ளவும் முடிகிறது" என்றார் சூர்யா.



புளோரா



பை 2



பாநாயர் - பிரபு
ரிகள்

# மணிரத்னம் படத்தில் ஐஸ்!

**ரஜினி** படத்திற்கு டேக்கா கொடுத்து வரும் ஐஸ்வர்யாராய். இப்போது மணிரத்தினத்தின் புதிய ஹிந்திப் படத்தில் நடிக்க கால்ஷீட் கொடுத்துள்ளார்.

உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் திரைத்துறையில் நுழைந்தார் ஐஸ்வர்யா. அவரது முதல் திரைப்படம் தமிழில் தயாரான 'ஜீன்ஸ்'. இப்படத்திற்குப் பின்னர் 'இருவர்', 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' ஆகிய மேலும் இரு தமிழ்ப் படங்களில் ஐஸ்வர்யா நடித்தார்.

அதன் பிறகு அவர் ஹிந்தியில் பிசியான நடிகையாகிவிட்டார். ஹிந்திக்குப் போன பிறகு அறிமுகப்படுத்திய தமிழை அவர் மறந்து விட்டார். ரஜினியின் 'சந்திரமுகி' படத்தில் ஜோதிகா நடித்த கேரக்டருக்காக ஐஸ்வர்யாவை தீவிரமாக முயற்சித்து வந்தார்கள். ஆனால் கால்ஷீட் இல்லை என்று கை விரித்து விட்டார் ஐஸ்.

இப்போது 'சிவாஜி' படத்திற்கும் கூட ஐஸ்வர்யாவை கேட்டு வருகிறார்கள். இதுவரை அவர் ஒத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இருப்பினும் கடைசி நேரத்தில் ஐஸ்வர்யா அப்படத்தில் நடிக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது.

இந்த நிலையில் மணிரத்தினத்தின் அடுத்த ஹிந்திப் படத்தில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு நடிக்கவுள்ளார் ஐஸ்வர்யா.

இப்படத்திற்கு 'குரு' என்று பெயர் வைத்துள்ளார் மணிரத்தினம். இதில் அபிஷேக் பச்சன் ஜோடியாக ஐஸ்வர்யா நடிக்கவுள்ளார். மணிரத்தினம் சமீபத்தில் ஹிந்தியில் தயாரித்த 'யுவா' படத்தில் மூன்று ஹீரோக்களில் ஒருவராக அபிஷேக் பச்சன் நடித்திருந்தது நினைவிருக்கலாம்.

'குரு' படத்தின் ஒளிப்பதி வாளராக ராஜீவ் மேனன் பணியாற்றவுள்ளார். கடைசியாக அவர் பாம்பே படத்திற்கு பணியாற்றினார்.

கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மணியுடன் சேருகிறார். ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கிறார்.

முன்னதாக அமீர்கானை வைத்து மணிரத்தினம் ஒரு படத்தை இயக்கப் போவதாகக் கூறப்பட்டது. ஆனால் தற்போது அந்தத் திட்டத்தை ஒத்தி வைத்திருக்கிறார் மணி. அதற்குப் பதிலாக குரு படத்தை இயக்கப் போகிறார். இதை முடித்து விட்டே அமீர்கான் படத்தை இயக்கப் போகிறாராம்.

ஷங்கரால் சாதிக்க முடியாததை ஹிந்தி வழியாகச் சாதித்து விட்டார் மணிரத்தினம்.



மும்தாஜ்
வெடக்கோழி

# உருவாகிறது ரஜினி கார்ட்டூன்!

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் குறித்த கார்ட்டூன் படம் தயாராகவிருக்கிறது. ரஜினியின் இளைய மகள் சௌந்தர்யா ரஜினிகாந்தும், அம்பானிக்குச் சொந்தமான நிறுவனமும் இணைந்து இந்தக் கார்ட்டுன் படத்தைத் தயாரிக்கவுள்ளனர்.

ரஜினியின் மகள் சௌந்தர்யா, ஓஷர் ஸ்டுடியோஸ் என்ற கிராபிக்ஸ் நிறுவனத்தைத் தொடங்கியுள்ளார். இந்த நிறுவனம் தமிழ்த் திரைப்படங்களுக்கு கிராபிக்ஸ் வேலைகளைச் செய்து தருகிறது. ரஜினியின் சந்திரமுகி, அன்பே ஆருயிரே ஆகிய படங்களுக்கு சௌந்தர்யா சில கிராபிக்ஸ் காட்சிகளை வடிவமைத்துக் கொடுத்தார்.




சரத்குமார் - நயன்தாரா
தலைமகன்

அதேபோல, சிவாஜிக்கும் சௌந்தர்யாதான் கிராபிக்ஸ் வடிவமைப்பைச் செய்துள்ளார். தற்போது தனது தந்தையை வைத்து ஒரு கார்ட்டுன் படத்தைத் தயாரிக்க சௌந்தர்யா முடிவு செய்துள்ளார்.

இது தொடர்பாக திருபாய் அம்பானியின் ஆட்லேப்ஸ் நிறுவனத்துடன், சௌந்தர்யாவின் ஓஷர் ஸ்டுடியோஸ் நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது.

இதுகுறித்து ஓஷர் ஸ்டுடியோஸ் நிறுவன தலைமை செயல் அதிகாரி வெங்கட் கூறுகையில், "உலக அளவில் இதற்கு முன்பு ஜாக்கிசான் குறித்துத் தான் கார்ட்டுன் படம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு இப்போது ரஜினிகாந்தை வைத்து கார்ட்டுன் படத்தைத் தயாரிக்கவுள்ளோம்.

சர்வதேச தரத்தில் இதை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு ரூ.10 முதல் 12 கோடி வரை பட்ஜெட் போடப்பட்டுள்ளது. தரம் தான் முக்கியம் என்று சௌர்ந்தர்யாவும், ஆட்லேப்ஸ் நிறுவனமும் முடிவு செய்துள்ளதால் செலவு குறித்து நாங்கள் கவலைப்படவில்லை.

ரஜினிகாந்த் குறித்த மிகவும் சுவாரஸ்யமான கார்ட்டுன் படமாக இது அமையும். அவரது வாழ்க்கைச் சம்பவங்கள் மட்டுமல்லாமல்? ரஜினி சம்பந்தப்பட்ட பல விஷயங்களையும் இதில் புகுத்தவுள்ளோம்.

இந்தப் படத்தை உருவாக்க 18 மாதங்களாகும்.

பல்வேறு உலக மொழிகளில் இதைக் கொண்டு வருகிறோம். ஜப்பானில் ரஜினிக்கு நல்ல வரவேற்பு இருப்பதால் ஜப்பானிய மொழியிலும் இதை டப் செய்யவுள்ளோம்.

கார்ட்டுன் படம் என்பதால் டப்பிங் மிகவும் எளிதானது. இருப்பினும் இப்போதைக்கு ஹிந்தி மற்றும் ஆங்கிலத்தில் இதை வெளியிடவுள்ளோம்.

இந்தப் படத்தின் தலைமை வடிவமைப்பாளராக சௌந்தர்யா ரஜினிகாந்த் பணியாற்றுவார். மற்றக் குழுவினர் குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை" என்றார்.

# சிம்புவுக்கு அடி விழுந்தது உண்மை - நேரில் பார்த்தவர்கள் பேட்டி

**ந**ள்ளிரவில் நடந்த தகராறில் நடிகர் சிம்பு அடிவாங்கியது உண்மைதான் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறியுள்ளனர்.

கடந்த 26ஆம் திகதி நள்ளிரவில் நந்தனம் சிக்னல் அருகே ஜோதி தோட்டம் பகுதியில் நடிகர் சிம்புவுக்கும், சில இளைஞர்களுக்கும் தகராறு ஏற்பட்டது. இந்தத் தகராறில் சிம்புவுக்கு மூக்கு உடைந்து இரத்தம் கொட்டியது.

ஆனால் இது போன்ற ஒரு சம்பவமே நடக்கவில்லை என்று சிம்புவும், அவரது தந்தை விஜய டி.ராஜேந்தரும் மறுத்தனர்.

இந்த நிலையில் சிம்பு தாக்கப்பட்டதை நேரில் பார்த்த சண்முகராஜ் என்பவர் கூறியதாவது :

"நான் நந்தனம் தேவர் சிலையில் இருந்து தி.நகர் வெங்கட் நாராயணா சாலைக்கு என் நண்பர் பாபுவுடன் பைக்கில் சென்று கொண்டிருந்தேன். அப்போது முகத்தில் இரத்தக் காயத்துடன் சிம்பு வேகமாக ஓடி வந்தார். அவருடன் இன்னும் 2 பேர் இருந்தனர்.

சிம்பு, "அண்ணா அண்ணா" என்று கத்தியபடி ஒரு ஆட்டோவை மடக்கி ஏறி உட்கார்ந்தார். அவருக்குப் பக்கத்தில் ஒருவரும், டிரைவர் பக்கத்தில் இன்னொருவரும் உட்கார்ந்தனர். என்ன தான் நடக்கிறது என்று பார்க்க ஆட்டோவைப் பின் தொடர்ந்து சென்றேன்.

ஆட்டோ, இந்தி பிரச்சார சபா தெருவுக்குள் சென்றது. (இங்குதான் சிம்புவின் வீடு உள்ளது) சிம்பு தான் அடிபட்டது என்பது எனக்கு நன்றாகத் தெரியும்" என்றார்.


நந்தனம் அருகேயுள்ள ஜோதி தோட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஆர்.ரமேஷ், கே.சுதாகர், ஆர்.ராஜேந்திரன் ஆகியோர் கூறியதாவது :

"வியாழக்கிழமை இரவு எங்கள் பகுதிக்கு பதட்டத்துடன் ஒரு இளைஞர் ஓடி வந்தார். அவரை மடக்கி என்னவாயிற்று என்று விசாரித்த போது, சாலையைக் கடக்கும் போது எனக்கும் சிம்புவுக்கும் தகராறு ஏற்பட்டதில் சிம்பு என்னை அடித்து விட்டார் என்று கூறி ஓடி ஒளிந்து கொண்டார்.

வெங்கட் நாராயணா சாலையில் வந்து நாங்கள் பார்த்த போது, சிம்புவம் அவருடன் இருந்த 2 பேரும் ஜோதி தோட்டத்தில் யாரையோ தேடிக்கொண்டிருந்தனர். சிம்பு முகத்தில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் ஆட்டோவில் வந்த சிம்பு மறைந்திருந்த இளைஞரைத் தேடிக் கண்டுபிடித்து இழுத்துச் சென்றார்" என்று கூறினார்.

இந்த விவகாரத்தை பொலிஸ் விசாரிச்சாதான் முழு விவரமும் வெளியே வரும் போலிருக்கே...விசாரிக்குமோ?





யுகா



# தேன் கிண்ணம்

## குப்பையில் விழுந்து....!

நானொரு
குப்பையில் விழுந்த
குன்றுமணி
அதனால்தான்
எல்லோருக்கும்
என் மீது ஏளனம்.
ஏன் இவர்களுக்கு
இந்தத் தொழில்?
திருந்தத் தான்
மாட்டார்களா?
ஏக்கமாய்
இருக்கிறது
எனக்குள்ளே...!
பல்லிளித்துப்
போகின்ற
பயித்தியக்
காரர்களே...
இந்தக் குப்பை
இருக்கிறதே
இதுதான் எனது
முளைத்தலுக்கான
மூல வளம் - ஓ
முளைப்பேன்
தளைப்பேன்
படர்வேன்
பலருக்கும்
பயன்படுவேன்
உங்களில்
ஒருத்தரையாவது
திருத்துவதே
எனது இலட்சியம்.
இதற்காகவே
குப்பையில்
விழுந்து விழுந்து
கொடியாகிறேன்.

*-வில்லூரான்.*

## நிர்ப்பந்தம்



எரிவுக்குப் பயந்து
சமையலுக்கு கூட
சேர்த்திடாத
மிளகாயை
வெறுமனே
கடித்துச் சப்பவேண்டிய
நிர்ப்பந்தம்.

நிர்ப்பந்தம்
ஒழுக்கத்தை
ஓரங்கட்டி
பழக்கத்தை
பகையாக்கி
குதர்க்கமாய்
பேசிடும்படி
நிர்ப்பந்தம்.



உறவுகளைப் பிரிந்து
உணர்வுகளை ஒடுக்கி
ஒற்றையாய்
வாழ்ந்திருக்க
நிர்ப்பந்தம்.

கற்பனைக்கு
உயிரூட்டி
விற்பனைக்கு
தயாராக்கி
பகிடி முதலுக்கு
லாபம் சேர்த்திட
நிர்ப்பந்தம்.

பேணி வந்த
வெட்கத்தை
ஏணி ஏற்றி
கூனிக் குறுகியிருக்கும்
நிர்ப்பந்தம்.



பகிடி எனும்
போர்வையில்
புது அறிமுகங்களை
வதையுடன்
அறிந்து கொள்ளும்
இன்பமான
நிர்ப்பந்தம்.

சுதந்திரங்களை
விலைபேசிவிட்டு
தந்திரங்களுடன்
கோபித்துக் கொண்டு
இயந்திரமாய்
சுழலவேண்டிய

*-நஸீஹா சம்சபாத், ஏத்தாலை.*

## நிலாப் பெண்

ஒரு பூமிக்கு
இரண்டு
நிலவுகளா?

வான் நிலா
வருத்தப்படும் முன்
பெண் நிலா - நீ
எனக்குள் வந்து
ஒளிந்து கொள்ளடி!

அமாவாசையன்றும்
நிலாச் சோறு
உண்பேன்
அன்பே! நீ
என்னருகில் இருந்தால்.....

உயிரே!
உட்கார்ந்து பேசு
நீ சென்ற பின்
அந்த இடத்தில் - நான்
ஆயுள் முழுவதும்
அமர்ந்து கொள்வேன்.

*-சிஹ்னாஸ் தௌபீக், ஹுஸைனியாபுரம்.*

## துரும்புகள்

### பெயார் அன் லவ்லி

உன் முகத்தில்
அதிகமாய்
கிறீமைப் போட்டு
அலம்பாதே...
இரவில் அல்லி
மலர மாட்டேன்கிறது...

### கூவம்

சுற்றி வேலியில்லாத
உன் வீட்டுக்
கிணற்றில்
குளிப்பதை தவிர்!
அருகிலுள்ள
கள்ளிச்செடிகளெல்லாம்
ரோஜாப்பூக்கள்
பூக்கின்றன...

### கொழுகொம்பு

பக்கத்து வீட்டுச்
சுவரோடு
அமைந்திருக்கும்
உன் வீட்டு
ஜன்னலை மூடு;
இல்லையெனில்
எனை விடு!!

### கண்ணீர்

உப்புக் கரிக்கிறது
எனக்கு;
அழுகிறாயா,
அங்கு நீ...

### விதி

அ...ஆ...
அழப்படைக்
கவிதை சொன்னவள்
அ...ஆ...
அரிச்சுவடிப்
பாடமெடுத்துக்
கொண்டிருக்கிறாள்.
தன் குழந்தைக்கு...
அருகில் அவள்
புருஷன்!

### மாருதம்

இழுத்து முடி
உன் கூந்தலை
காற்றில்
பறக்கிறது
என் இதயம்!

### தீ

தொலைதூரத்தில் நீ...
விடியலுக்காய் நான்!

*-தல.*

## திறந்தே கிடக்கின்றன

மலர்களின்
தேசத்துக்குள்
ஆட்சிக் கவிழ்ப்பு
செய்தவளே!....

நீ
அழுகின்ற சப்தம்
கேட்டு
நான்
அழுக்கான துண்டு...
நீ
சிரிக்கின்ற சப்தம்
கேட்டு
நான்
அழகான துண்டு...

கொஞ்சம்
சிறகுகளோடு

உன்
நினைவுகள்
எனும்
வானத்தை
வட்டமிட
வந்தேன்...

உனக்கு
சம்மதமெனில்
சேமித்து வைத்த
உன் சாகச்
சிரிப்புகளோடு
சகவாசம்
செய்து
கொள்கிறேன்.

இந்த
மாரிகாலப்

பொழுதில்
உன் வடதுருவக்
கண்களை
வாசித்துப்
பார்ப்பதால்
மேலும் நான்
குளிராகிறேன்.

உனக்காக
என் இதயம்
என் இமை
என் வீட்டுக் கதவு
மூன்றும்
திறந்தே
கிடக்கின்றன.

*-அ.ந.அப்துல் றஹ்மான், பட்டியடிப்பிட்டி.*

## மனைவி

அதிகாலை பனிக்காற்றாய்
என் உயிருக்குள்
ஊடுருவி
மயிர்க் கூச்செறியச் செய்யும்
என் காது மடலில்
உன் சுவாசம்...

சொர்க்கமே
என் கரங்களில்
எனத் தோன்றும்
உன் தோளில்
நான் சாயும் பொழுதுகள்...

செல்லமே
என நீ அழைக்க
செல்லமாய் சிணுங்கி
உன் காது மடல் திருக
ஊடலின் உரசல்கள்...

தலைவலி என்றதும்
தாங்கிப் பிடித்து நீ
தைலம் தேய்க்க
தினமும் தலைவலி எனக்கு....

இந்த இன்பங்கள்
இன்று
மனைவி எனும்
சிறைக்குள் சிக்குப்பட்டு
சிதைந்துவிட்டன.

*-நரீஷா பன்னீர், புசல்லாவை.*

## இனவாதம் அழியட்டும்

எப்போது சமாதானம் வரும்
அது முடியாத ஒன்று
அப்படி நினைப்பது தவறு
இதற்கு வழியேது முண்டா?

உண்டு - முதலில்
எல்லோரும்
அவரவர் புனிதஸ் தலத்திற்குச்
சென்று - மாபெரியோனிடம்
மன்றாடுவோம்
சமாதானத்தைப்
பரிசளியென்று.

தலைவனுக்கு நான்
தகுதியானவனா?
தன்னையும்
தாண்டியவனுண்டா!
பிழையை முதலில் உணர்ந்து

பதவியை தரமிக்கவனிடம்
கையளிப்போம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட
யாவரும்
யாவரையும் மன்னித்து
விடுவோம்
பித்தளை தங்கமாய் மாறட்டும்
பாரெங்கும் இன்பம்
பொங்கட்டும்.

சோகங்கள் சோர்ந்து
போகட்டும்
சீற்றங்கள் சிதறி யோட்டடும்
சிகரத்தில் சிரிப்பொலி
கேட்கட்டும்
சீக்கிரமாய் இனவாத
மழியட்டும்.

*-அ.கா.மு.றிஸ்வின், மூதூர் - 01.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் - கவிஞரும்

உலக வலம் வரும் இணையங்களை எம்நாட்டு மற்றும் புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்கள் தமது உள்ளத்திலிருக்கும் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்கான ஊடகமாகப் பயன்படுத்துகிறார்கள் அந்த வகையில் இங்குள்ளவையும் தமது தாயக உறவுகளையும் தாங்கள் பட்ட துன்பங்களையும் மறக்கமுடியாமல் பல இளம் கவிஞர்கள் தங்கள் பங்கிற்கு வடித்த கவிதைகளின் சில துளிகள் இவ்வாரம் சிறப்புக் கவிதைகளுக்காக:

முரசின் கவிதை பயிற்சிக்களம் பகுதியில் புதிய கவிஞர்களின் வெளியீடுகளை அறிமுகப்படுத்த முரசு களம் அமைத்துக் கொடுக்கின்றது. தமது கவிதை வெளியீடுகளை அல்லது வெளியிடப்பட விருப்பமுற்றை வெளிக் கொண்டுவர விரும்புவோர் முரசுடன் தொடர்பு கொள்ளலாம்.

## மின்சாரப்பூக்கள்....

இந்தக் கிராமத்துக் காற்றில்
நைட்ரஸ் ஆக்சைடு
கலந்திருந்ததோ என்னவோ
பூக்கள்
புன்னகைத்துக்
கொண்டிருந்தன.

அந்த
மின்விளக்குப் பூவை
தொட்டேன்.
10 வோல்ட் ஏ.சி. டைனமோ
மின்சாரம் மாதிரி
விறுவிறுவென்று ஏறியது
கையில் குத்திய கொடியின்
முள்.

தேன்கூடு மின்விளக்கு.

கிளைதொட
கருந்தேனீக்கள் வட்டமிட
இருட்டு.
பகலில்
இருள் தரும் விளக்கு.

அதோ
விண்வெளிபயணி
இல்லை
ரோபோ.

மரத்தில் கட்டப்பட்டு.

இவர்களை இந்தக் கிராமம்
இப்படிதானா மதிப்பது?

சோளக்கொல்லை பொம்மை.

இது என்ன
பறக்கத் தெரியாத பலூன்.
பச்சைக்கொடி நூலில்
பரங்கிக்காய்.

கொடிநூலை அறுத்துவிட்டால்
இந்த பலூனும்
இளைத்துவிடும்.
எப்படி
கட்டப்படும் நூலே
காற்றை ஊதி பெரிதாக்கிறது?

இதுவெல்லம்
இந்த மண்ணின் இரகசியம்.

எழுந்து நடந்தேன்:
ஏறாதபடிக்கு
கருக்கு கட்டப்பட்ட
தென்னைமரம்.
எப்படி ஏறினான்
அவன்?

வானவில்லின்
நிறங்களெல்லாம்
பிரிந்துகிடந்தன மண்ணில்

மலர்களிலும் கொடிகளிலும்
நீறிலுமாய்.

கணநேரம் என் கண்கள்
முப்பட்டகக் கண்ணாடியாய்

நிறப்பிரிகை நிகழ்த்தின.

கிளையில்
கட்டித்தொங்கும்
கட்டை விளக்குமாறு.

அடுத்த மரத்தோடு
அப்படி என்ன சண்டை?

ஓ
இந்த மரத்தின்
இலைகளை
மறைத்துக்கொண்டு
அடுத்த மரம்
ஸ்டார்ச் தயாரிக்கிறதோ?

தெரிந்தவள் வந்தாள்.
விளக்கமாறின் விளக்கம்
புரிந்தது.

அது
கல்லெறிபவனுக்கு
காட்டவாம்.

தொடர்ந்து நடந்தேன்.
இரவில்தானா
மின்வெட்டு
நிகழவேண்டும்?
ஒரு
சூரிய மின்விளக்கு முன்

எத்தனை
நட்சத்திர சிம்னிகள்
ஏற்றினாலும்
நிகராகுமா?

நட்சத்திர விளக்குகள்
நனைய அணைய காற்று
மழை.

மழையில் நனையவும்
ஆசை
அந்த
குடிசையில் ஒதுங்கவும்
ஆசை.
இரண்டு ஆசைகளும்
ஈடேறல்,
உள்ளே தூறல்
வெளியே மழை
ஒழுகும் குடிசை.

நினைவுகள் நீள நெஞ்சம்
நனைய

இனி
இந்த காற்றுப் படாவிட்டால்
என்
கல்லறைக்குக்கூட
வியர்த்துப் போகும்.

*-பட்டுக்கோட்டை தமிழ்மதி.*

## ஒரு வசந்தத்தின் இறப்பு


காலப்பெண் வரைகிற
ஓவியத்தில்
கருநிறத் தீற்றலுக்கான
பொழுது முகிழ்கிறது.
பூவசந்தத் தேன் காற்று
விடைபெற்றுப்
போயாயிற்று.
வருடும் இளந் தென்றலில்
ஏறியமர்ந்து அழுத்துகிறது
கொடுங்குளிர்.
கோபமுறும் காற்று
சொருக்கும் சாட்டையில்
கம்பளி காவச்
சபிக்கப்படுகிறார்கள்
மனிதர்கள்.
கரையோரத்துப்
பறவைகளின்
கானங்கள் தொலைத்த
துயரில்
உழன்று உறைகிறது
அழகு நதி.
மனதில் பச்சிலைக்
கனவுகள்
இன்னமும் மீதமிருக்க
காலம் பூசும் மஞ்சள்

வர்ணத்தை
உலுக்கி உதறுகின்றன
மரங்கள்.
சொந்த மொழி
கோளத்தெருக்கள்
சோர்வாய் ஊருகின்றன
உயிர் நெரிக்கும்
கயிறுகளாகி.

வெண்பனி மூட்டத்
தெருவின்
தொலைவிலிருந்து
வெளிப்படும்
வெள்ளையன் ஒருவன்
எனக்குமானதென
நான் நம்புகிற சிரிப்பை
என் கைப்பூனைக்குட்டிக்கு
சிந்துகிறான்.
துயர் சாலையில்
தொடர்கின்றன
உயிர்களின் பயணங்கள்.
இவ்வாறாக...இங்கே
ஒரு வசந்தத்தின் இறப்பு
நிகழ்ந்து கொண்டிருக்கிறது.


*-சாரங்கா தயாநந்தன்.*

## இரத்ததானத்தில் உலக சாதனை



அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் மிகுசிறி பல்கலைக்கழக மாணவர்கள் 3,539 பேர் ஒரே நாளில் இரத்ததானம் செய்து சாதனை நிகழ்த்தியுள்ளனர். 1999ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி இடம் பெற்ற இந்த இரத்த தான நிகழ்வில் சேகரிக்கப்பட்ட மொத்த இரத்தம் 3,155 அலகுகள். இச் சாதனை இன்று வரை முறியடிக்கப் படவில்லை.

## அதி கூடிய அம்புலன்ஸ் சேவை



உலகிலேயே அதிகூடிய அம்புலன்ஸ் வண்டியை வைத்திருக்கும் தொண்டு நிறுவனம் பாகிஸ்தானில் இயங்குகின்றது என்றால் உங்களால் நம்ப முடிகின்றதா? ஆனால் அதுதான் உண்மை. அப்துல் சத்தார் ஈதி எனும் பாகிஸ்தானியரால் 1948 இல் ஆரம்பிக்கப்பட்ட தொண்டு நிறுவனத்தில் இன்று இரவு பகலாக இயங்கிக் கொண்டிருக்கும் அம்புலன்ஸ் வண்டிகளின் எண்ணிக்கை 500 தற்போது நவீன தொலைத் தொடர்புகள் பயன்படுத்தப்பட்டு ரேடியோ கட்டுப்பாட்டின் மூலம் அவை இயக்கப்படுகின்றன.

## பழைமையான மனித உரிமை ஸ்தாபனம்

அடிமைத்தனத்திற்கு எதிரான சர்வதேசம் (Anti slavery International) எனும் அமைப்பே உலகின் அதி பழமையான மனித உரிமை அமைப்பு என அறியப்பட்டுள்ளது. 1787ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வமைப்பானது. 1839ஆம் ஆண்டு ஏப்ரல் 17இல் பிரித்தானிய மற்றும் வெளிவிவகார அடிமைத்தனத்திற்கு எதிரான சர்வதேசம் (BFA SS) என பதிவு செய்யப்பட்டுள்ளது. குழந்தைகள் விபசாரம், மனித வியாபாரம், கடின உழைப்பு ஆகியவற்றிற்கு எதிராகவே இவ்வமைப்பு இயங்கி வருகின்றது.




## மணம் செய்து கொண்டபின்....





**மணம்** செய்து கொண்டு இல்வாழ்க்கையை எல்லோரும் தொடங்கி விடுகிறோம். ஆனால், அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த ஒரு குடும்பத்தை இருவருமாகச் சேர்ந்து உருவாக்க வேண்டி இருக்கிறது. அந்த வழியில் சிறு விஷயங்களில் கவனம் செலுத்துவதற்கும் கூடப் பெரிய அளவில் பலன் கிடைப்பதுண்டு. அவற்றில் சில இவை :



சரியான வாழ்க்கைத் துணை அமைந்தால் போதாது. சரியான துணையாக அமையும் பொறுமை வேண்டும்.

உங்களுக்குக் கிடைக்காததற்காகக் குறைப்படாதீர்கள்.

கிடைத்தவற்றை விட்டுக்கொடுக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

எதிலும் நல்லதையும் இனியவற்றையும் காண முயலுங்கள்.

நேர்ந்தது எதையும் மன்னிக்கவும் போட்டி போடுங்கள்.

எல்லாம் சரிவர முடிந்துவிடாது. ஆனால், அவற்றிலும் ஒரு புன்னகைக்கு இடம் தர உங்களால் முடியும்.

ஒருவருக்காக மற்றவர் எதையும் செய்கிறோம் என்ற நினைவு வேண்டும். ஆனால், நன்றி உணர்ச்சி தெரிய வேண்டியதில்லை.

எந்தச் சிறு காரியத்தையும் பாராட்ட மறக்காதீர்கள். உங்கள் அன்பிற்கு அது ஓர் அடையாளம்.

உங்களிடையே இருக்கும் அன்பிற்கு வயது இல்லை; பருவம்தான் உண்டு. தோற்றம்தான் மாறும்; உணர்ச்சி மாறுவதில்லை.

எந்தக் கோபம் இருந்தாலும் தூங்கும் முன் மறந்து விடுங்கள். அடுத்த நாள் - ஒரு புதிய நாள்!

## உங்கள் குழந்தையின் எதிர்காலம் உங்கள் கையில்தான்!

**ஹோம் வேர்க்** என்ற சொல்லைக் கேட்டவுடன் ஓடி ஒளியும் குழந்தைகள்தான் அதிகம்! அடுத்த நாள் பள்ளியில் ஆசிரியர்கள், அவர்களைத் தண்டிக் கிறார்கள். இதனால் அவர்கள் மெல்ல மெல்ல படிப்பில் பின்தங்கி விடுகின்றனர்.

ஹோம் வேர்க் பற்றி விபரங்களை தினமும் அறிந்து கொள்வது பெற்றோரின் கடமையாகும். நீங்களும் குழந்தைகளோடு அமர்ந்து, அவர்களை ஹோம் வேர்க் செய்ய வைக்கவும். அவர்கள் ஹோம் வேர்க் செய்யும் போது அவர்களோடு அமர்ந்து ஏதேனும் புத்தகம் படிக்கவும். அல்லது ஹோம் வேர்க்கில் அவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்து வைக்கவும்.



குழந்தைகளுக்காக ஒரு டைம் டேபிள் போட்டு, அதில் படிப்பதற்கும் விளையாடுவதற்கும் தனித் தனியாக நேரத்தை ஒதுக்கவும். விளையாடும் நேரத்தில், அவர்களை விளையாட விடவும். படிக்க வேண்டிய நேரத்தில், அவர்களைப் படிக்கச் செய்யுங்கள். ஹோம் வேர்க் செய்யும் நேரத்தில் டி.வி., ரேடியோ போன்றவற்றை போடாதீர்கள். குழந்தைகளின் கவனம் படிப்பின்மேல் செல்லாமல் திசை திரும்பக்கூடும்.

குழந்தைகளுக்காக ஒரு நோட்புக் தயார் செய்து, அதில் அவர்கள் செய்த ஹோம் வேர்க்கைப் பற்றி எழுதி வைக்கவும். அவர்கள் செய்யாத வேலை பற்றியும் குறித்து வைக்கவும். அடிக்கடி குழந்தைகளின் பள்ளிக்குச் சென்று அவர்களைப் பற்றி ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அவர்கள் படிப்பின் முன்னேற்றத்தைப் பற்றி தகவல் அறியுங்கள்.

உங்கள் குழந்தை எந்தப் பாடத்தில் வீக்காக உள்ளதோ, அதற்கு தனியே டியூஷன் வைக்கலாம். அதைக் கவனிக்காமல் விட்டுவிட்டால், பின்னர் அந்தப் பாடத்தில் அவனால் முன்னேற்றம் அடைய முடியாது.

நாளை உங்கள் குழந்தை வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று நினைத்தால், இன்றே அதற்கு அஸ்திவாரம் போடவும். உங்கள் குழந்தையின் எதிர்காலம் ஒளிமயமாக அமையும்!

## அழகுக் குறிப்புகள்

**ஒவ்வொரு** பெண்ணும் அழகாகவும் இளமையோடும் இருக்க ஆசைப்படுவாள். மனித வாழ்வில் இளமை மாறாதிருக்க முடியாது. என்றாலும், பெண்கள் வாழ்வின் சகல பருவங்களிலும் தங்கள் தோற்றத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். அழகு முகத்தில், உடலில் உண்டு.

அதே போல பேச்சில், உடுத்தும் உடையில், நடக்கும் ஒயிலில், பிறரிடம் காட்டும் அன்பான பணிவில், மரியாதையில், செயலில் கூட அழகு குடி கொண்டிருக்கிறது. ஏன் கையெழுத்தில் கூட அழகு இருக்கிறது.

முகத்தில் கோபமும், கவலையும் எப்போதும் தாண்டவமாடினால் முகச் சுருக்கங்கள் படிந்து, வயதை அதிகமாகக் காட்டும் என்பார்கள். முகச் சுருக்கங்கள் சிறு வயதிலிருந்தே ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஒழுங்கற்ற வாழ்க்கை ஆரோக்கியத்தைப் பாதிக்கிறது. இதற்கு இடம் கொடுக்காமல் உடலையும், உள்ளத்தையும் நாம் பாதுகாத்தால் அதுவே ஒரு நல்ல தோற்றத்தை அளிக்கும்.

பொதுவாக முகத்தில் பூசும் பல்வேறு கிரீம்களைப் பெண்கள் உபயோகிக்கும் முன் சருமம் சாதாரணமானதா, எண்ணெய்ப் பசை மிகுந்திருக்கிறதா என்பதைப் பார்த்தே எந்தக் கிரீமை உபயோகிப்பது என்பதைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இரவு தூங்கப் போவதற்கு முன்னால் கண்களில் ஒரு சொட்டு விளக்கெண்ணெயை விட்டு வந்தால், கண்கள் அழகாக மின்னும்.

குளிர்ந்த நீரில் நனைந்த பஞ்சு உருண்டைகளை மூடிய கண்களில் மேல் பத்து நிமிடங்கள் வைத்துப் படுத்திருந்தால், கண்களில் உள்ள சோர்வும், எரிச்சலும் தீரும்.

வாரத்திற்கு ஒரு முறை சிறிதளவு உப்புடன் எலுமிச்சை சாற்றையும் சேர்த்து பற்களை, அழுந்தத் தேய்த்தால், கறைகள் நீங்கி பற்கள் வெண்மையாக இருக்கும்.

தினமும் காலையில் தேனை இளம் சூடான வெந்நீரில் கலந்து பருகினால் உடல் பருமன் குறையும்.

ஸ்கிப்பிங் (கயிறு தாண்டுதல்) மிகவும் நல்ல உடற்பயிற்சி, முடிந்தபோது அந்த உடற்பயிற்சியைச் செய்யலாம்.

வீட்டு வேலைகள் செய்ய ஆட்கள் இருந்தாலும் பெண்கள் உடல் உழைப்புக்காக ஏதேனும் வீட்டுக் காரியங்கள் செய்வது நல்லது. உடற் பயிற்சி போல - உடலுக்கு நன்மை தருவது வேறு ஒன்றுமல்ல.

## தாய்ப்பாலே மிகவும் சிறந்தது

**தா**ய்ப்பால் குறையும்போது குழந்தைக்குப் புட்டிப்பால் தொடங்கப்படுகிறது. குழந்தை பசிக்காக அழும்போது பால் புட்டியை வாயில் வைத்தவுடனே வெளியே தள்ளி விடுகிறது. ஏனெனில் ரப்பர் துவாரம் சரியாக இல்லாமல் இருக்கலாம் அல்லது பால் புளிப்பாகவோ, சூடாகவோ, அல்லது குளிர்ச்சியாகவோ, இனிப்பாகவோ இருக்கலாம்.



***புட்டிப்பால் கொடுக்கும் பொழுது கவனிக்க வேண்டியவை :***

பால் புட்டிகள் மற்றும் இளம் குழந்தைகளுக்கு வேண்டிய உணவு ஊட்ட உபயோகிக்கும் பாத்திரங்களைச் சுத்தமாக வைத்திருத்தல் அவசியம்.

பால்போத்தல் கறையின்றி முதலில் சுத்தமாகப் பிரஷின் உதவியினால் கழுவ வேண்டும். நாற்றம் இருத்தல் கூடாது.

மிதமான சுடுநீரில் மீண்டும் ஒருமுறை பிரஷின் துணைகொண்டு கழுவப்பட வேண்டும்.




பாத்திரத்தில் போதுமான அளவு நீரை எடுத்துக்கொண்டு, குப்பிகள் தவிர மற்றவற்றை எல்லாம் போட்டு அடுப்பில் வைக்க வேண்டும்.

நீர் கொதி வந்து 5 நிமிடங்கள் வரை வைக்க வேண்டும். இறுதியாகக் குப்பியைப் போட வேண்டும். 2 நிமிடங்கள் கழித்து எடுக்க வேண்டும். கூடுமான வரையில் கையால் தொடாமல் எடுக்க வேண்டும்.

காற்றுப் புகாமல் வேறொரு பாத்திரத்தில் வைத்து மூடி வைக்க வேண்டும். பயன்படுத்தப்படும் பால் போத்தல்கள், டம்ளர், தட்டு முதலியவற்றின் சுத்தம் குழந்தைகளின் ஆரோக்கியத்தைக் காக்கும். தூய்மையாக்கப்பட வேண்டிய பொருட்களை முதலில் குளிர்ந்த நீரில் நன்கு அலச வேண்டும்.

பால்போத்தல் துவாரம் மிகப் பெரியதாகவோ அல்லது மிகச் சிறியதாகவோ இல்லாமல் சரியாக இருக்க வேண்டும். ரப்பரில் துவாரம் பெரியதாக இருந்தால்



தாய் போத்தலை மட்டமாகப் பிடிப்பதால் நிறைய காற்று உள்ளே சென்று குடல் தசைகளை நீளச் செய்கிறது. எனவே குழந்தை உணவை வாந்தி செய்து விடுகிறது. ஆகவே ரப்பரில் துவாரம் சிறியதாகவும் அமுக்கினால் பால் அளவு மெல்லியதாக வருமாறும் இருத்தல் வேண்டும்.

பால்போத்தலை சாய்ந்த நிலையில் பிடிக்க வேண்டும். அப்போதுதான் ரப்பர் முழுவதும் பால் நிரம்பி இருக்கும். இது அதிகப்படியான காற்று உட்கொள்வதைத் தவிர்க்கிறது.

***புட்டிப்பால் தருவதால் ஏற்படும் விளைவுகள் :-***

புட்டிப் பாலுணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு தொற்று நோய்கள் வர அதிக வாய்ப்புள்ளது.

பெரும்பான்மையான குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டு உணவுச் சத்துக் குறைவு ஏற்படுகிறது.

பாலின் திரவ அளவு அதிகரிக்கச் செய்வதாலும் அளவை குறைக்கச் செய்வதாலும் மீண்டும் குழந்தை பாதிக்கப்படுகின்றது.

ஆகவே தாய்ப்பால்தான் குழந்தைகளுக்கு மிகவும் சிறந்தது. சரியான காரணம் இல்லாமல் தாய்ப்பாலை நிறுத்திவிட்டு புட்டிப்பால் தருவது நல்லதல்ல.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

### முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

### முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

09

பெயர் : ....................

முகவரி : ....................
....................
....................

தே-அ- அட்டை இல : ....................

கையொப்பம் : ....................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
14.02.2006

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி 09**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

பரிசுப் போட்டி இல - 07
பரிசு பெறும்
அதிர்ஷ்டசாலி

**இ.லூர்த்தம்மா**
**185, குட்செட் வீதி, வவுனியா.**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* —ஷோபா—

### வாழைப்பழ முந்திரி ஐஸ்கிரீம்

***தேவையான பொருட்கள் :-***

முந்திரிப் பருப்பு - 1/4 கிலோ

ஆப்பிள் சாறு - 1 கோப்பை

பழுத்த வாழைப்பழங்கள் - 3
(பச்சை நாடான் போன்று பெரியது)

பால் - 1 கோப்பை

தேன் - 1 மேசைக் கரண்டி.

வெனிலா எஸென்ஸ் - 1 தேக் கரண்டி.

***செய்முறை :-***

முந்திரிகளை மிக்ஸியில் போட்டு மாவாக அரைத்துக்கொண்டு அதனுடன் ஆப்பிள் சாறு ஊற்றி, கலவை மாவாக, நுண்ணியதாக அரைபடும் வரை அரைக்கவும். இத்துடன் வாழைப்பழம், பால், தேன், வெனிலா எஸென்ஸ் போட்டு மென்மையானதாக அரைத்துக்கொள்ளவும். இதனை ஒரு பிளாஸ்டிக் பாத்திரத்தில் போட்டு ப்ரீசரில் உறைய விடவும். இரவு முழுவதும் உறைந்த பின்னர், ஐஸ்கிரீம் கோப்பைகளில் போட்டுப் பறிமாறலாம்.

# ஒரு தாய் மகள்

> **சென்ற வாரம்**
> விபத்துக்குக் காரணமாக இருந்த லாராவை பற்றிய விபரங்களை அறிய தாரென்ஸன் முயலுகிறான், இதற்கிடையில் தாரென்ஸனின் மகள் க்ளோ கொஞ்சம் குணமாகி வீட்டுக்கு வருகிறாள், விபத்து நடந்ததை பற்றியதான குற்ற உணர்வை அவளுக்குக் குறைப்பதற்காக யாரும் விபத்து பற்றி எதுவும் பேசாமல் இருக்கிறார்கள்....

ஒவ்வொரு சிறு காரியத்துக்கும் பிறர் உதவி தேவைப்பட்டுக் கொண்டு தான் இருக்கும். ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு அழைத்து வந்ததோடு பிரச்சினை தீர்ந்து விடவில்லை. பிரச்சினையின் ஆரம்பமே இனிமேல்தான் என்பது பேஜுக்கும் புரிந்தது. தாரென்ஸனுக்கும் புரிந்தது.

சமையலறையில் காப்பி அருந்திக் கொண்டிருந்த போது, "எப்படித்தான் சமாளிக்கப் போகிறீர்களோ, பாவம்" என்றாள் பேஜ்.

"உதவிக்கு வரும்படி ஒரு பெண் மணியை அமர்த்தியிருக்கிறேன். தினம் வந்து இரண்டு மணி நேரம் பார்த்துக் கொள்வாள். அந்த நேரத்தில் நான் என் வேலைகளை முடித்துக்கொள்ள வேண்டும்" என்று சொன்னவனைப் பிரமிப்புடன் நோக்கினாள் அவள். எப்படிப்பட்ட மனோதிடம் இவருக்கு! இவ்வளவு பேர் இவரைச் சார்ந்து நிற்கிறார்கள்... ஏன், நாம் கூடத்தான்... ஆனால் எதற்கும் கலங்காமல் இருக்கிறாரே...!

"உன் நிலைமை எப்படி?" என்றான் தாரென்ஸன். பிராட் பிரிந்து போன இந்த இரண்டு வாரமாக அவளை அவன் அதிகம் சந்திக்கவில்லை.

"சில சமயம் மனசுக்குக் கஷ்டமாக இருக்கிறது. சில சமயம் தைரியம் ஏற்படுகிறது. வேறு சில சமயம் எந்தப் பாது காப்பும் இல்லாமல்.. என்னைக் கவனித்துக் கொள்ள யாரும் இல்லாத மாதிரி..."

"கற்பனை செய்து கொள்ளாதே. இதற்கு முன்னால் மட்டும் உன்னை யார் கவனித்துக் கொண்டார்கள்? நீதானே குடும்பத்தைப் பார்த்துக் கொண்டாய்? உன் கணவன் என்ன செய்தான்?"

"உண்மைதான்" என்று ஒப்புக் கொண்டாள் பேஜ். "அவரிடம் ஒரு சாவி இருப்பதால் அடிக்கடி வீட்டுக்கு வந்து சமையல் பாத்திரம் துணிமணி அது இது என்று ஏதாவது எடுத்துக் கொண்டு போகிறார். 'இன்னது எடுத்துக் கொண்டு போகிறேன்' என்று ஒரு குறிப்பு மட்டும் எழுதி வைத்து விடுகிறார். எப்போது வருகிறார். எப்போது போகிறார் என்பதே தெரிவதில்லை" என்று சிரித்தாள்.

அடுத்த வாரத்தில் ஒருநாள் பேஜ் ஆஸ்பத்திரியில் ஆலிஸனின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தபோது தாரென்ஸன் வந்தான். கையில் பிக்னிக் கூடையும் அதில் பகலுணவும் கொண்டு வந்திருந்தான் "வா, புல்வெளியில் போய் உட்கார்ந்து சாப்பிடலாம்" என்றான்.

அப்போது தான் ஆலிஸனுக்கு ஒரு நர்ஸ் மஸாஜ் செய்து முடித்திருந்தாள். இந்தச் சிகிச்சைகள், பயிற்சிகள், சுவாசக் குழாய்கள், ட்யூப்கள், அசைவற்றுக் கிடக்கும் ஆலிஸன் - எல்லாம் யந்திரம் போலப் பழக்கமாகிவிட்டன பேஜுக்கு. இனி இங்கே வர வேண்டாம் என்று கூட ஓரோர் சமயம் நினைத்துக் கொள்வாள். ஆனால் அவளையும் அறியாமல் அவள் கால்கள் அவளை இங்கே இழுத்து வந்து விடும். நர்ஸ்கள் அவள் வருகையை வைத்துத் தங்கள் கடிகாரத்தைக் கூடச் சரி செய்து கொள்வார்கள்.

ஆலிஸனை விட்டு எழுந்து போக மனமில்லாமலே தாரென்ஸனுடன் சென்றாள். சாப்பிட்ட பின்னும் வெகு நேரம் வரை ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு வெகு நேரம் புல்வெளியில் படுத்திருந்தார்கள்.

"இப்படி என்னைப் பார்ப்பதற்கு வந்து கொண்டே இருக்கிறீர்களே, அலுப்பாக இல்லை?" என்று பேஜ் கேட்டாள்.

"அலுப்பா! உன்னிடம் எனக்குள்ள காதலை நீ அறியவில்லை. பேஜ்.. ஐ லவ் யூ. ரொம்ப ரொம்பக் காதலிக்கிறேன். உன்னிடம் எனக்கு என்றைக்குமே அலுப்பு ஏற்படாது. ஒன்று சொல்லட்டுமா? நமக்கு பத்துக் குழந்தைகள் பிறக்க வேண்டும் என்பது என் ஆசை!"

"ஐயோ!" என்று சிரித்து விட்டாள் பேஜ். "ஆண்டி கூட ஒருநாள் பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போது 'எனக்கு ஒரு தம்பிப் பாப்பா பிறக்குமாம்மா?' என்று கேட்டான். 'அதற்கெல்லாம் வயசாகிவிட்டது' என்றேன்", என்று பேசியவாறு ஆஸ்பத்திரிக்குத் திரும்பினாள் அவள். கூடவே தாரென்ஸனும் வந்தான். கைகோர்த்துக் கொண்டு, தாழ்வான குரலில் சிரித்துப் பேசிக் கொண்டு ஆலிஸனின் படுக்கையைத் திரும்ப அடைத்தார்கள்.

ஆலிஸனின் கைகளை வருடிக் கொடுப்பதையும், விரல்களைப் பிரித்து மூடுவதையும், அவளுக்குக் கேட்கிறதா இல்லையா என்பதைப் பற்றிக் கவலைப் படாமல் தான் பாட்டுக்கு அவளிடம் பேசிக் கொண்டிருப்பதையும் பார்த்தபோது, இந்த மாதிரி ஒரு தாயை உலகத்தில் வேறெங்கும் பார்க்க முடியுமா என்று தாரென்ஸன் ஆச்சரியப்பட்டான்.

**எழுதியது: டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

"வெளியில் புல்வெளி எவ்வளவு அழகாய் இருக்கிறது தெரியுமா ஆலி? தாரென்ஸன் அருமையான சாப்பாடு எடுத்து வந்திருந்தார். நாங்கள் அங்கே உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்.." என்று பேஜ் சொல்லிக் கொண்டிருந்தபோது, திடீரென்று ஆலிஸனிடமிருந்து ஒரு மெல்லிய முனகல் கேட்டது. அவள் தலை மெதுவாகத் தாயை நோக்கித் திரும்பியது.

பேஜுக்கு மூச்சு நின்றது. பேச்சை நிறுத்திக் கொண்டு மகளை வெறித்துப் பார்த்தாள். ஆலிஸனின் அசைவைப் பார்த்ததால் அவள் விழிகள் குத்திட்டு நின்று விட்டன. ஆனால் அதன் பிறகு ஆலிஸ்னிடம் வேறெந்தச் சலனமும் இருக்கவில்லை. பழையபடி ஆகிவிட்டாள். கருவிகளின் ரீங்காரம் மட்டுமே கேட்டது.

பிரமித்துப் போனவளாகத் தாரென்ஸனை நோக்கினாள். "ஆலி அசைந்தாள்..



தெய்வமே! நீங்கள் பார்த்தீர்களா? ஆலி அசைந்தாள்! அசைந்தாள்!" என்று கூறினாள். நர்ஸ்கள் தங்கள் தங்கள் இருக்கையில் இருந்தபடியே அந்த அசைவைக் கவனித்தார்கள். இரண்டு நர்ஸ்கள் ஓடி வந்தார்கள். "என் பக்கமாக முகத்தைத் திருப்பினாள்! என்னைப் பார்த்துத் திரும்பினாள்!" என்றாள் பேஜ். குரல் தழு தழுத்தது. கண்களிலிருந்து கண்ணீர் கொட்டியது. குனிந்து மகளை முத்தமிட்டாள். "என் கண்ணம்மா, நீ என் பக்கமாய்த் திரும்பினாய், இல்லையா? நான் பார்த்தேனே? உன் முனகல் எனக்குக் கேட்டதடி என் செல்லமே!"

தாரென்ஸனுக்கும் கண்ணில் நீர் தழும்பியது. இதற்குள் நர்ஸ்கள் விரைந்து சென்று டாக்டர் ஹேமர்மேனை அழைத்து வந்தார்கள். தாங்கள் கவனித்ததைச் சொல்லி, பதிவாகியிருந்த டேப்பைக் காட்டினார்கள். மூளையின் அசைவு டேப்பில் அலைகளாகத் தெரிந்தன.


ஆனால் டாக்டர் ஹேமர்மேன் பரபரப்படையவில்லை. "எதனால் இப்படி என்று சொல்வதற்கில்லை." என்றார் எச்சரிக்கையுடன். "இது ஒரு நல்ல அறிகுறியாகவும் இருக்கலாம். அல்லது தற்செயலான விஷயமாகவும் இருக்கலாம். ஆனால் நினைவு திரும்பக்கூடும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. பார்க்கலாம்..."

அவருடைய பேச்சினால் பேஜின் ஆனந்தம் குறையவில்லை. ஆலிஸனைப் பார்த்தபடி அருகிலேயே நின்றிருந்தாள்.

(தாய் தொடர்வாள்.....)

# காதலித்துப் பார்! பெப்ரவரி 14


காதலர்களின் திருவிழாவாகப் போற்றப்படும் தினம் பெப்ரவரி 14. எந்த மொழியில் காதலைச் சொன்னாலும் சொல்லப்படுகின்றபோது அதிலொரு இதமும் அழகும் சேர்ந்துவிடுகிறது. ஏனெனில் எல்லா உயிர்களினதும் உணர்வுகளை உரசி பிடிப்பின் மீதான தீயை வளர்த்து விடுவதால் குறிப்பிட்ட இடைவெளிக்குள் சிலர் குளிர் காயும் அதே வேளை, வரையறை தாண்டி நெருங்கிப் போகும் போது காதல் காயப்படுத்தியும் விடுகிறது. ஆனால் காதலை தீ என்று கூறி விட முடியாது. அனுபவிக்கத் தெரிந்தவர்க்கு மட்டும் சுடாத தீ. எல்லோருக்குள்ளும் காதல் இருப்பதால்தான் மற்றவர் மீதான பார்வை ஒவ்வொரு வினாடியும் புதுப்பிக்கப் படுகிறது. இளமையில் மட்டுமே காதல் கண்ணா மூச்சி ஆடுகிறது என்று யாரும்




சத்தியம் செய்ய முடியாது. நேசிப்புக்களை சுமந்து வாழ முதுமைக்குள்ளும் காதல் ஊஞ்சலாடுகிறது. எத்தனையோ காதல் தோல்விகள். அத்தனை யிலும் தோற்றுப்போனது காதலர்களே தவிர, காதலில்லை. ஏனெனில் காதல் சாகாவரம் பெற்றது. ஆண்களின் அவசரத்திலும் பெண் களின் அறியாமையிலும் சில சமயம் காதல் கற்பிழந்து விடுகிறது. இன்னும் சில காதல்கள் ஆணின் கவலையீனத்தாலும், பெண்ணின் பொறுமையின்மையாலும் தற்கொலை செய்து கொள்கின்றன. மனிதத்தின் எல்லா அசைவுகளும் அர்த்தப்படுவது காதலில் தான். ஆனால் ஒரே ஒரு முத்தம்தான் அதை உறுதிப்படுத்துகிறது. சின்னச் சின்ன கோபம், மெல்லிய முறைப்பு நீண்ட இடைவெளி எல்லாவற்றையுமே ஒரு புன்னகை உடைத் துப் போடுகிறது.

அவளோ அல்லது அவனோ ஞாபகமாகவே இருக்கின்றபோது அதற்காக பரிசுகள் எதற்கு? உதடுகள் ஒருவேளை இறுக்கி மூடப்பட்டாலும் தூய்மையான காதலில் இதயங்கள் எப்போதும் திறந்தே வைக்கப் படுகின்றன. பிரியத்திற்குரிய அவனினதோ, அவளினதோ சுய கௌரவமும் சுதந்திரமும் மதிக்கப்படுகின்ற போது இடைவெளி குறைக்கப்பட்டு காதல் சுகப்படுகிறது. காதலால் மட்டுமே தேசம், நாடு, இனம், மொழி, நிறம் என்பவற்றின் முள்ளந் தண்டை முறித்துப்போட முடிகிறது. பணம் கூட காதலுக்கு இரண்டாம் பட்சந்தான். காமம் போர்த்திக் கொள்கின்ற போது காதலுக்கு சில நேரம் காய்ச்சலடிக்கிறது. அழகு என்பது கூட காதலில் அவ்வப்போது வீசி எறியப்பட்டு விடு கிறது. இனம் புரியாத காதல் இமைப் பொழுதில் தீபமேற்றி விடுகிறது. புரியாதவர்க்கு காதல் சாக்கடை. புரிந்தவர்க்கு அது பூக்கடை.

பார்வைகளின் தூது படிக்கப்படுவது. காதலில் மட்டுந்தான். கர்ப்பத்தை விடவும் காதலின் சுமை பெரிது என்பது இதயத்தில் இன்னொருவரை ஏந்தித் திரிந்தவர்களுக்குத் தெரியும். காதல் நிராகரிக்கின்றபோது மனிதப் பிறவி அர்த்தமற்றதாகி விடுகிறது. காதலர் களின் தற்கொலைக்காக காதல் கண்ணீர் விடுவதில்லை. ஏனெனில் அவர்களால் காதல் கொச்சைப்படுத்தப்படுகிறது. வாழ்வதே காதலின் மரியாதைக்குரியது. பொருத்தப்படாத இதயங்களில் காதல் பூத்திருப்பதாக கனவு காண்பவர்களுக்கு ஏமாற்றத்தில் ஜன்னல்



திறக்கப்படுகிறது. ஒரே ஒரு வார்த்தைக்காகவும் ஒரேயொரு பார்வைக்காகவும் காத்திருக்கின்றபோது காதலில் பிறப்பு அர்த்தப்படுகின்றது.

*-தாமரைமகன், திருமலை.*

# காதல்இதயத்தின் ஞானம்

**உணர்வில்** முளைத்து மனதில் வளர்வது காதல்.

பாறை மனதை நீராக உருக வைக்கிறது.

காதல் சில நேரங்களில் முள்!

சில நேரங்களில் பூ!

காதல் சில நேரங்களில் தீ!

சில நேரங்களில் அது தேன்!

முரண்கள் ஒன்றாக இருப்பது காதலில் மட்டுந்தான்.

தென்றல் உன்னில் மோதி நீ உடைந்து போவாய்.

பெரும் மலையே உன்னில் மோதி மலையே சிதறிப் போகும்.

இப்படித்தான் காதல்

காதலிக்காத இலட்சம் பேர்களை விட காதலிக்கின்ற ஒருவன் புனிதமானவன்.

காதலிக்காத கோடிப் போர்களைவிட காதலித்துத் தோற்ற ஒருவன் மிகச் சிறந்தவன்.

காதலை எதுவுமே தீர்மானிப்பதில்லை. அந்த நிமிடத்தைத் தவிர.

உன் நரம்புகளுக்குள் மின்சாரம் உருவாகத் தொடங்குகிறது.

காதலிப்பவனா நீ! உன் குருதி சிவப்பு நிறமில்லை.

சிவப்பு அபாயத்தைக் குறிப்பது.

காதல் அபாயமில்லை சோக ஆனந்தம். ஆனந்த சோகம்.

ஆதலால் காதலிப்பவனின் குருதி பால்நிறம்.

வெண்மை சினேகிதத்தின் நிறம். அது சமாதானத்தின் சின்னம்.

உண்மையின் நிறம் வெண்மைதான்.

காதலிக்காத ஆயிரம் அறிஞர்களை விட காதலிக்கின்ற ஒரு முட்டாள் மேலானவன்.

அறிஞன் மூளையால் வாழ்பவன்.

காதலிப்பவன் இதயத்தால் வாழ்பவன்.

காதல் தோன்றும்போது மனம் மென்மையடைகிறது.

அது மேன்மை பெறத் தொடங்குகிறது.

காதல் கனவுகளை நேசிக்க வைக்கிறது. அவற்றைச் சேமிக்கச் சொல்கிறது.

காதல் தோன்றாத இதயம் மலட்டு மரத்திற்கு ஒப்பானது.

அது நிலவு இல்லாத வானம் போன்றது.

காதலுக்காகச் சிந்துகின்ற ஒரு கண்ணீர்த்துளி ஒரு தேன் சாற்றை விடச் சுவை மிக்கது.

காதல் தோன்றியதும் இதயத்திற்கு விழிகள் முளைக்கின்றன.

மனதால் பார்க்கத் தொடங்குகிறாய்.

புதிய புதிய உணர்ச்சிகளைக் காதல்தான் உனக்கு அறிமுகப்படுத்துகிறது.

வேறு ஒரு சோகத்திற்காக அழுகின்ற அழுகை பாரமானது.

காதலுக்காக அழுகின்ற அழுகையோ ஈரமான இனிப்பாகிறது.

நீ கண்கள் மூடினாலும் உனக்கு உன் உயிரின் முகம் தெரிகிறது.

விழிகளைத் திறந்து வைத்துக் கொண்டு கனவு காண ஆரம்பிக்கிறாய் நீ!

உன் விரல்களில் பூக்கள் மலரத் தொடங்குகின்றன.

நீ நேசித்த உயிரைக் கைப்பிடிக்கும்போது உன் வானமே நிலாக்களால் நிரம்புகிறது.

காற்றைக் கூடக் கண்களால் பார்ப்பாய் நீ!

காதலிக்கின்றபோது இளமை அப்படியே நின்று விடுகிறது.

புத்தம் புதிய வயது உனக்குள் தொடங்குகிறது.

இலட்சம் ரூபாயை விட ஒரு முத்தம் உன்னைப் பெறுமதியாக்குகிறது. ஆதலால் - காதல் இதயத்தின் ஞானம்.

*-ஏ.சி.றாஹில்.*

# செங்கடலில் நிகழ்ந்த பயங்கர கப்பல் விபத்து!

**300 பயணிகளுடன்** சவூதி மேற்கு துறைமுகத்தில் இருந்து ச·.பகா நோக்கிச் சென்றுக் கொண்டிருந்த எகிப்து கப்பல் செங்கடலில் மூழ்கி விட்டதாக எகிப்து கடற்சார் துறை இயக்குனர் கூறியுள்ளார்.

சவூதி துறைமுகமான டுபாவில் அந்நாட்டு நேரப்படி இரவு 7.00 மணிக்கு புறப்பட்ட சலாம் 98 என்ற இந்தக் கப்பல், எகிப்து துறைமுகமான ச·.பகாவிற்கு அதிகாலை 3 மணிக்கு வந்து சேர்ந்திருக்க வேண்டும். ஆனால் கப்பலுடனான அனைத்து ராடார் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டது.

இதனையடுத்து சவூதி மற்றும் எகிப்து கப்பற்படை கப்பல்கள் மற்றும் ஹெலி காப்டர் களும் தேடுதல் பணியை மேற்கொண்டது. கப்பல் ராடாரில் கடைசியாக தெரிந்த இடத்தில் சடலங்கள் மிதந்து கொண்டி ருந்ததும், மீட்புப் படகில் மூவர் வந்து கொண் டிருந்ததும் தெரிய வந்ததாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பயணக் கப்பல் செங்கடலில் மூழ்கு வதற்கு முன்னர், பல மணித்தியாலங்கள் வரை, அதில் தீப்பற்றி எரிந்ததாக, உயிர் பிழைத்த பயணிகள் தெரிவித்தார்கள். அதில் பயணித்த ஆயிரம் பேர் வரை கடலில் மூழ்கி மரணித்திருக்கலாமென அஞ்சப்படுகிறது. சவூதி அரேபியாவிலிருந்து இக்கப்பல் புறப்பட்டு. சிறிது நேரத்துக்குள் இதில் தீப்பற்றிக் கொண்டது. எனினும் முழுமையாக மூழ்குவதற்கு இரு மணித்தியாலங் களுக்கு முன்னர் அது எகிப்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறது என அவர்கள் கடும் கோபத்தோடு கூறினார்கள்.

இக்கப்பலில் 1,400 பேர் வரை பயணித் துள்ளனர் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. விபத்துக்குள் சிக்கியதும், 350 பயணிகள் கப்பலிலிருந்து மீட்கப்பட்டார்கள். ஏஞ்சியோர் மூழ்கி இறந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது. விபத்துச் செய்தி பரவியதும் உறவினர்கள் திரண்டு வந்து, எகிப்திய ஷபாகா துறைமுகத்தில் கூடினார்கள். அதிகாரிகள் தமக்கு போதிய தகவல்கள் தரவில்லை என அவர்கள் ஆத்திரப் பட்டார்கள்.

கூட்டத்தைக் கட்டுப்படுத்த முற்பட்ட கலகம் அடக்கும் பொலிஸாருக்கும் கூ·டத்தினருக்கு மிடையில் கைகலப்புகள் இடம்பெற்றன. துறைமுகப்பகுதி அல்லோல கல்லோலப் பட்டது. சிலர் பொலிஸாரை நோக்கி கற்களை வீசினர். சட்டம், ஒழுங்கை நிலை நாட்ட பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர். கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் பயன்படுத் தினர். இவ்விபத்து குறித்து,



அதிகாரிகள் எமக்கு தகவல் தருகிறார் களில்லை. அசிரத்தையாக இருக்கிறார்கள். சடலங்கள் எங்கே? உயிர் தப்பியவர் களை எங்கே கொண்டு செல்கிறார்கள்? என கெடிர் மொஹமத் என்பவர் ஆவேசத்தோடு கேட்டார் என ராய்ட்டர் செய்திச் சேவை குறிப்பிட்டது.

இக்கப்பலின் பெயர் அல் சலாம் பொக்காசியோ 98 என்பதாகும். சவூதி அரேபியாவிலுள்ள ரூபா என்னு மிடத்தி லிருந்து வியாழக்கிழமை இரவு இக்கப்பல் புறப் பட்டது. அல் சலாம் 98 இத்தாலியில்

1970ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. இதில் 1,487 பேர் வரை பயணிக்கலாம். நீளம் 388 அடி மொத்த எடை 11, 779 தொன். உரிமையாளர் எல்.சலாம் மேரிடைம். கப்பல் நீண்ட நேரம் தீப்பற்றி எரிந்தது. எனினும்

சிப்பந்திகள், தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்றே தொடர்ந்தும் அறிவித்தல் கொடுத்துவந்தார்கள் என எகிப்தியரான கமல் மொஹமத் அப்டெல் அஸ்காரி தெரிவித்தார். இவ்விபத்து தொடர் பாக உடனடி விசாரணைக்கு எகிப்தியரான கமல் மொஹமத் அப்டெல் அஸ்காரி தெரிவித்தார். இவ்விபத்து தொடர்பாக உடனடி விசாரணைக்கு எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் உத்தரவிட்டுள்ளார்.

## புதிய தகவல்கள்

**1406 பேருடன் சென்ற அல்-சலாம் 98 என்ற எகிப்து நாட்டிற்குச் சொந்தமான பயணிகள் கப்பல் செங்கடலில் மூழ்கியுள்ளது**

சவூதி அரேபியாவின் டுபா துறைமுகத் திலிருந்து எகிப்து நோக்கி 1406 பேருடன் சென்ற அல் - சலாம் 98 என்ற எகிப்து நாட்டிற்குச் சொந்தமான பயணிகள் கப்பல் செங்கடலில் மூழ்கியுள்ளது. இதனால் மிகப் பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என் அஞ்சப்படுகிறது.

இதுவரை 12 பேர் உயிருடன் மீட்கப் பட்டுள்ளதாகவும் உயிரிழந்த 20 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1310 பயணிகளுடனும் 96 கப்பல் பணியாளர்களுடனும் சவூதி அரேபியாவின் டுபா துறைமுகத்திலிருந்து சென்ற மேற்படி கப்பல் அதிகாலை 2.00 மணியளவில் எகிப்தின் சபாகா துறைமுகத்தை சென்றடைய இருந்தது. இரவு 10.00 மணி வரை கட்டுப்பாட்டு நிலையத்திற்கும் கப்ப லிற்கும் இடையில் தொடர்பு இருந்ததாகவும் அதன் பின்னர் ராடார் திரையிலிருந்து கப்பல் மறைந்து விட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. கப்பல் மூழ்கியதற்குரிய காரணங்கள் எதுவும் இதுவரை கண்ட படவில்லை. குறித்த கடற்பகுதியில் கடும் காற்றுடன் மழை பொழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்புப் பணிகள் துரிய கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ,

உயிரிழந்த பலரின் சடலங்கள் கடலில் மிதப்பதாக பிந்திக் கிடைத்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சமீர் - மின்காந்தக் குறுக்கீடு சோதனைக் கூடம்!

**தேசிய** மின்காந்தக் குறுக்கீடு மற்றும் தகவமைப்புக்கான (EMI/EMC ) சோதனைக் கூடம் சென்னையில் நிறுவப்பட்டது.

சமீர் (Society for Applied Microwave Electronics Engineering and Research ) எனப்படும்



செயல்திட்ட நுண்ணலை மின்னணு பொறியியல் ஆய்வுக் கழகம், சென்னை தரமணியில் அமைந்துள்ளது. இந்த மின் காந்த மையம் சமீபத்தில் மின்காந்த குறுக்கீடு மற்றும் மின்காந்த தகவமைப்பு ஆகியவற்றை (EMI/EMC ) மதிப்பிடும் ஆய்வகத்தை அமைத்துள்ளது. இந்தியாவிலேயே முதன் முதலாக நிறுவப்பட்டுள்ள இந்த மாதிரியான தேசிய அளவிலான ஆய்வக கட்டமைப்பானது, தென்கிழக்காசிய நாடுகளிலேயே அமைக்கப்பட்ட மூன்றாவது கட்டமைப்பு எனும் சிறப்பினைப் பெறுகிறது.

செயல்திட்ட நுண்ணலை மின்னணு பொறியியல் ஆய்வுக்கழகம் (சமீர்) தொலைத் தொடர் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் இயங்கிவரும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனமாகும்.

இந்நிறுவனம் மின்னணு சாதனங்களைத் தயாரிக்கின்ற இந்திய உற்பத்தியாளர்களுக்கும், அதனைப் பயன்படுத்துவோர்களுக்கும் உதவும் வகையில் அச்சாதனங்களில் உருவாகும் தேவையற்ற மின் காந்த குறுக்கிடுகளை (EMI) கண்டறிந்து அதை நிவர்த்தி செய்வதைத் தனது முக்கியமான பணிகளில் ஒன்றாகக் கொண்டுள்ளது. மின்னணு சாதனங்களில் உருவாகும் தேவையற்ற மின்காந்த குறுக்கீடுகளால் ஏற்படும் விளைவுகளும் சேதங்களும் அளவிட முடியாததாகும்.

நாம் டி.வி. பார்க்கும் போது செல்போன் சிணுங்கினால் ஏற்படும் கரகர சத்தமும், சாதாரண தொலைபேசியின் அருகில் செல்போன் வைத்தால் ஏற்படும் ஒலிச் சிதைவும் மின்காந்த அலைகளின் குறுக்கீடுகளுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இதனால் சில வேளைகளில் பெருமளவு சேதங்களும் ஏற்படுவதுண்டு. உதாரணமாக .'.பாக்லாந்து போரின் போது எச்.எம்.எஸ். ஷெ·.பீல்டு என்ற கப்பல் அதன் மாலுமிகளுடன் மூழ்கியதற்கு இத்தகைய மின்காந்த அலைகளின் குறுக்கீடு காரணம் என்று கருதப்படுகிறது.

எனவே மின்னணு சாதனங்களைத் தயாரித்து அவற்றை சந்தையில் விற்கும் முன்பாகவே மின்காந்த அலைகளின் குறுக்கீடு பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளது. இம்மாதிரியான மின்காந்த குறுக்கீடுகளைக் கண்டறிந்து, அதனளவை மதிப்பீடு செய்து அந்த மின்னணு சாதனங்களைச் சர்வதேச தர நிர்ணயங்களுக்கு உறுதி செய்த தேசிய அளவிலான கட்டமைப்பு சமீரில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டமைப்பின் சிறப்பம்சமாகத் திகழ்வது ஒரு பெரிய மின்காந்த புல அறையாகும். இந்த அறையானது செல்போன், தொலைக்காட்சி, வானொலி மற்றும் கம்பியில்லா தொடர்புகளின் மூலம் வெளிப்படும் மின்காந்த கதிர்களை தன்னுள் செல்லாமல் தடுக்க வல்லது. மேலும் இந்த அறையின் உட்சுவர்களும் மேற்கூரையும் மின்காந்த கதிர்களை உள்ளடக்கிக் கொள்ளும் பொருட்களான Ferrite tile மற்றும் கார்பன் பூசப்பட்ட பஞ்சுகளால் நிரப்பப்பட்டுள்ளது.

இதனால் அறையினுள் இருக்கும் மின்காந்த கதிர்கள் வெளியே செல்ல இயலாது. இந்தச் சிறப்பால் இந்த கட்டமைப்பை பயன்படுத்தி அனைத்து விதமான மின்னணு சாதனங்களையும் மின்னணு கட்டுப்பாட்டில் இயங்கும் இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களையும் தர மதிப்பீடு செய்ய இயலும்.

எனவே தொழிற்கூடங்களும், உற்பத்தியாளர்களும் சமீரில் உள்ள இந்தத் தேசிய அளவிலான கட்டமைப்பைத் தங்களுக்காக பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த கட்டமைப்பை நான்கு ஆண்டுகளில் இங்கு உருவாக்கத் தேவையான அனைத்துப் பொருளுதவியையும் தகவல் மற்றும் தொலைத் தொடர்பு அமைச்சகத்தின் தகவல் தொடர்பு துறை அளித்துள்ளது. இதற்கான முதலீடு தோராயமாக ரூ.10 கோடியாகும். இந்த கட்டமைப்பு 2005 ஏப்ரல் மாதம் முதல் செயல்படத் துவங்கியுள்ளது.

## பில்கேட்ஸ் தூக்கத்தைக் கெடுக்கும் நடிகை




உலகில் உள்ள பணக்காரர்களில் அதிகம் பிரசித்திபெற்றவர் பில்கேட்ஸ். இவரை பற்றி அறியாதவர்கள் இருக்கவே முடியாது. உலகமே பார்த்து பிரமிக்கும் இவர் ஒரு பெண்ணின் அதுவும் ஒரு நடிகையின் அழகை ஆராதிக்கிறார். அந்த நடிகை தனது தூக்கத்தையும் கெடுக்கிறார் என்கிறார் பில்கேட்ஸ். யார் அந்த நடிகை?

த கேர்ள் நெக்ஸ்ட் டோர் என்ற ஆலிவூட் படத்தில் நடித்த நடிகை எலிசா கட்பட். அந்த படத்தில் எலிசா காட்டிய கவர்ச்சி இன்றும் பேசப்பட்டு வருகிறது. அந்த படத்தில் இடம் பெற்ற அவரது சில 'செக்ஸ் பேஸ்' களைத் தான் நீங்கள் அருகில் பார்க்கிறீர்கள்.

இந்த நடிகையின் அழகை இரசிப்பதாகக் கூறுகிறார் பில்கேட்ஸ். நியூயார்க் என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தான் அவர் இப்படி கூறி இருக்கிறார்.





'எலிசா மீது எனக்கு அதிக ஈர்ப்பு. அவருக்காக ஹோக்ஸ் டி.வி.யில் திரில்லர் 24' என்ற நிகழ்ச்சியை தவறாமல் பார்க் கிறேன். எலிசா எனது தூக் கத்தை கெடுக்கிறார் என்று கூறி இருக் கிறார் பில்கேட்ஸ்.

உலகமே பார்த்து பிரமிக்கும் ஒரு பணக்காரர் ஒரு நடிகையின் அழகை ஆராதிப்பது போல பேட்டி அளித்திருப்பது பரபரப்பாக பேசப்படுகிறது.

தூக்கத்தைக் கெடுக்கும் அள வுக்கு பில்கேட்ஸை எலிசா என்ன செய்தாரோ அவர்களுக்குள் என்ன நடந்ததோ அவர்களுக்கு தான் தெரியும்.

## மூட் பாதையில் மரிந்த மிதவாதம்

இரு எழுத்தாளர்கள் சேர்ந்து
எழுதும் இலங்கைத் தமிழ்
அரசியல் தொடர் இது.

# கிழக்கில் தமிழர் - முஸ்லிம் குழப்பங்களை அரசே தூண்டியது

அப்பாவிச் சிங்களப் பயணிகள் மீது புலிகள் நடத்திய ஹபரன பஸ் தாக்குதல்களையும் ஈரோஸ் அமைப்பு நடத்திய கொழும்பு மத்திய பஸ் நிலையக் குண்டு வெடிப்பையும் கண்டித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கமும் சிவ சிதம்பரமும் அறிக்கைகளை வெளியிட்டனர். கண் மூடித்தனமான, அர்த்தமற்ற வன்செயல்களென்று அவற்றைக் கூட்டணித் தலைவர்கள் வன்மையாகக் கண்டித்தனர். வெவ் வேறாக இந்தக் கண்டன அறிக் கைகள் வெளியிடப் பட்டமை குறிப்பிடத் தக்கது. இலங்கை இனப் பிரச்சினையில் தலையிட்டு சமா தானத் தீர்வொன் றினை ஏற்படுத்து வதற்கு இந்தியா முன்வர வேண்டுமென்றும் அந்த அறிக்கைகளில் கோரிக்கை விடப்பட்டது. இலங்கையில் வன்செயல்கள் அதிகரித்து வருவது குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவித்ததோடு, சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு இலங்கை அரசுக்குக் கோரிக்கையும் விடுத்தது.

## 147 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியும் இது குறித்துத் தனியான அறிக்கையொன்றினை விடுத்தார். பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணும் வழிமுறையை இலங்கை அரசு கைவிட்டு விட்டதென்று கூறி அவர் கவலை தெரிவித்தார். அப்பாவித் தமிழ் மக்கள் மீது இலங்கைப் படையினர் நடத்திவரும் தாக்குதல்களை நிறுத்துவதற்குச் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் ராஜிவ் காந்தி அந்த அறிக்கையில் வலியுறுத்தினார்.

தாக்குதல்களை நிறுத்துமாறு ராஜிவ்காந்தி விடுத்த கோரிக்கையை ஜெயவர்த்தனா நிராகரித்தார். இதற்குப் பதிலாகப் புலிகள் நடத்திவரும் தாக்குதல்களை நிறுத்தி, 'சமாதான மேசைக்குத் திரும்புமாறு அவர்களுக்கு அறிவுரை கூறுமாறும் ஜே.ஆர்.பதிலளித்தார். பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் தாக்குதல் நடவடிக்கைகளையே தானும் மேற்கொள்வதாகவும் ஜே.ஆர்.பதிலளித்தார். ஜெய வர்த்தனா எப்போதுமே சிங்கள அபிப்பிராயத்துக்கே முன்னுரிமை கொடுத்து வந்தார். சிங்களவர்களின் ஆதரவை இழக்க அவர் தயாராகவில்லை. யாழ்ப் பாணத்தைப் புலிகளின் பிடியிலிருந்து மீட்பதற்கு ஜனா திபதி ஜெயவர்த்தனா தயாராகி வருகிறாரென்ற செய்தி யாழ்ப்பாண மக்களையும் இந்தியாவையும் அதிர்ச் சிக்குள்ளாக்கியது.

இந்தியாவின் ஆலோசனையையும் எச்சரிக் கையையும் மீறி யாழ்ப்பாண மக்கள் மீது பொருளா தாரத் தடையை விதித்து, தாக்குதலுக்கு ஜெய வர்த்தனா திட்டமிட்டமைக்குப் பல பின்னணிக் காரண ங்கள் இருந்தன. 'ஒப்பரேசன் லிபரேசன் என்ற பெயரில் மே மாதம் 26ஆம் திகதி தாக்குதல் மேற்கொள் ளப்பட்டது. 1986ஆம் ஆம் ஆண்டின் நடுப்ப குதியிலிருந்தே பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுக ளிலிருந்து இலங்கை பெற்றுவந்த பின்னணி ஆதரவே


இணைந்து எழுதுவது
த. சபாரத்தினம்
+
அம்பி மகன்


ஜெயவர்த்தனாவுக்குத் தாக்குதலை மேற்கொள் வதற்கான துணிச்சலைக் கொடுத்தது. இதன் எதிரொலியாக இந்தியா மேற்கொண்ட எதிர் நடவடிக் கைகளே ஜெயவர்த்தனாவை அடிபணிய வைத்து, இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு வரவைத்தது. இந்தியா கப்பல்கள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருட்களை அனுப்ப முதலில் முயற்சியெடுத்தது. பின்னர் அதனைக் கைவிட்டுவிட்டு விமான மூலம் உணவுப் பொருட்களைப் போட்டது.

1986ஆம் ஆண்டு டிசம்பர் மற்றும் 87இன் ஆரம்ப மாதங்களில் ராஜிவ் காந்தியின் மனோநிலையில்

(அரசியல் தொடர்)

ஏற்பட்ட மாற்றங்கள், புலிகளுக்கு இருவிதத்தில் தாக்க ங்களை ஏற்படுத்தின. ஒன்று, பிரபாகரனும் அவரது நெருங்கிய ஆலோசகர்களும் தமிழகத்தை விட்டு வெளியேற வேண்டியேற்பட்டது. இரண்டு, தமிழக மண்ணில் இலங்கைத் தமிழ் தீவிரவாதிகளின் வன் செயல் நடவடிக்கைகள் தடுக்கப்பட்டன. இதேவேளை, தமிழக அகதி முகாம்களில் தீவிரவாதிகள் தங்கியிருப்பதும் தடுக்கப்பட்டது. புலிகளின் சட்டவிரோத கடத்தல் நடவடிக்கைகளைத் தடுப்பதற்காகப் பாக்கு நீரிணையில் இந்திய கடற்படையினரின் ரோந்தும் அதிகரிக் கப்பட்டது. தமிழகத்திலுள்ள தீவிரவாதிகளுக்குக் களவாக வழங்குவதற்கெனக் கொண்டுவரப்பட்ட ஆயுதங்களையும் இந்திய பாதுகாப்புப் படையினர் மடக்கிப் பிடித்தனர்.

இதனைச் சரிவரப் புரிந்து கொள்ள முடியாத ஜெயவர்த்தனா, தனது இரட்டைத் தந்திரோபாயத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டார். ஒருபுறத்தே சமாதானப் பேச்சுக்குத் தலையாட்டிக் கொண்டே மறுபுறத்தில் ஆயுதப் படைகளைப் பலப்படுத்த தொடங்கினார். விசேட அதிரடிப்படை உருவாக் கப்பட்டது. இதற்குத் தேவையான சகல முன்னோடி முயற்சிகளையும் ஜே.ஆரின் மகனான ரவி ஜெயவர்த்தனா மேற்கொண்டார். சிங்கள இளைஞர்களை உள் ளடக்கிய ஊர்க்காவல் படைகளும் அமைக் கப்பட்டன. இந்தக் ஊர்க்காவல் படை களுக்கு பாகிஸ்தானில் பயிற்சிபெற்ற கனிஷ்ட இராணுவ அதிகாரிகள் பொறுப்பாக நியமிக் கப்பட்டனர்.

தமிழர் தரப்புகள் வடக்கு - கிழக்கு இணைப்பையும் அதிகாரப்பகிர்வையும் ஏகோபித்த குரலில் வலியுறுத்தி வந்ததால், இதனைத் தவிர்ப் பதற்காக கிழக்கில் தமிழ் - முஸ்லிம் குழப் பங்கள் தூண்டிவிடப்பட்டன. அப்போதைய தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அதுலத் முதலி இதற்

**இந்தியாவின் ஆலோசனையையும் எச்சரிக்கையையும் மீறி யாழ்ப்பாண மக்கள் மீது பொருளா தாரத் தடையை விதித்து, தாக்குதலுக்கு ஜெயவர்த்தனா திட்டமிட்டமைக்குப் பல பின்னணிக் காரணங்கள் இருந்தன. 'ஒப்பரேசன் லிபரேசன்' என்ற பெயரில் மே மாதம் 26ஆம் திகதி தாக்குதல் மேற்கொள் ளப்பட்டது.**

குப் பின்னணியில் செயற்பட்டாரென்று குற்றஞ் சாட்டப்பட்டது. கிழக்கில் தமிழர்களின் ஆதிக்கத்தை முஸ்லிம்கள் விரும்பாததால், வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்க்கிறார்களென்று காட்டுவதே லலித்தின் திட்டமாகும்.

இராணுவ நடவடிக்கையில் ஈடுபட வேண்டாமென்றும் இந்திய உதவியோடு சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடருமாறும் வற்புறுத் தியவர்களில் அமைச்சர்கள் காமினி திசாநாயக்கா, ரொனி டி மெல், சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோர் முக்கியமானவர்களாவர். கூட்டுப் படைகளின் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்கா, இராணுவத்தின் முன்னாள் தளபதியும் பாதுகாப்பமைச்சின் செயலாளருமான சேபால ஆட்டிகல போன்றோர் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாமென்று எதிர்ப்புத் தெரிவித்தனர். இதேபோன்று வெளிவிவகார செயலாளராக அப்போது பணிபுரிந்த டபிள்யூ.ரி. ஜெயசிங்காவும் இராணுவ நடவடிக்கையை விரும்பவில்லை. புதுடில்லியில் அப்போது இலங்கை உயர் ஸ்தானிகராகப் பணிபுரிந்தவர் பேர்னாட் திலகரட்ன. இவர் அப்போது பிரதமராகவிருந்த ஆர்.பிரேமதாசாவுக்கு மிக நெருக்கமானவர். இலங்கை அரசின் நிலைப்பாட்டுக்கு இணங்க இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிடுவதை இவர் எதிர்த்து வந்தார்.

தமிழ் தீவிரவாதம் அடக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை அஸ்கிரிய, மல்வத்தை பௌத்த பீடாதி பதிகளும் ஆதரித்தனர். மே மாதம் முற்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள பலாலி, தொண்டமானாறு, ஆனையிறவு இராணுவ முகாம்களுக்கு மேலதிக துருப்புகள் அனுப்பிவைக்கப்பட்டன. இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கையைத் தடுக்க இந்திய உதவி யைக் கோருவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், இரா.சம்பந்தன் ஆகியோர் புதுடில்லிக்குப் விரைந்து சென்றனர். மே மாதம் 18ஆம் திகதி புதுடில்லி வந்து சேர்ந்த இவர்கள் பிரதமர் ராஜிவ் காந்தியையும் முக்கிய அமைச்சர்களையும் சந்தித்துப் பேசினர்.

(தொடர்ந்து வடியும்....)

# நள்ளிரவு மல்லிகை




லாபரெட்டரியினுள் யாரோ பொருட்களையெல்லாம் வேணும்மென்று வீசி எறிந்து கொண்டிருப்பது உணரவே அந்த இடத்தில் சென்று பார்த்த போது, சத்தம் வந்த இடத்தில் யாரும் இருக்கவில்லை ஆனால் மெல்லிய அசைவு ஒன்றை ஸ்ரீகுமார் கண்டார். உடனே அங்கிருந்த செறிவு கூடிய அசிட் போத்தல் ஒன்றினை அசைவு தென்பட்ட இடத்தை நோக்கி விசையுடன் எறிகிறார்....

**அடுத்த** விநாடி -அங்கு மரடேபிளின் மேல் அடுக்கி வைத்திருந்த பாட்டில்கள் மற்றும் டெஸ்ட் டியூப்கள் யாரோ தள்ளிவிட்டது போல் விழுந்து நொறுங்கின. அதே சமயம் மிகவும் விரைவாக யாரோ நகர்வது போலும் தோன்றியது. அந்த அசைவு கண்மூடித் திறப்பதற்குள் சட்டென்று வாசலைத் தாண்டி வெளியேறவும் செய்தது. என்ன செய்வதென்று புரியாமல் குமார் ஒருகணம் குழம்பி நின்றார். கண்ணாடிப் பெட்டிக்குள் எலும்புக் கூட்டைக் காணவில்லை. தான் மீண்டும் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் சிக்கிக் கொள்ளப் போகிறோம் என்பது அவருக்குப் புரிந்தது. எனவே, மிகவும் ரகசியமாக இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்யவேண்டுமென்ற முடிவுக்கு வந்தார். ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.



அதாவது யாருக்கும் தெரியாமல் எங்கிருந்தாவது ஓர் எலும்புக் கூட்டை வாங்கி வந்து சத்தம் போடாமல் வைத்துவிட வேண்டியதுதான். எவ்வளவு யோசித்தும் வேறொரு சரியான வழி புலப்படவில்லை. ஊருக்குள் லாபரெட்டரி பொருள்கள் விற்கும் ஒரு பெரிய கடை உள்ளது.


எழுதுவது
சிவன்


அந்தக் கடையின் முதலாளி தனக்கு நன்கு தெரிந்த நெருக்கமானவரும் கூட. அவரிடம் எலும்புக்கூடு தற்போது கைவசம் இருக்கிறதோ இல்லையோ? என்ன இருந்தாலும் அங்கு போய் விசாரித்துப் பார்க்க வேண்டியதுதான். குமார் தீர்மானத்துக்கு வந்தார். வெளியேறி ஸ்டோர் ரூமைப் பூட்டிவிட்டு, சாவிகளைக் கையில் எடுத்துக் கொண்டு நேராக ஊருக்குள் இருக்கிற கடையை நோக்கிப் புறப்பட்டார். நல்லவேளையாக கடையின் உரிமையாளர் கடையிலேயே இருந்தார். குமார் முதலாளி உட்கார்ந்திருக்கும் கேபினுக்குள் நுழைந்தார். "யார் அட... நீங்களா? வாங்க குமார் சார், எப்படி இருக்குறீங்க? ரொம்பவும் பிஸியா இருக்கீங்க போலிருக்கே?" - கடைக்காரர் கேட்டார். "பிஸியா மட்டுமில்லை. ரொம்பவும் பரபரப்பாவும் இயங்கவேண்டியிருக்கு. உங்களுக்கும் அதெல்லாம் தெரிஞ்சிருக்குமே!" -குமார் பதிலளித்தார். "சாயந்திர பேப்பரைத் திறந்தா முக்கியச் செய்தியே அதுதானே! அதைத் தவிர புதுசா ஏதாவது செய்தி உண்டா சார்?" - கடைக்காரர் விசாரித்தார். "உண்மைதான் இப்போ இன்னொரு செய்தியோடத்தான் உங்ககிட்ட வந்திருக்கிறேன்." "என்ன செய்தி சார்? இதுவரைக்கும் நடந்ததைவிடப் பெரிய பிரச்சினை ஏதாவதா?" "கிட்டத்தட்ட அப்படித்தான்!" "அப்படீன்னா ரெண்டாவது தடவையா இன்னொரு எலும்புக்கூடும் காணாமப் போயிடுச்சுன்னு சொல்லுங்க" -கடைக்காரர் ஓர் எலும்புக் கூட்டின் விலை வருமானமாகக் கிடைக்கப் போவதை மனத்துள் நினைத்துக் கொண்டார்.

"ஹோமம் எதுவோ செஞ்சிருக்கீங்க போலிருக்கே?" வந்தவனது குரல் ஒலித்தது. "உங்க யூகம் சரிதான். ஆனா, ஹோமம்தான்னு எப்பிடிக் கண்டுபிடிச்சீங்க?" "அதையெல்லாம் தெரிஞ்சுக்கக்கூடிய ஒருத்தன்தான் நான். இந்த மாதிரி நான் எத்தனை ஹோமம் பண்ணியிருக்கிறேன் தெரியுமா? அருவித் தண்ணியை எதிர்த்துத் திருப்பிவிட்டிருக்கிறேன். பாறையைப் பிளந்திருக்கிறேன். ஒரே ஒரு தடவை கொஞ்சம் சறுக்கிடுச்சு..." வந்தவன் பேசினான்.

அதைக் கேட்டவுடன் ஜயந்தனின் உள்ளம் கூட ஒரு கணம் துணுக்குற்றது. ஜயந்தனின் மனம் துரிதமாகச் சிந்தனையில் ஈடுபட்டது. 'தன்னையே அதிரவைக்கும் இந்த மனிதன் உண்மையில் யாராக இருப்பான்?'

மங்கலான அந்த வெளிச்சத்தில் ஜயந்தன் புதிய மனிதனை தலைமுதல் பாதம்வரை ஊன்றிக் கவனித்தார். இருந்தும் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அப்போதுதான் அந்த மனிதன் சட்டென்று தனது முகத்தைத் திருப்பினான். அதைக் கவனித்த ஜயந்தனும் சந்து நாயரும் திடுக்கிட்டே போனார்கள்.

அவனது முகம் முகத்தின் இடதுபுறம். எப்படிப்பட்ட தைரியசாலி பார்க்க நேர்ந்தாலும் பயந்து நடுங்கவே செய்வார்கள். இடதுபுற முகத்திலிருந்த சதைப்பகுதி கரைந்து உருகிப் போனதுபோல் இருந்தது. உட்புறமிருந்த பற்களும், எலும்புகளும் வெளிப்புறம் தெளிவாகத் தெரிந்தன. காதின் ஒரு பகுதி காணாமல் போயிருந்தது. அந்த அளவுக்குப் பயங்கரமானதாகவும் பைசாசிகமானதாகவும் இருந்தது அந்தக் காட்சி. "என்ன இது..உங்களுக்கு என்ன ஆச்சு?" சந்து நாயர் கேட்டார். வந்த மனிதன் அந்த அறையை ஒருதடவை சுற்று முற்றும் பார்த்தான். ஜயந்தனுக்கு எதுவோ விஷயம் புரிந்தது போலிருந்தது. "அவருக்கு உட்கார ஏதாவது நாற்காலி கொடுங்களேன்!" -ஜயந்தன் கூறினார். சந்து நாயர் வெகுகாலமாகப் பயன்படுத்தப்படாமலிருந்த ஸ்டூல் ஒன்றைத் தேடி எடுத்து வந்து புதிய மனிதன் முன் போட்டார். அந்த ஸ்டூலைத் தொடாமலே வந்தவன் அமர்ந்தான். அவன் கட்டியிருந்த வேட்டி அழுக்கேறி, கசங்கியிருந்தது.

(வாசனை வீசும்....)

# சோகத்தின் புனைப்பெயர் கோபம்

**கோபம்** என்று ஒரு வில்லன் இருக்கிறான். அவனை நான் உங்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டிய அவசியமில்லை. உங்கள் எல்லோருக்குள்ளேயும் அந்த வில்லன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். குடும்பத்தில் பாதிப் பிரச்சினைகளுக்கு அவன் தான் காரணம். அவனைக் கட்டுப்படுத்தி வைப்பது என்பது அத்தனை சுலபமான காரியமில்லை. நாம் ஜாக்கிரதையாக இருந்தாலும்கூட, நம்மையும் அறியாமல், வெளிப்பட்டு சிக்கலை ஏற்படுத்திவிடுவது அந்த வில்லனுக்கு வாடிக்கைதான். அந்த வில்லனைப் பற்றி விவரமாக இப்போது அலசப் போகிறேன்.

கோபம் என்கிற ஒரு விஷயம் இல்லை என்றால், கணவன்-மனைவிக்குள்ளே சண்டை வருமா? மாமியாருக்கும், மருமகளுக்கும் இடையிலே மனத்தாங்கல் வருமா? பெற்றோர்களுக்கும், குழந்தைகளுக்கும் இடையில் பிரச்சினை வருமா? இல்லை, குழந்தைகளுக்குத்தான் அடி விழுமா? கோபம் என்றாலே, பிரச்சினைதான், சிக்கல்தான். ஆக, கோபத்தைக் கட்டுப்படுத்துவது என்பது, வாழ்க்கையின் அத்தியாவசியமான விஷயங்களில் ஒன்று என்றால் அது மிகையில்லை. கோபத்தை மனதுக்குள்ளே அடக்கி வைத்துக்கொள்ள வேண்டும் என்பது இதன் அர்த்தமில்லை. அதனை எப்படி தவிர்ப்பது; அதனால் ஏற்படும் பிரச்சினைகளை எப்படி முளையிலேயே கிள்ளி எறிவது என்று தெரிந்து கொள்ளுவதுதான் முக்கியம். அதனால் வாழ்க்கையில் பல நன்மைகள் ஏற்படும் என்பது நிச்சயம்.

எப்படி கோபத்தைக் கட்டுப்படுத்துவது அல்லது கோபப்படாமல் இருப்பது என்பது சுலபமாக விடை சொல்லிவிடுகிற கேள்வி கிடையாது. முதலில் ஒருவருக்குக் கோபம் வருகிறது என்றால், எதற்காக அவர் கோபப்படுகிறார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இங்கே புரிந்துகொள்ள வேண்டும் என்று அழுத்தமாய்ச் சொல்ல விரும்புகிறேன். காரணம், "எதற்காகக் கோபப்படுகிறீர்கள்? இப்போது என்ன ஆகிவிட்டது?" என்று கோபப்படும் ஒருவரிடம் இன்னொருவர் கேட்கிறபோது உடனடியாக ஒரு பதில் வந்துவிடும். ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி, இப்படிச் செய்தால் கோபப்படாமல் கெஞ்சுவார்களா? என்றோ, நீ என் இடத்தில் இருந்தால் இதைவிட அதிகமாகக் கோபப்பட்டிருப்பாய் என்றோ, பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டல்லவா? என்றோ விளக்கம் கொடுத்து விடுவார் கோபக்காரர்.

இது, கோபப்படுவதற்கு என்ன காரணம் என்று அவர் மற்றவர்களுக்குக் கொடுக்கிற விளக்கம். அவ்வளவு தான்.

அந்தக் கோபக்காரர், இப்போது கோபப்பட்டோமே அது அவசியம் தானா? எதற்காக இந்தக் கோபம்? என்று தன்னைத்தானே கேள்வி கேட்டுக் கொள்ளட்டும். அதற்கு பதிலளிக்க அவரால் முடியாது. பெரும்பாலான சமயங்களில் கோபப்படுவது இந்த ரகத்தைச் சேர்ந்ததுதான்! காரணமில்லாத கோபம்! அர்த்தமில்லாத கோபம்!

சரி! கோபம் என்பது என்ன? இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்துப் பார்த்தது உண்டா? கோபம் என்பது சோகத்தின் ஒரு உருவம்தான்! "சோகம் என்பது, கோபத்தின் மென்மையான வெளிப்பாடு! கோபம் என்பது சோகத்தின் தீவிரமான வெளிப்பாடு!" இப்படி விளக்கம் கொடுக்கிறார் சிக்மென்ட் ஃப்ராய்ட் என்ற அறிஞரின் சீடரான உஸ்தாங்யோங்!

சோகம் என்பது என்ன? நிறைவேறாத ஆசை என்று சொல்லலாம். எதிர்பார்த்தது எதிர்பார்த்தபடி நடக்காதுபோவது என்று சொல்லலாம். இதனால் ஆழ்மனதில் சோகம் ஏற்படுகிறது. இந்த ஆழ்மனதில் உள்ள சோகம் எப்போதும் அப்படியே அடங்கிக் கிடக்கும் என்று சொல்ல முடியாது. அது தீவிரமடைந்து, கோபமாக வெளிப்படுகிறது.

'நெருப்பில்லாமல் புகையாது' என்ற பழமொழியை இங்கே குறிப்பிடுவதுகூடப் பொருத்தம் என்றே நினைக்கிறேன். ஒரு துளி நெருப்புப் பொறி இருந்தால் போதுமே, புகை வந்து கொண்டிருக்கும். நெருப்பே இல்லை என்றால் எப்படிப் புகை வரும்? அதுபோலத்தான். ஆழ்மனதில் சோகம் இருந்தால் அதுதான் கோபமாக வெளிப்படும். அந்த சோகத்துக்கு எது வேண்டுமானாலும் காரணமாக இருக்கலாம். ஒருவர் மனதுக்குள்ளேயே பல விதமான சோகங்கள் கூட இருக்க வாய்ப்பு உண்டு. அதேபோல ஒருவரது சோகத்துக்கு என்ன காரணமோ, அதுவே இன்னொருவரது



சோகத்துக்கும் காரணமாக இருக்க வேண்டும் என்று கட்டாயமில்லை. அவை மனிதர்களின் வாழ்க்கை, வசதி, வாய்ப்புகளுக்கு ஏற்ப மாறுபடும்.

கோபம் என்பது சோகத்தின் தீவிரமான வெளிப்பாடு என்றும் நிறைவேறாத ஆசைதான் சோகத்திற்கு அடித்தளம் என்றும் நான் குறிப்பிட்டேன். இந்த சோகம், ஒரு மனிதனின் எந்த வட்டத்திலும் இருக்க வாய்ப்பு உண்டு. அவனுடைய தனிப்பட்ட வாழ்க்கை என்ற வட்டத்துக்குள் இருக்கலாம். குடும்ப வாழ்க்கை என்கிற வட்டத்துக்குள்ளே இருக்கலாம். சமூக வாழ்க்கை என்கிற வட்டத்திலும் இருக்கலாம். ஆன்மீக வாழ்க்கையிலும் கூட இருக்கலாம்.

ஆக, ஒவ்வொரு தடவை கோபப்படுகிற போதும், எந்த வட்டத்திலே உள்ள சோகம் கோபமாக வெளிப்படுகிறது என்று தன்னைத்தானே கேட்டுக்கொள்ள வேண்டும். அதைப்பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

நாற்பது வயது பேங்க் அதிகாரி ஒருவர் என்னுடைய லை:.ப் புரோகிராமில் பங்கேற்றார். அப்போது, அமைதியான சூழ்நிலையில் தியானம் செய்வதைப் பற்றி எடுத்துச் சொல்லிவிட்டு, தியானம் செய்யும் மனோநிலையை உருவாக்குவதற்கு ஏற்ற இசையை ஒலிக்கச் செய்வது வழக்கம். வழக்கமாக, இந்த கேஸட் ஒலிக்கத் துவங்கியவுடன், அனைவரும் கண்களை மூடிக்கொண்டு தியானம் செய்யத் துவங்குவார்கள். அந்தக் குறிப்பிட்ட பேங்க் அதிகாரியின் காதுகளில் தியான இசை கேட்கக் கேட்க, அவரது கண்களிலிருந்து கண்ணீர் வந்து கொண்டிருந்தது. இதை நான் கவனித்தேன் என்றாலும், அவரிடம் இதுபற்றி எதுவும் கேட்கவில்லை.

அதன்பின், எப்போதெல்லாம் அந்த கேஸட் ஒலிக்கிறதோ, அப்போதெல்லாம் அவர் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோட ஆரம்பித்துவிடும். நிகழ்ச்சி முடிந்தபின், அவர் என்னைத் தனியே வந்து சந்தித்தார். "தியான இசை ஒலிக்கிற போதெல்லாம் என்னையும் அறியாமல் கண்ணீர் வருவதன் காரணம் என்ன என்று எனக்குத் தெரியவில்லையே சுவாமிஜி!" என்றார்.

நான் அவருக்கு உடனடியாக விளக்கம் ஏதும் தரவில்லை. சொல்லப் போனால், அவர் தனது சந்தேகத்தைக் கேட்டதை நான் கவனித்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. அவருடைய குடும்பப் பின்னணியைப் பற்றிக் கேட்டேன்.

மிக ஏழையான குடும்பத்தில் பிறந்து, மிகவும் கஷ்டப்பட்டு படித்து, நல்ல 'மார்க்' வாங்கி, பாஸ் பண்ணினவர். தன் முயற்சியாலேயே பேங்க் பரீட்சை எழுதி தேர்வாகி, வேலை கிடைத்திருக்கிறது. அதன்பின்னும் கடுமையாய் உழைத்து, நல்ல பெயர் எடுத்து பிரமோஷன் பரீட்சையில் தேறி ஆபீசராகப் பதவி உயர்வு கிடைத்திருக்கிறது என்பதெல்லாம் எனக்குத் தெரியவந்தது. அடுத்து, அவரது இளமைப் பருவம் பற்றி சில கேள்விகளைக் கேட்டேன். அங்கே அவரது கண்ணீருக்கு விடை கிடைத்தது.

இளமைப் பருவத்தில், அவருக்கு சங்கீதம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆசை. ஆனால், குடும்பத்தில் நிலவிய ஏழ்மை காரணமாக அவரால் சங்கீதம் கற்றுக்கொள்ள முடியாமலேயே போய்விட்டது. இத்தனை காலமாக, சங்கீதம் கற்றுக்கொள்ள முடியாது போய்விட்ட சோகம் ஆழ்ந்து கிடந்து, இப்போது, அமைதியான சூழ்நிலையில் நல்ல இசையைக் கேட்கிறபோது கண்ணீராக வெளிப்படுகிறது. இதை நான் அவருக்கு எடுத்துச் சொன்னேன்.

அப்போது அவர் தனக்கு அடிக்கடி தலைவலி போன்ற உபாதைகள் வருகின்றன. டாக்டர்களாலேயே இன்ன காரணம் என்று கண்டுபிடிக்க முடியவில்லை என்று தெரிவித்தார்.

அவரை நல்ல சங்கீதம் நிறைய கேட்கும்படியும், முடிந்தால் சங்கீதம் கற்றுக் கொள்ளும்படியும் ஆலோசனை சொன்னேன். அவர் சங்கீதம் கற்றுக்கொண்டார்.

தலைவலியும் மற்ற பிரச்சினைகளும் தாமாகவே காணாமல் போய்விட்டன.

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 154க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

நிர்பாலகாந்தன் சதீசன், மணிவாசகர் வீதி, பெரிய போரத்தீவு, மட்டக்களப்பு

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. ராஜினி புண்ணிய மூர்த்தி, அரசாங்க அதரிபரின் வாசஸ்தலம், யாட்வீதி, யாழ்ப்பாணம்.
2. சிம்லா காதர் தாருல் சிம்லா, முதலாம் குறுக்கு வீதி, திக்குவெல்ல.
3. வ. மன்னர் அன்ரனி, 26, சென்ஸேம்ஸ் கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
4. சி. நவநீதன், 4/5, அமம்பக்கோட்டை. செங்கல்ல. கண்டி.
5. மாதவி, கதுருவெல, பொலன்நறுவை.
6. மங்கையநகரசி, மார்கெட் வீதி, பேவளை.
7. காந்தரூபன், உவர் மலை, திருகோணமலை.
8. ரிஸ்மி லெப்பை, பிரதான, ஓட்டமாவடி.
9. ஜெமீலா கான், பிரதான வீதி, உக்குவலை.
10. ச. காயத்திரி, 56/A, ஆரியகம, ஹட்டன்.

## குறுக்கெழத்துப் போட்டி 156

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 6 |
| 7 | 8 | ■ | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | ■ | 18 |
| 19 | ■ | 21 | 22 | 23 | 24 |
| ■ | 26 | 27 | ■ | 29 | ■ |
| 31 | 32 | 33 | ■ | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1. இராசிகளில் ஒன்று
7. மழை காலங்களில் ஏற்படுவது (திரும்பியுள்ளது).
10. திசைகளில் ஒன்று.
13. ஒருவகைப் புல் கோயில் பூசைகளில் பயன்படுத்தப்படும் (குழம்பியுள்ளது).
21. வஞ்சகம் என்று கூறலாம் (குழம்பியுள்ளது).
26. கரை அல்லது தடுப்பு எனப் பொருள்படும் (திரும்பியுள்ளது).
31. இற்குள் முத்து விளையும் (குழம்பியுள்ளது).
35. பழிப்பு அல்லது குற்றம் எனலாம்.

### மேலிருந்து கீழ்

1. செய்திப் பரிமாற்றத்தின் ஒரு அங்கம்.
2. துன்பம் (குழம்பியுள்ளது).
4. கட்டுமரம் அல்லது மிதவை (குழம்பியுள்ளது).
6. முடி என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
15. சமையல் உபகரணங்களில் ஒன்று (குழம்பியுள்ளது).
23. கயிறு என்றும் கூறலாம் (தலை கீழ்).
26 பெண் மானை இப்படியும் கூறலாம் (தலை கீழ்).

## குறுக்கெழுத்துப் போட்டி 154 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தி | 2 ரு | 3 ம | 4 ண | 5 ம் | ■ |
| 7 ட் | 8 அ | 9 ட | 10 ம் | ■ | 12 ம |
| 13 ட | 14 வி | 15 ம் | 16 ய | ■ | 18 ய |
| 19 ம் | ■ | ■ | 22 ப | 23 ண | 24 ம் |
| ■ | 26 ம | 27 ஜா | ■ | 29 பா | ■ |
| 31 ப | 32 டை | ■ | 34 வா | 35 ம் | 36 ன |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 14.02.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-156
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்

**- வழங்குவது ராஹில்**

## இன்னுமொரு கை

உனக்குள் குறைகள் இருப்பதை நீ ஒப்புக் கொள்ளாதவரை தோல்வி உன்னைத் துரத்திப் பிடித்துக் கொண்டுதான் இருக்கும்.

ஒரு தோல்விக்குள் உன் மகிழ்ச்சி உடைந்துவிட்டதா?

உன் முயற்சி அமிழ்ந்து போனதா? உனது முயற்சியில் ஓட்டை இருந்திருக்கிறது. உடனே கண்டுபிடித்துச் சரிப்படுத்து!

நீ மனிதன் என்பதை தோல்விதான் உனக்கு ஞாபகப்படுத்துகிறது.

தோல்வி சந்திக்காத வெற்றியாளன் இதுவரை இந்தப் பூமிக்கு வந்ததில்லை.

தோல்வி தொடராக உன்னைத் திருடினால் நீ எச்சரிக்கையாக இல்லை.

ஒரு சில தோல்விகளின் விளிம்பில்தான் ஒருவெற்றி வசிக்கிறது.

நீ விழுந்தால்தான் உன்னால் எழமுடியும் என்று நம்பு.

சூரியன் மறைந்து விட்டதே என்று நீ கண்ணீர் திறந்தால் அடுத்த விடியலில் நீ மடையன்.

தோல்வியைக் கற்களாக்கி வெற்றி வீடு செய்!

வெற்றியின் மரியாதை உனக்குப் புரிய வேண்டுமா?

நீ தோல்வி சூடிப்பார்.

உன் மனதைப் பாழாக்கிவிட்டு உடலை மட்டும் நீ வருத்தினால் வெற்றி உன் விலாசத்திற்கு வராது.

நீ மனதைப் பலமாக்கு! வளமாக்கு!!

நீ மீண்டும் மீண்டும் விழுகிறாயா? நீ உன் பலத்தை இன்னும் கண்டெடுக்கவில்லை.

வளைந்து வளைந்து நதிபோல் நீ ஓடினால் கடலை அடைவதற்கு நேரமாகலாம். மழைத்துளிகள் போல் நேராக விழு!

நீ உனது நேரங்களை அட்டவணைப்படுத்தும் போது வெற்றியை அண்மித்துவிட்டாய்.

உன் மூச்சைக் காலத்திடம் ஒப்படைத்து நீ இயங்கினால் வெற்றி உன் விரலில் உட்காரும்.

தோல்வி உன்னில் காயம் உண்டாக்கினால் இன்னும் பலம் இழக்கிறாய் நீ. அது உன்னை இன்னும் இயக்கினால் பலன் அடைவாய். பலம் பெறுவாய்.

தோல்வி உன்னைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள்.

நீ தேன் சாப்பிட வேண்டுமாக இருந்தால் தேள் தீண்டுவதைப் பெரிதுபடுத்தாதே!

நீ கடவுளை நினைப்பதற்கு தோல்வி கதவு திறந்துவிடுகிறது.

வெற்றி தருகின்ற பலத்தைவிட தோல்வி அதிக பலம் தருகிறது உனக்கு.

தோல்வி உன்னைத் தூக்கிவிடும் இன்னுமொரு கை.

# புதிய அத்தியாயம்

**காலைக்** கதிரவன் கிழக்கு வானில் தன் ஒளிக் கதிர்களைப் பரப்பிக் கொண்டிருந்தான். புள்ளினங்கள் இசைபாடி இன்புற்று இரை தேடுவதற்காகச் சென்று கொண்டிருந்தன. நலிவுற்ற ஜீவன்கள் துன்பங் களையும் துயரங்களையும் நீக்கிவிட தங்களைத் தயார் படுத்திக் கொண்டு எழுந்தன.

வைத்தியசாலையில் நோயின் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த ஹாஜறா இன்னும் மயக்க நிலையிலிருந்து மீட்சி பெறாமல் உறங்கிக் கொண்டி ருந்தாள் அவளுக்கு உதவி செய்ய தாய் உடனிருந்தாள்.

நோயாளிகளைப் பார்வையிடும் நேரம் வந்து விட்டதால் உற்றார் உறவினர்கள் விரைந்து சென்று கொண்டிருந்தார்கள். குறிப்பிட்ட நேரத்துக்குள் வந்து விட வேண்டும் என்ற நோக்கத்தோடு விரைவாகச் சென்றார்கள்.

ஹாஜறா ஏற்கனவே திருமணமானவள் - கணவனால் கைவிடப்பட்டவள். அவளுக்கு ஆசை வார்த்தைகளைக் கூறி அவளிடமிருந்த நகை களையும் அபகரித்துக் கொண்டு சென்றவன், குறிப்பிட்ட காலத்திற்குள் வரவில்லை. அவள் அவ னால் கைவிடப்பட்டாள். இதற்கிடையில் வருடங்கள் இரண்டைத் தாண்டி விட்டன.


ஹாஜறாவுக்கு உறவுக்காரர் பலர் இருந்தும் பிரயோசனம் எதுவும் கிடைக்கவில்லை. அவளுடைய திருமணத்துக்கு பணம் கேட்டபோது எல்லோரும் கைவிரித்து விட்டார்கள். கைக் கூலிப் பிரச்சினை தாண்டவமாடி இருக்கும் வேளையில் அவளால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. ஊர் பெரியவர்கள், உலமாக்கள் எல்லாம் சின்ன விடயங்களைப் பற்றிப் பெரிதாகப் பேசுகிறார்கள். கைக்கூலியைப் பற்றி பாராமுகமாக இருக்கிறார்களே என்று கவலைப் பட்டாள் ஹாஜறாவின் தாய். ஹாஜறா சிறு வயதில் பாடசாலையில் சேர்ந்து படித்து ஐந்தாம் தரத்தோடு விலகி படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டாள். கஷ்டப்பட்டு, வெயிலில் வருந்தி உழைத்து வளர்த்த மகளுக்கு ஏற்பட்ட கெதியை எண்ணி கவலைப் பட்டாள். இடைக்கிடையே "மனித ஜென்மங்கள் இப்படி இருக்கிறதே" என்று பெருமூச்சு விட்டாள். வாய் விட்டு அழுது புலம்பினாலும் அதைக் கேட்க அவளுக்கு யாருமே இல்லை. அவளுடைய எண்ணங்கள் சிறகடிக்க முடியாமல் இருந்தன.

நடந்ததையெல்லாம் மறந்துவிட்டு மீண்டும் வாழலாம் என்று நம்பி அவனை அணுகினாள். அவன் விரும்ப வில்லை. ஏழைப் பெண் அப்படியே இருந்துவிட்டாள். வயது போன தாய் பல முறை வேண்டியும் இரண்டாம் திருமணத்துக்கு அவள் சம்மதம் தெரிவிக்க மறுத்துவிட்டாள்.

"மகள் நீ வாழ வேண்டிய வயசில இப்பிடி யெல்லாம் செல்லப் போடாது. போனவன் திரும்ப வந்து சேரமாட்டான்."

தாயின் பரிதாபக் கதையைக் கேட்டதும் அவள் கண்ணீர் விட்டாள்.

"உம்மா போனவன் திரும்ப வந்தாலும் வராவிட்டாலும் கலியாணம் வேணாம். வருகிறவரும் போனவரைப் போல இருந்து விட்டா நம்மட நிலை என்னவாகும்"



பாதிக்கப்பட்ட மகளின் வார்த் தைகள் ஒவ்வொன்றும் தாயினுடைய உள்ளத்தை ஊசியால் குத்துவது போல இருந்தது. தாங்க முடியாமல் அழுதாள். நடந்து போன துயரச் சம்பவங்களை எண்ணும் போது அவள் வேதனைப்பட்டாள். பிள்ளை குட்டிகளோடு, வாழவேண்டிய வயசில் வேதனையோடும் சோதனை யோடும் தன்னுடைய மகள் வாழ் வதைக்காண அவளுடைய மனம் பொறுக்கவேயில்லை. கவலை அடைந்து காணப்பட்டாள்.

இரவு காலங்களில் நேரத்தோடு கணவன் வீட்டுக்கு வராமல் வேண் டாத நண்பர்களோடு சூது விளையா டுவதைக் கேள்விப்பட்டு, கேட்டு விட்டாள். அதனைப் பொறுத்துக் கொள்ளமாட்டாமல் ஓங்கி அறைந்து விட்டான். அவளுடைய கன்னம் வீங்கிப் போய் இருந்தது. இதனைக் கண்டு கொண்ட தாய் வாய்க்கு வந்தபடி பேசி விட்டாள். பிள்ளைப் பாசம் வயது போன காலத்திலும் விட்டு வைக்க வில்லை. மகளுக்கு இப்படியொரு வாழ்க்கையைத் தேடிக் கொடுத்ததை எண்ணிக் கவலைப் பட்டாள்.

பெற்று வளர்த்து ஆளாக்கி விட்ட தாயை அவள் நோக வில்லை. இருந்தாலும் கணவனுக்கு வாய்க்கு வந்தபடி பேசியதை உள்மனதில் நினைத்து வருந்தினாள். இருந்தாலும் நாளுக்கு நாள் குடித்துக் கொண்டு வந்து கண்ட நிண்ட மாதிரி அடித்து, துன்புறுத்து வதை அவளால் பொறுக்க முடியா மல் வீட்டை விட்டு வெளியேறுமாறு வன்மையாகச் சொன்னாள். அவளுடைய கண்டிப்பில் மாற்றம் காண முடியாமல் வீட்டை விட்டு வெளியேறினான்.

கட்டியவளை விட்டுப் பிரிந்தாலும் தான் செய்தது தவறு என்பதை அடுத்த வருடமே உணர்ந்தான். இளமைப் பருவத்தில் புரியாத நண்பர்களோடு சேர்ந்து ஏற்பட்ட பழக்க தோசம் மாறாமல் இருக்கும் போதே அவன் திருமணத்துக்குச் சம்மதம் தெரிவித்தான். திருமணம் செய்யப் போகிறான் என்று நண்பர்கள் கேள்விப்பட்டதும் அவனைத் திருத்த முனைந்தார்கள். முயற்சி பலன் அளிக்காத காரணத் தால் மெல்ல ஒதுங்கிக் கொண்டார்கள் நண்பர்கள்.

அவனும் இரண்டாந்தாரமாகத் திருமணம் செய்ய நினைத்தாலும் அவனுடைய செயற்பாட்டால் பெண் கொடுக்க யாருமே முன் வரவில்லை. எல்லோரும் இழிவாகப் பேசுவதை அவனால் பொறுக்கவே முடியவில்லை. நண்பர்கள் இப்படியான சந்தர்ப்பத்தில் உதவுவதையும் நிறுத்திக் கொண்டார்கள். "பெற்ற தாய் இருந்திருந்தா ஒரு புடிச் சோறாவது தருவாள் அவளும் இல்லையே" என்று கண் கலங்கினான்.

கூடாத நட்பால் ஏற்பட்ட கறையைப் போக்க அவனால் முடியவில்லை. எதை எதையோ மனதில் தோற்றுவித்தான். அவைகளால் எதையும் சாதிக்க முடியாது என்றே வருந்தினான்.

எந்தக் காரணமும் இல்லாமல் கட்டிய மனை வியை இழிவு படுத்தியமைக்காக அவன் பல துன்பங் களையும், துயரங்களையும் அனுபவித்தான். அவள் சேர்த்து வைத்திருந்த பணத்தில் வாங்கிய தங்கச் சங்கிலியைக் கூட அடம் பிடித்து வாங்கிக் கொண்டு அநாவசியமாகச் செலவு செய்த விதங்களையும் ஒரு கணம் நினைத்துப் பார்த்து நெஞ்சு நிறைந்த பெருமூச்சு விட்டான். தன்னுடைய நண்பர்கள் கூட வெறுத்து ஒதுக்கியதையும் அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. ஒட்டி உறவாடிய நண்பர்கள் எட்டிப்போனதற்குரிய காரணத்தை அறிந்தான். கடைசியாக இருந்த நண்பனிடம் தனக்கு ஏற்பட்ட கதியை ஒட்டு மொத்தமாக எடுத்துக் கூறினான்.

எப்படித்தான் எடுத்துக் கூறினாலும் அவர் களுடைய கூற்றில் நியாயம் இருப்பதைப் புரிந்து கொண்டான். வாழ்ந்து பார்க்க வேண்டிய வயதில் வக்கிர எண்ணங்கள் ஏற்பட்டதால் தனியாக அலைந்து திரிய வேண்டிய நிலை உருவாகி விட்டதை எண்ணிக் கவலைப்பட்டான். பெண்பாவம் சும்மா விடாது என்பதை உண்மையென நம்பி னான். இருந்தும் அவளோடு சேர்ந்து வாழ மீண்டும் இடம் கிடைக்காதோ என்று சிந்தித்தான்.

தன்னிடம் பணம் இல்லையென்பதை உணர்ந்த அவன். வைத்தியசாலையை நோக்கி நடந்தான். யாருக்காவது இரத்தம் தேவைப்பட்டால் கொடுத்து விட்டு பணம் பெறலாம் என்ற எண்ணம் அவனு டைய மனதில் தோன்றியது.

பணத்தைப் பெற்றுக் கொண்டு இரத்தத்தைக் கொடுத்தான். அவனிடமிருந்து பெறப்பட்ட இரத்தம் யாருக்காகக் கொடுக்கப்படுகிறது என்பதைக் கேட்ட றிந்து கொள்ள வைத்திய சாலையின் உள்ளே சென்றான்.

ஏற்கனவே தன்னால் விடப்பட்ட மனைவியின் தாய் நிற்பதைக் கண்டு அவனுக்கு யோசனை ஏற்பட்டது. பக்கத்தில் நின்றவர்கள் மூலம் விட யத்தை அறிய முற்பட்டான்.

அங்கே இரத்தம் தேவைப்பட்டு துடியாய்த் துடித்தவள் தன்னுடைய மனைவி என்பதை

**மருதமுனை**
**ஏ.எம்.எம்.பாறூக்**

உணர்ந்து வேதனைப்பட்டான். தன்னுடைய மனைவிக்குத் தேவைப்பட்ட இரத்தத்திற்குத்தானா பணம் வாங்கினேன் என்று அலறினான்.


முடிவுகள் வெளியாகும் வரை அங்கேயே நின் றான். வெற்றிகரமாக இரத்தம் கொடுத்து முடிக்கப் பட்டு அவள் பிழைத்துக் கொண்டாள். அவனுடைய உள்ளம் சந்தோசமடைந்தது.

தான் செய்த தவறை யெல்லாம் மனதுக்குள் போட்டு மூடி மறைத்து மறுமணம் செய்யாமல் வாழ்ந்து வந்தவள் தன்னுடைய மனைவி என்பதை உணர்ந்தான். அவன் கொடுத்த இரத்தம் அவளை நோயிலிருந்தும் காப்பாற்றியது. கண் விழித்துப் பார்த்தாள். அப்போது அவன் "என்னை மன்னித்து விடு" என்று அமைதியான குரலில் சொன்னான்.

தன்னுடைய கடைசிக் கட்டத்தில் கை கொடுத்த கணவனின் கடந்த கால செயல் களையெல்லாம் மறந்து அருகில் அழைத்தாள். அவன் அந்த அழைப்புக்கு மறுப்புத் தெரிவிக்காமல் அருகே சென்றான். அவர்களுடைய வாழ்வில் புது அத்தியாயம் தோன்றியது.

# சாதனையும் சோதனையும்

கொழும்பு புறக்கோட்டை மத்திய பேருந்து நிலயத்தில் இருந்து மலைநாட்டிலுள்ள ஒருதூர இடத்துக்கான அந்த பஸ் புறப்படவிருந்தது. அது ஒரு இன்டர்சிட்டி பஸ் ஆனதால் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஆசனங்கள் நிறைந்திருந்தன. காலை ஒன்பது மணிக்குப் புறப்படவேண்டிய அந்த பஸ் அதன் சாரதியும் நடத்துனரும் இராது போனதால் அது காத்துக் கிடந்தது. நான் கால் மணி நேரம் காத்திருந்து விட்டுப் பக்கத்திலுள்ள சக பயணியிடம் டொய்லட் பக்கம் போய்வருவதாகக் கூறிவிட்டு இறங்கினேன். என் வேலைகளை முடித்துவிட்டு அந்த டொய்லட் வாசலில் மேசைபோட்டு நாற்காலியில் தூங்கிவழிந்தபடி இருந்த காவலாளியின் முன்னிருந்த டப்பாவுக்குள் இரண்டுருபா நாணயத்தைப் போட்டுவிட்டு வெளியேவந்து, அன்றைய தினசரியொன்றையும் வாங்கியபடி மீண்டும் என் ஆசனத்தில் அந்த சகபயணிக்கு நன்றி கூறிவிட்டு அமர்ந்தேன். சில விநாடி கழித்து சாரதியும் நடத்துனரும் ஏறியதும் பஸ் புறப்பட்டது. படிப்படியாக வேகம் கூடிய அந்தபஸ் கொழும்பு நகர், புறநகர்ப் பகுதி என்று எல்லாவற்றையும் பின்னே தள்ளிக்கொண்டு முன்னேறிக் கொண்டிருந்தது. நான் பத்திரிகையை எடுத்து செய்திகளை வாசித்துக் கொண்டிருந்தேன். நடுப்பக்கத்தில் ஒரு வாலிபனின் படத்தைப் போட்டு சாதனை என்று மகுடமிட்டு கீழே செய்தி இருந்தது. அதில் அந்த வாலிபன் இரு கைகளும் இராது எதிரே ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியைச் சாத்திவிட்டு, தனது கால்பெருவிரலிடுக்குள் சேவிங் பிரஷ்ஷை எடுத்துச் சோப்பில் நன்றாகக் கரைத்து முகத்தில் பூசிவிட்டுக் கீழே வைத்தபின், மீண்டும் கால்விரல்களினால் சேவிங் மெஷினையும் கவ்விப் பிடித்துத் தூக்கி முகத்தை அழகாகச் சேவ் செய்தபின், முகத்தையும் அவ்விதமே துடைத்துக் கொண்டான். உலகில் எத்தனையோ சாதனைகள் நடக்கின்றன. சில தேவையற்றவை. விஷப் பாம்புகளுடன் கண்ணாடிப் பெட்டிக்குள் இருத்தல், கண்ணாடித் துண்டுகளை விழுங்குதல், பூரான், தேள்களை உடலில் ஊரவிடுதல் இப்படி விஞ்ஞான உலகில் பல சாதனைகள். அதே சமயம் பத்து வயதுச் சிறுமி திருக்குறள்



முழுவதையும் ஒரு மணி நேரத்தில் கூறிவிடுதல், பரீட்சையில் அதிவிசேட சித்தி என்றும் கலக்கல்கள் நடக்கின்றன. நடத்துனர் டிக்கட்டுக்களைச் சேகரித்துச் சரிபார்த்தார். பஸ் ஓடிக்கொண்டிருந்தது.

மதிய போசனத்துக்காக அந்த பஸ் ஒரு ஹோட்டல் வாசல் முன்றலில் நின்றது. பயணிகள் யாவரும் இறங்கி, சாப்பிடலாமென நடத்துனர் அறிவித்ததையடுத்துப் பயணிகள்யாவரும். இறங்கி ஹோட்டலுக்குள் சென்றனர். கூடவே சாரதியும், நடத்துனரும் அங்கு போய்விட்டார்கள். எதிரே வேறு பஸ்களும் வந்து நிற்க, அதில் இருந்தும் பயணிகள் இறங்குவதும், பெண் பயணிகள் குழந்தைகளை டொய்லட்டுக்கு கூட்டிப் போவதும் கடையில் சாமான்கள் வாங்குவதுமாக இருந்தார்கள். கடைகளை கட்டியது. சிறிது நேரம் சென்று எனது பஸ் பயணிகள் எல்லோரும் வந்துவிட்டார்களா எனச் சரிபார்த்த பின்னர் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டது. இரத்தினபுரி வந்தது. ஒரு பயணி அங்கு இறங்கினார். அந்த இன்டர்சிட்டி மீண்டும் தாமதியாமல் புறப்பட்டது. அந்த இருக்கை காலியாகவே இருந்தது. பஸ் பேரகலயைத் தாண்டத் தொடங்கியதும் நீண்டமலைகளும், இதோ அதோவென விழப்போகிற மாதிரிப் பெரும் உருண்டையான மலைப் பாறைகளும் பஸ்ஸைத் தொடுகிறமாதிரி பயங்கரமாக வந்து கொண்டிருந்தன. எதிரே வெட்டவெளியும் கடல் போல அலைகளும் சூரியன் இறங்குவதும் தெரிந்தன. சாலையோ பாம்புபோல வளைந்தபடி போய்க் கொண்டிருந்தது. அந்த அமானுஷ்யமான இடத்தில் ஒரு பயணி நின்று பஸ்ஸை நிறுத்தும்படி கையை அசைத்தார். சாரதி நிற்பாட்டாது போகவே நடத்துனர், "நவத்தண்ட சீட் தியனவா" என்று சாரதிக்குக் குரல் கொடுக்கவே பஸ் நின்றது. "நகிண்ட இக்மன்ட யண்ட, பஸ்ஸட்ட சீட் தியனவா" என்று நடத்துனர் ஆசனத்தைக்காட்ட அந்தப் பயணிஉள்ளே வந்ததும் சாரதி தன்னியக்கக் கதவைச் சாத்திவிட்டு பஸ்ஸை செலுத்தத் தொடங்கினார். பஸ் சாரதி, அடுத்துவரும் பஸ்ஸை முந்துவதற்காக முடிந்த அளவு வேகமாக ஓட்டத் தொடங்கினார்.

வந்த பயணி ஒரு கையால் பொக்கற்றுள் பணத்தை எடுத்து "பதுளட்ட" என்று பணத்தைக் கொடுத்தார். அவரின் இடதுகை அகன்று மடக்க முடியாதது போல் இருந்தது. டிக்கட்டை வாங்கும் போது அவருடைய இடதுகை பக்கமுள்ள சேட் சற்றுக் கீழே இறங்கியதும் கை கறுத்தும் எண்ணெய்பூசினதுபோல மின்னிக் கொண்டும் விரல்கள் விறைத்தும் இருப்பது தெரிந்தது. சிறிது நேரம் கழித்து தனது செல்போனை எடுத்துப் பேசும்போது மேலும் சட்டைகீழே நன்றாக இறங்கியதும் அந்தக் கை உண்மைக் கையல்ல, அது ஜெயப்பூர் கையென அனைவருக்கும் விளங்கியது. அந்தப் பயணியின் பக்கத்து ஆசனத்தில் இருந்த நாகரீக உடையணிந்த பயணி, அந்தக் கையைப் பார்த்து அருவருப்படைந்து இங்குமங்குமாக நெளிந்துவளைந்து கொண்டும் ஜன்னல் வெளியே பார்ப்பதுமாயிருந்தார்.

இதுவரை சீராக ஓடிக் கொண்டிருந்த பஸ் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடிக் கடைசியாக ஒரு மலையடிவாரத்தின் சமீபம் போய் ஓய்ந்து நின்றது. பரபரப்புடன் நடத்துனரும் பயணிகளும் இறங்கினார்கள். நடத்துனர் கீழே தலையைத் தொங்கப் போட்டு டயர்களையும் பிரேக்குகளையும் சரிபார்த்தார். அதில் எவ்வித கோளாறும் இல்லையென்று தெரிந்ததும் சாரதியை அணுகி விசாரித்தார். சாரதியால் சரியாகப் பேசமுடியவில்லை. நெஞ்சைத் தொட்டுக் காட்டி நெஞ்சுவலி வலி... என்று முனகினார். நடத்துனர் என்னசெய்வதென்று குழம்ப பயணிகளும் பதற்றமானார்கள். அந்த பஸ்ஸை உடனடியாகச் செலுத்தவும் சாரதியை ஆஸ்பத்திரியில் சேர்க்கவும் எண்ணிய நடத்துனர், "யாராவது பஸ்ஸைச் செலுத்தக் கூடியவர்கள் இருக்கிறீர்களா"வென பயணிகள் கூட்டத்தில் கேட்டார். பதிலில்லை. அப்போது இருக்கிறேன் என்றொருவர் கையை உயர்த்தினார். ஜனக்கூட்டம் திரும்பிப் பார்வையைச் செலுத்தியது. அந்தக் குரலுக்குரிய பயணி பேரகல மலைச்சாரலில் ஏறிய அந்த ஜெய்ப்பூர்க் கை பயணியேதான். அவர் உடனே எழும்பி வந்து அந்தச் சாரதியைப் பயணிகளின் உதவியுடன் தூக்கித் தனது ஆசனத்தில் இருத்தி, அவசர சிகிச்சை செய்துவிட்டு, அந்தச் சாரதி இருக்கையில் தான் போயமர்ந்து பஸ்ஸைப் பிரதான சாலைக்குச் செலுத்தி நேரமாகி விட்டதால் பதுளைநோக்கி விரைவாக பஸ்ஸைச் செலுத்தி பஸ்சையும் பயணிகளையும் நிலையத்தில் சேர்த்துவிட்டு அந்தச் சாரதியின் வைத்திய செலவுக்கென தனது செக் புத்தகத்தையெடுத்து ஒரு தொகையையும் எழுதிச் சாரதியின் கையில் கொடுத்துவிட்டு அந்த அபூர்வப் பயணி ஜனங்களின் மத்தியில் மறைந்து கொண்டிருந்தார். இதுவரை அருவருப்பாக அவரின் கையைப் பார்த்த அந்தப் பயணிகளின் நிஜக்கைகள், அவரை வணங்க அவர்களின் தலைக்கு மேல் சென்று கொண்டிருந்தன.

**-ச.இரா.பாலகிருஷ்ண ஐயர்,**
**கிராண்ட்பாஸ்**

படித்துச் சுவைத்தவற்றில் பலவற்றை உங்கள் சிந்தனைக்காக
முன்வைக்கிறோம் உங்கள் அனுபவங்களையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

மனதிலே தோன்றுகின்ற எண்ணங்களின் திண்மைதான் ஒவ்வொரு மனிதன் வாய் மொழியிலும் வெளிப்படுகின்றது. என்பது அறிஞர்களின் ஏகோபித்த கருத்தாகவுள்ளது. இதை அன்றே அறிந்திருந்த வள்ளுவப் பெருந்தகை

*"நிறைமொழி மாந்தர் பெருமை நியத்து*
*மறை மொழி காட்டி விடும்"* *என்றுரைத்தார்*

சான்றோர்களின் அருளுரையானது உலகில் நிலவுகின்ற உண்மை நிலையைத் தெளிவாகக் காட்டிவிடும் என்பதற்கு அவர்கள் இல்லாத போதிலும் நிலைத்து நிற்கின்ற புகழே சான்றாகிவிடுகிறது.

நீர்க்குமிழியை ஒத்த வாழ்க்கையானது நிலையற்றது என்பதனை உணர்ந்து ஒழுகுதலே வாழ்வினை அர்த்தமுள்ளதாக்கும் அர்முள்ள வாழ்பவரே வாழ்பவராவர் எஞ்சிநிற்பது புகழே!

# ஆற்றங்கரை நினைவுகள்

## தருவது கற்பகன்

நெடு நாட்களுக்குப்பின் செண்பக வல்லியும் பூங்கொடியும் நீராடுவதற்காக ஆற்றங் கரைக்குச் செல்லத் தயாராகின்றனர். "என்ன? செண்பகவல்லி நெடுநாளாக எனை விட்டு விட்டுத் தனியாக ஆற்றங் கரைக்குப் போகும் உனக்கு இன்று என் ஞாபகம் வந்திருக்கிறதே! ஏன்? இன்று வேறுதுணை கிடைக்க வில்லையா?" என்று பீடிகையோடு தொடங் கியவள் தொடர்ந்தாள். "சாமந்தி கிடைக்க வில்லை யென்றால், தகரையாவது சூடிக்



கொள்" என்றொரு 'பழமொழி' சொல்வார்களே அது சரியாகத்தான் சொல்லியிருப்பார்கள் போலிருக்கிறது"

என்றவள், விசமத்தனமாக முறுவலித்தாள். இதைக் கேட்ட செண்பகவல்லிக்கு பாதத்தில் ஓர் பெரு நெருஞ்சிமுள் தைத்தது போலிருந்தது. ஆயினும், அந்தச் சந்தர்ப்பத்தில் அவளால் அதற்குப் பதில் சொல்ல முடியாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தாள்.

சிறுவயதிலிருந்தே அவளோடு தோழியாக இருந்தவள் பூங்கொடி. சிலவேளைகளில் இரவிற் கூட அவள் இல்லத்திலேயே அவளோடு உறங்கிவிடுவதும் உண்டு. அந்த நாட்களிலெல்லாம் ஆற்றங்கரைக்கு இருவருமே வருவார்கள். அப்படியான உயிர்த் தோழியைக் கூட புறக்கணிக்கும் அளவுக்குத் தன்னை ஆளாக்கியது அருள்வர்மனின் காதல்தான் என்பதை அவளின் உள்மனம் சொல்லிக் கொண்டிருப்பதை அவள் மறுப்பதற்கில்லை. அருள்வர்மனின் காதல் கிடைத்தபின்பெல்லாம், பூங்கொடியின் நட்பில் இடைவெளி அதிகமாகிக் கொண்டுவருவதை ஏற்கனவே அவள் உணர்ந்திருந்தாலும், பூங்கொடி தங்கள் இருவரின் தனிமைக்கு இடைஞ்சலாக இருப்பாளே என்பதால், ஆற்றங்கரைக்குச் செல்லும் நேரங்களில் தனியாகவே செல்லத் தலைப்பட்டாள். பூங்கொடி அதை இன்று கேலியாகவே கேட்டுவிட்டாள். அவள் கேட்டபோது அவளை முறைத்துப் பார்த்தாலும், அவள் கோபப் படவில்லை. பதிலாக அவளிடத்தில் செண்பக வல்லிக்கு ஒரு மரியாதை கலந்த அன்புதான் தோன்றியது.

"என்னடி இப்படிச் சொல்லிவிட்டாய்? உன்ன மறப்பதற்கு நான் என்ன நெஞ்சமுழுத்தக்காரியா? "அவர் என்னுடன் இருக்கும் பொ..ழு..து" என்று, நிலைமையைச் சொல்லமுடியாமல் தயங்கியவளைச் சீண்டி விடுவதுபோல் கேட்டாள் பூங்கொடி. "ஏன்? நான் உங்கள் உல்லாசத்தையெல்லாம் கெடுத்துவிடுவேன் என்பதைச் சொல்ல வருகிறாய் போலிருக்கிறதே; ஐயையோ! அதையெல்லாம் நான் பார்த்துக் கொண்டிருக்க வரமாட்டேன்." என்றவள் கண்களைச்சிமிட்டினாள். இதைக் கேட்ட செண்பகவல்லிக்கு வெட்கத்தால் முகம் செம் பருத்திப் பூவை மிஞ்சுமளவுக்கு சிவந்துவிட்டதாயினும் அதைக் காட்டிக் கொள்ளாமல் "போடி நீ மிகவும்தான் குறும்பு செய்கிறாய்" என்றவள், செல்லமாக பூங்கொடியின் பின்புறத்தில் தட்டினாள். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, "ஏது? அவரிடம் நீ பழகியதையெல்லாம் என்னிடத்தில் ஒப்புவித்து விடுவாய் போலிருக்கிறதே" என்றவள். கொல் என்று சிரித்துவிட்டாள். இதைப் பார்த்த செண்பகவல்லிக்கு சிரிப்பை அடக்கமுடியவில்லை. அவளும் சிரித்துக் கொண்டே பூங்கொடியை கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

உயிருக்குயிரான தோழியரின் அன்புப் பிணைப்புக்கும், காதலுக்கும் வெகுதூரம் வித்தியாசமில்லை என்பதனை எடுத்துக்காட்டும் நிகழ்வாக அமைந்த பிணைப்பில்தான் எத்தனை மகிழ்ச்சி. அந்த நிலையிலும், 'செண்பகவல்லி' தன் உள்ளக் கிடக்கைகளை பூங்கொடியிடம் சொல்லியாவது ஆறுதல் காண எண்ணியவளாய் 'பூங்கொடி'> நான் அவரை சந்திக்குமுன் நீயும் நானும் எப்படியெல்லாம் எங்கள் எதிர்காலம் பற்றிப்பேசிக் களித்திருப்போம். துன்பமென்பதே என்ன வென்று தெரியாத அளவுக்கு நாட்களைக் களித்திருப்போம். அவை யாவும் இன்று தடந்தெரியாமல் போய்விட்ட பாதைகளாகி விட்டனவா? என்று, ஏங்க வேண்டிய நிலை உருவாகி இருப்பதுதானடி எனக்கு என்றுமில்லாத அளவுக்கு வேதனையைத் தருகிறது" என்றவளின் குரலில் தோன்றிய சோகத்தின் சாயல் பூங்கொடியை மிகவும் வருத்தியது. "நீ வருந்துமளவுக்கு என்னடி வந்துவிட்டதுனக்கு" "மிகச் சுலபமாகக் கேட்டுவிட்டாயே! நான் படும் வேதனை உனக்கெங்கே புரியப்போகிறது? அவர் என்னை விட்டுப் பிரிந்து சென்றுவிடுவாரா பூங்கொடி? "பயித்தியம் என்பார்களே அது உனக்கு மிக முற்றிவிட்டது போலிருக்கிறதே?" என்றாள் பூங்கொடி. அவள் இப்படிக் கூறியதும், அவளை இலேசாக முறைத்துப் பார்த்தவள் "ஆமாம், எனக்குப் பயித்தியந்தான். அது உனக்கும் பிடிக்காமல் பார்த்துக்கொள்" என்றவள் முகத்தைச் சுளித்தவாறு சற்று ஒதுங்கிநின்று கொண்டாள்.

"நான் என்ன சொல்லிவிட்டேன் என்று என்னோடு கோபித்துக் கொள்கிறாய்? "பிறகென்ன? நான் படும் துன்பங்களைத் தெரிந்து கொண்டும், யாரோ அந்நியரிடம் பேசுவது போல் பேசுகிறாயே" "நீ வீணாக மனதைக் கெடுத்துக் கொள்வதற்கு நான் என்ன? செய்ய முடியும் நீ அவரைப்பற்றி அறிந்தது அவ்வளவுதான்."

"ஓகோ! என்னைவிட அவரைப்பற்றி நீ அறிந்திருக்கிறாயோ? எவ்வளவு காலமாக இந்த நாடகம்" என்றதைக் கேட்டதும் திடுக்குற்றாள் பூங்கொடி. "விளையாட்டுக்கும் ஒரு எல்லை இருக்கிறது. வீணாக வார்த்தைகளைக் கொட்டிவிடாதே அது விபரீதமாகவும் ஆகிவிடும்" என்று கூறியது தோழியை கண்டிப்பது போலிருந்தது. செண்பகவல்லி எதுவும் புரியாத நிலையிலிருக்கிறாள் என்பது அவளின் வில்லினை ஒத்த புருவங்கள் உயர்ந்து, பதிவதிலிருந்து புரிந்து கொண்டாள் பூங்கொடி "அரண்மனையிலிருந்துவரும் செய்திகள்தான் அவரையும் அவர் சூரத் தனத்தையும் நாடெல்லாம் பரப்பி விடுகிறதே அது உனக்குத் தெரியாது என்பதற்காக மற்றவர்களும் அறியாமலிருக்க வேண்டுமாக்கும்" என்றவளை வியப்போடு பார்த்தாள் செண்பகவல்லி. அவள்முக மலரில் தென்படுகின்ற மலர்ச்சியைக் கண்ட பூங்கொடி, அவரைப்பற்றித் தெரியும் என்று சொன்னவுடனேயே அவரை நான் மயக்கி வைத்துக் கொண்டிருக்கிறேன் என்று நினைத்துவிட்டாய் போலிருக்கிறதே!" இதனைக்கேட்டதும் செண்பகவல்லிக்கு அவசரத்தில் தவறாகப் பேசிவிட்டோமே என்ற எண்ணம் அவளின் மலர்ந்த முகத்தில் சிறிது வாட்டம் தோன்றியது "அப்பப்பா! எத்தனை மோகம் அந்த அழகு மன்மதனிடம் உனக்கு சற்று முன்பெல்லாம் மூக்கைச் சிந்திக் கொண்டிருந்த உனக்கு அவரைப்பற்றி இரண்டு வார்த்தைகள் புகழ்ந்து பேசியதும் உன்துன்பமெல்லாம் பறந்துவிட்டது போலிருக்கிறதே"

"அவரை தெரியும் என்று கூறியதற்கே இப்படியென்றால், வேறு யாராவது கொத்திக் கொண்டு போய்விட்டால்" கூறிமுடிப்பதற்குள் பூங்கொடியின் வாயைத் தனது தளிர்க்கரத்தால் பொத்திக் கொண்டவள், பூங்கொடியின் முகத்தைப் பார்த்தாள். அந்தப் பார்வை அவரின் புகழைப் பற்றிக் கேட்டதில் மனமதிலுள்ள கவலையை மறந்திருக்கின்றேன். அந்த மகிழ்வைக் கெடுக்கக்கூடிய எதையும் கூறிவிடாதே என்று கெஞ்சுவது போலிருந்தது. பூங் கொடி மெதுவாக அவள் கைகளைப் பிடித்தாள். அந்த அன்புப் பிடியினிலிருந்த மென்மை, கலங்காதே உன்காதல் நிச்சயம் நிறைவேறும் என்பது போலிருந்தது.

*"நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட் டிசையும் இனிய செவிக்கு"*

(அதிகாரம் : 120, குறள் : 1199.)

## சிந்தியா பதில்கள்

✍ **உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்குப் புலிகள் விரும்புவதுபோல் தெரிகிறதே.**

-வை.வேலாயுதம், குருமன்காடு.

வடக்கு, கிழக்கில் அரச இயந்திரத்தை முடக்கிப் போட உள்ளூராட்சி அதிகாரம் அதிக வாய்ப்பானது என்பதற்காக சாதகமாக யோசிக்கிறார் களாக்கும். ஆட்சிக்கு வந்தால் தெரியும் மக்கள் சேவை எப்படிப்பட்டதென்று.

✍ **பொங்கி எழும் மக்கள் படை என்ற பெயரால் மீண்டும் தாக்குதல் அறைகூவல் விடுக்கப் பட்டிருக்கிறதே, யாழ்ப்பாணத்தில் மழை விட்டும் தூறல் விடவில்லையோ?**

-கோ.பத்மபிரியா, திருநெல்வேலி.

எய்தவன் எங்கோ இருக்க ஏன் அம்பை நோகுகிறீர்கள். மிச்சமாக இருக்கும் மக்களை நினைத்துத் தான் கவலையாகவுள்ளது.

✍ **மேலகத்திலும் மலையகத்திலும் தனியாகப் போட்டியிடப் போவதாக மனோ கணேசன் திடீர் அறிவிப்பு வெளியிட்டுள்ளாரே?**

-ரஜனிகுமார், மஸ்கெலியா.

உள்ளூராட்சித் தேர்தலில் துப்பாக்கியுடன் ஓடர் போட எவரும் இல்லை என்ற துணிவுதான்.

✍ **மட்டக்களப்பிற்கு தினமும் பல மணி நேரம் தாமதித்தே புகையிரத வண்டி வருவதும் போவதுமாக உள்ளது! யாரிடம் முறையிடலாம்?**

-எஸ்.மஞ்சுளா, மட்டுநகர்.

மஞ்சுளா, பாதணி இல்லாத உங்களை விட, காலே இல்லாத யாழ். மன்னார் மக்களைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்.

✍ **வன்னியில் சட்டம், ஒழுங்கு சரியாகப் பின்பற்றப்படுகின்றதாமே?**

-தாசீம், வவுனியா.

குற்றவாளிகளின் நீதிமன்றில் உங்கள் வழக்கு வரும்போது தெரியும்.

✍ **வெலிக்கந்தையில் உண்மையில் என்ன நடந்தது? எதையும் நம்பமுடியவில்லையே?**

-எம்.ஏ.காதர், செங்கலடி.

நல்ல மூலக்கதை; நல்ல இயக்கம். ஆனால் திரைக்கதையில் சொதப்பிப் போட்டினம்.

✍ **இந்தியாவுடனான பாகிஸ்தானின் டெஸ்ட் தொடர் வெற்றி எதைக் குறிக்கிறது?**

-ஏ.எச்.ரபாய்டீன், பேருவளை.

தூக்கப்பட வேண்டியது கங்குலி மட்டுமல்ல என்பதைத் தான்.

✍ **ஜெனீவாவில் பேச்சு வார்த்தை ஆரம்பமாகப் போகின்றதாமே?**

-சுதன், நீர்வேலி.

ஊரில் பழையபடி கப்பம் வசூலிப்பும், ஆட்கடத்தலும், அரசியல் பணியும் மெல்ல மெல்ல ஆரம்பிப்பதைப் பார்த்தால் அப்படித்தான் தெரிகிறது.



✍ **உங்களுக்கு வாக்களிக்க நான் ரெடி! உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட நீங்கள் ரெடியா?**

-ஜோ.பிரவீணா, சுண்டுக்குளி.

சுதந்திர தாயகத்தில் முதலமைச்சராக நான் ரெடி; அதுவரை காத்திருக்க நீங்க ரெடியா.

✍ **ராஜீவ் காந்தியின் புதல்வர் ராகுல், அரசியலுக்கு வந்துவிட்டாராமே?**

-ஜே.இஸ்மாயில், கல்முனை.

உலகத்தில் 5ஆவது தலைமுறை அரசியல் வாரிசு என்ற புகழ் அவருக்கு இருந்தாலும் ஸ்ரீபெரும்புகரைத்தான் அவரால் மறக்கமுடியாமல் இருக்கிறதாம்.

✍ **சிந்தியா! உங்கள் கனவில் அடிக்கடி யார் முகம் தெரிகிறது?**

-எம்.கவிதா, கண்டி.

இனந்தெரியாத நபரென்பதால் முகம் பார்க்கக் கிடைப்பதில்லை.

✍ **சர்வதேசத்தின் பார்வை புலிகள் மீது எவ்வாறு பதிந்துள்ளது?**

-பி.ரமணன், கோப்பாய்.

வரி வரியாக...............

✍ **மனைவிமாரின் உழைப்பில் ஆடம்பரம் செய்யும் கணவன்மார் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

-ஜே.கலா, திருக்கோவில்.

கொடுத்து வைத்தவர்கள்...

✍ **விஜய் - த்திரிஷா ஜோடி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

-மணிமாறன், மன்னார்.

சங்கீதாவுக்குத்தான் தலையிடி.


# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## மீண்டும் மார்ட்டினா வெற்றி; கவலையில் ஷரபோவா


**டோக்கியோவில்** நடைபெற்று வரும் பான் பசுபிக் ஓபன் டென்னிஸ் போட்டியில் மரியா ஷரபோவாவை 6-3, 6-1 என்ற நேர் செட்களில் அதிரடியாக வென்று இறுதிக்குத் தகுதி பெற்றார் மார்ட்டினா ஹிங்கிஸ்!

தற்போது உலக தரவரிசையில் 117ஆவது இடத்தில் உள்ள மார்ட்டினா ஹிங்கிஸ் உலக தரவரிசையில் 4 ஆவது இடத்தில் உள்ள ஷரபோவை வென்றதன் மூலம் முதல் 50 இடங்களுக்குள் முன்னேறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



மற்றொரு அரையிறுதிப் பேட்டியில் ரஷ்யாவின் எலீனா டடண்டிவாவும், அனஸ்டாசியா மிஸ்கீனாவும் மோதுகின்றனர். இந்தப் போட்டியில் வெற்றி பெற்று இறுதிக்கு தகுதி பெறும் வீராங்கனையுடன் இறுதிப் போட்டியில் மார்ட்டினா ஹிங்கிஸ் மோதுவார்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் தனது டென்னிஸ் பயணத்தை தொடர்ந்த ஹிங்கிஸ், நடந்து முடிந்த அவுஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் போட்டிகளின் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கும், கலப்பு இரட்டையரில் மகேஷ் பூபதியுடன் இணைந்து சாம்பின் பட்டமும் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



தனது சாதனையைத் தானே முறியடிக்கும் வீரர் சச்சின் தான் பெற்ற அதிகூடிய ஒருநாள் ஓட்டங்களை தானே அண்மைய பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 100 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் முறியடித்துள்ளார் அந்தவகையில் அவரின் நிலை தொடர்பான விபரம்..

| பெயர் | அணி | போ. எ. | ஓட். | சராசரி | உ.ஓ. | 100கள் | 50கள் |
|---|---|---|---|---|---|---|---|
| சச்சின் டெண்டுல்கர் | இந். | 350 | 14009 | 44.19 | 186 | 39 | 71 |
| இன்ஷமாம் உல்-ஹக் | பாக். | 325 | 11119 | 40.14 | 137 | 10 | 82 |
| சனத் ஜெயசூரிய | இல. | 341 | 10456 | 32.07 | 189 | 19 | 59 |
| சவ்ரவ் கங்குலி | இந். | 270 | 10123 | 40.65 | 183 | 22 | 60 |
| முகமட் அஹாருதீன் | இந். | 308 | 9379 | 36.93 | 153 | 7 | 58 |
| பிரைன் லாரா | மே.இ. | 252 | 9359 | 41.41 | 169 | 19 | 57 |
| அரவிந்த டி சில்வா | இல. | 296 | 9284 | 34.09 | 145 | 11 | 64 |
| ராகுல் ட்ராவிட் | இந். | 255 | 8861 | 40.01 | 153 | 11 | 65 |
| சயீட் அன்வர் | பாக். | 244 | 8823 | 39.21 | 194 | 20 | 43 |
| ரிக்கி பொண்டிங் | அவு. | 238 | 8806 | 41.93 | 145 | 18 | 51 |

## நாங்கள் நசுக்கப் படுகின்றோம்.....

8 ஆம் பக்கத் தொடர்ச்சி...

'நாளை உங்க பிள்ளைக்குக் கூட இப்படி நேரலாம்?' என எச்சரிக்க விரும்புவேன். ஆனால், நினைப்பதெல்லாம் நடக்கிறதா என்ன?' இப்போது சொல்லும் போதும், கோபத்தை விட வேதனையே வழிகிறது ரேவதியின் முகத்தில்

"ஒரு நாள் 'அம்மாவுக்கு சீரியஸ்' எனத் தகவல் வந்தது. பதறியடித்து ஊருக்குள் ஓடினேன். ஊருக்கு வெளியே ஒரு இடத்தில் என்னை நிற்கவைத்து, என் தலையை மொட்டையடித்து, அடித்து இழுத்துப் போனார்கள். என்னை என் வீட்டுக்காரர்களே பைத்தியம் என்று ஊருக்குச் சொன்னார்கள். நான் என் மனசுக்குள் மறுபடியும் இறந்துபோனேன். நான் நிர்வாணமானது. (ஆபரேஷன் மூலம் பெண்ணாக மாறிக்கொள்ளுதல்) வீட்டுக்குத்தெரியாது. மறுபடியும் தப்பி ஓடி, பெங்களூருக்கு வந்தேன். இனி, பாலியல் தொழிலுக்குப் போகக் கூடாது. அங்கே தொழில் செய்கிற பெண்களுக்கு கௌரவமாக வாழ நாம் போராட வேண்டும் என முடிவெடுத்தேன். சங்கமா எனும் அமைப்பில் சேர்ந்தேன். நான் கேட்ட, பார்த்த, அனுபவித்த கதைகளை வாக்குமூலங்களாக, கதைகளாகப் பதிவு செய்தேன். அதுதான் உணர்வும் உருவமும்.

இப்போது ரேவதி, பயந்தாங்குளி அல்ல, உரிமைப் போராளி. என் வீட்டில் சொத்து பிரித்த போது, அரவாணியானாலும் சொத்துரிமை உண்டு என்பதை நிருபிக்க சட்டப்படி போராடி என் பங்கை வாங்கினேன். இந்தியத் தண்டனைச் சட்டம் இ.பி.கோ-377ஐ (இயற்கைக்கு மாறான உறவு) மாற்றச் சொல்லி போராடி வருகிறேன். ஏன், அரவாணிகளுக்கு பாலியல் தேவையே கிடையாதா? இருக்கக் கூடாதா? ஒரு அரவாணி ஒரு ஆணுடன் உறவு வைத்துக்கொள்வது இயற்கையான உறவன்றி வேறென்ன என்று கேட்கிறேன்.

எனக்கு ஒரு காதலன் இருந்தான். நானும் அவனும் திருமணம் செய்து கொண்டோம். ஒரே வருடத்துக்குள், நான் அவனுக்குப் போரடித்துவிட, சொல்லிக்கொள்ளாமல் ஓடிப்போனான். இப்போது எனக்கென்று காதலன் யாரும் இல்லை. யாராவது தோழமையோடு நேசித்தால் ஏற்றுக்கொள்கிறேன். நான் ஒன்பதாவது படித்தபோது ஒரு பையன் எனக்கு பூ கொடுத்தான். அவனுக்கு நான் சில முத்தங்களைக் கொடுத்தேன். அவனுக்கு அது போதும். என் மீது அன்பு செய், நான் உனக்கு என்றென்றும் அன்பானவளாக இருக்கிறேன். எனக்குத் துன்பம் செய்தால், என்றென்றைக்குமாக விலகிப் போய்விடுகிறேன். அவ்வளவுதான், என் வாழ்க்கை.

புறக்கணிக்கப்பட்ட என் வாழ்க்கையில் புதிய பூக்கள் பூத்திருக்கின்றன. நான் என் போன்ற மூன்று மகள்களைத் தத்தெடுத்திருக்கிறேன். எனக்கு ஒரு அம்மா இருக்கிறார். இப்படி என் அரவாணி குடும்பம் ஒரு பக்கம். எந்த அம்மா என்னை அடித்தாரோ, அதே அம்மாவை உடன்பிறந்தோர் கவனிக்காமல் விட்டுவிட்டார்கள். இப்போது என் தாயையும் என் பாதுகாப்பில் வைத்துப் பராமரிக்கிறேன்.

இதுதான் என் சமூகம், என் உலகம். இப்போது நான் தனி மனுஷி இல்லை. புறக்கணிக்கப்படும், வெறுத்து ஒதுக்கப்படும் ஒரு சமூகத்தின் உரிமைக் குரல்! என்கிற ரேவதி, இறுதியாகச் சொல்வது ஒன்றே ஒன்றுதான்...

நசுக்கப்படும் வர்க்கம், ஒரு நாள் முளைத்து எழும் என்கிறது சித்தாந்தம். நாங்கள் இன்று நசுக்கப்படுகிறோம் நண்பர்களே!

*நன்றி :- ஆவி*

## வடக்குக் கிழக்கில் உள்ளூ.....

5 ஆம் பக்கத் தொடர்ச்சி...

தேர்தல் நடத்தப்படுவதற்கு உகந்த சூழல் வடக்கு - கிழக்கில் இல்லை. ஏனெனின், ஏற்கனவே மக்களால் உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் புலிகளால் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். இப்போதும் மாற்றுக் கருத்துக் கொண்ட எந்தவொரு தமிழ்க் கட்சியும் சுதந்திரமாகத் தமது கொள்கைகளை - வேலைத்திட்டத்தை மக்களிடம் கொண்டு செல்லமுடியாதுள்ளது. மக்களும் தமக்கு விருப்பமான ஒரு கட்சி பற்றி - வேட்பாளர் பற்றி உதடு பிரித்து கருத்துக் கூற முடியாது. ஜனநாயகம் மறுக்கப்பட்டு புலிகளால் படுகொலைகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கையில் நியாயமான தேர்தல் நடைபெற எந்த வாய்ப்பும் இல்லை.

புலிகளைப் பொறுத்தவரை அரசின் இயந்திரம் செம்மையாக மக்களால் தெரிவு செய்யப்படு பவர்களால் வடக்கு, கிழக்கில் நடைபெறக்கூடாது என்பது பிரதான நோக்கமாக இருக்கிறது. ஆனால் தற்போது இருப்பது போல் வெறுமெனவே பதவிகளின் வெற்றிடங்களைத் தமக்கு சார்பானவர்களைத் தெரிவு செய்து செயற்பட விடாமல் தடைபோடுவதை ஒரு யுக்தியாகக் கருதக் கூடும். உதாரணமாக இருபத்திரெண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் எதற்கும் பிரயோசனமில்லாமல் இருப்பதுபோல் வடக்கு, கிழக்கின் உள்ளூராட்சி சபைகளையும் ஸ்தம்பிதமடையச் செய்ய நினைக்கிறார்கள். மறுபுறத்தில் சிங்கள அரசின் கீழ் அதன் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு செயல்படவும் பதிலளிக்கவும் வேண்டிய ஒரு சூழலும் எழும். அதை எப்படி எதிர்கொள்வது என்பதும் ஒரு கேள்வியாக இருக்கிறது. பாராளுமன்றத்துக்கு புலிகளால் அனுப்பப்பட்டவர்கள் சிங்கள அரசின், சம்பளம், வாகனம், சலுகைகள் எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டு மக்களுக்காக எதையும் செய்யாமல் இருப்பதுபோல் உள்ளூராட்சியின் அதிகாரத்தையும் முடக்கிப்போட புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

புலிகளின் இந்த சதித்திட்டங்களைத் தகர்த்து நியாயமான தேர்தலை அரசாங்கத் தால் நிச்சயம் நடத்தமுடியாது. மக்களாலும் சுதந்திரமாக வாக்களிக்க முடியாது.

நடக்காத இந்த இரண்டும் நடந்து உண்மையான ஜனநாயகமும் மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் நிர்வாகம் வடக்கு கிழக்கில் நடக்குமாக இருந்தால் அது புதிய வரலாற்றை எழுதும்.

அந்தப் புதிய அத்தியாயமானது - யுத்தத்தாலும் சுனாமியாலும் பெரும் பாதிப்புக்கு முகம் கொடுத்து சீவியம் நடத்தும் வடக்கு, கிழக்கு மக்களின் புனர்வாழ் வுக்கும், புனரமைப்புக்கும் ஆகக் கூடிய பங்களிப்பை வழங்கும். உள்ளூராட்சி சபைகள் செம்மையாக இயங்கினால் அழிந்துபோன எமது தேசம் புதுப்பொழிவு பெறும். மக்களின் இயல்பு வாழ்வு மெல்ல மெல்லத் திரும்பும். நம்மை யார் ஆள்வது என்ற பிரச்சினை ஒருபுறமிருக்க மக்களே மக்களை ஆளுகின்ற புதுமை நிகழும். அவ்வாறானதோர் நிம்மதியான சூழலில் அடிப்படைப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கான பாதை அண்மித்துக்கிடக்கும். இவ்வாறனதொரு பெருமாற்றம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுவிட்டால், புலிகளின் யுத்த முழக்கங்களுக்கு மக்கள் செவி சாய்க்கப் போவதில்லை. பின்னர் ஆயுதப் போராட்டம் ஒன்றின் தேவை அவசியமற்றதாகிவிடும். ஆயுதங்களை நம்பி வாழும் புலிகளுக்குப் பின்னால் மக்கள் திரளப் போவதில்லை. ஆகவேதான் அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் புலிகள் மிகுந்த அவதானத்தோடு இருக்கிறார்கள். இதன் வெளிப்பாடு தான் மக்களின் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுவதும் ஜனநாயக சக்திகள் படுகொலை செய்யப்படுவதுமாகும். இதைப் புரிந்து கொள்ளாமல் உள்ளூராட்சி சபைத் தேர் தல் நடைபெற்றால் வடக்கு, கிழக்கில் ஜன நாயகம் பூத்துவிடும் என்று அரசாங்கமோ, சர்வ தேச சக்திகளோ கருதினால் அது ஏமாற் றத்துக்கும், பெருந்தவறுக்குமே வழி சமைக்கும்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 3, கூட்டெண் - 8

3, 12, 21, 30 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 8 வருமேயானால் குரு, சனி ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் சுமாரான உயரம் உடையவர்களாகவும், மிதந்த கண்களை உடையவராகவும், தைரியசாலியாகவும் காட்சியளிப்பர்.

ஆரம்ப வாழ்க்கையில் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்த போதும், படிப்படியாகச் சளைக்காமல் போராடி முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்லுவர். பல பொறுப்புகளைச் சுமந்து கொண்டு வாழும் இவர்கள், நேர்மையாக இருந்தாலும் பழிச்சொல் வரும். கலைஞானம் கொண்ட இவர்கள் தனது தனித்திறமையாலும், கைத்தொழிலாலும் முன்னேற்றமடைவர்; சில நேரங்களில் இவர்களது தொழில் ஸ்தம்பித்துப் போய்விடும். ஆனால் பெயர் நன்றாக அமைந்துவிட்டால் வளர்ச்சி தொடரும்.

உத்தியோகத்திலிருக்கும் சிலர் பிறந்த திகதிக்குப் பொருத்தமான பெயரை அமைத்துக் கொண்டால் உத்தியோக உயர்வும், நல்ல முன்னேற்றமும் கிடைக்கும். உத்தியோகத்திலிருக்கும் இவர்களுக்கு வருமானம் போதவில்லை என்பதால் வேறு ஏதாவது தொழிலில் ஈடுபடலாம் என்று எண்ணிக் கொண்டிருப்பர். பெயர் சரியானபடி அமைந்திருக்குமேயானால் தொழிலில் வெற்றி பெறுவது உறுதி.

எல்லா உலக விஷயங்களையும் தெரிந்திருக்கும் இவர்கள், எப்பொழுதும் சுறுசுறுப்பாகக் காட்சியளிப்பர். ஆனால் ஓய்வெடுக்க வேண்டும் என்று நினைத்தால் சோம்பேறியாகி விடுவர். சிலர் தொழிற்கல்வியால் உயர்வும் இன்னும் சிலர் கற்பனா சக்தியால் எழுத்தின் மூலம் உயர்வும் பெறுகின்றனர். பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் கோர்ட்டு வழக்குகளும் உடலில் பெரும் வியாதிகளும் வந்துவிடும். சில நேரங்களில் இவர்கள் எதையோ இழந்தது போன்று காட்சியளிப்பர். தியான மனநிலை கொண்ட இவர்கள் திடீரென்று தன்னம்பிக்கையை இழப்பர். பிறரை எளிதில் நம்பாத இவர்கள் எதிலும் முன் ஜாக்கிரதையாகவே இருப்பர்.

பணச்செலவு செய்வதில் சிக்கனமாக இருக்கும் இவர்களுக்கு விரையச் செலவுகள் வரும். இதனால் இதைத்தடுப்பதற்கு தெய்வீக வழிபாடுகளைக் கடைப்பிடிப்பர். பூட்டிய பூட்டை மூன்று முறை இழுத்துப் பார்க்கும் குணம் படைத்த இவர்கள், தான் ஒரு சீர்திருத்தவாதியாக வாழ வேண்டும் என்று எண்ணுவர். இவர்கள் தனது பெயரைப் பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டால் சிறப்பாக வாழலாம்.

***தொழில்:***

இவர்களுக்கு உலோகம் சம்பந்தமான தொழில்கள் அனைத்தும் நன்மை தரும். இஞ்சினியரிங், மோட்டார் வாகனம், இரும்பால், எழுத்தால் ஆன தொழில்கள், காண்டிராக்ட், கமிஷன் போன்றவற்றால் லாபம் அடைவர்.

***நோய்:***

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு மூட்டுவலி, வயிற்றுவலி, நீர் சம்பந்தமான வியாதிகள், வாயுக் கோளாறு வந்து நீங்கும்.

***பெயர் அமைக்கும் முறை:***

இவர்களுக்கு குரு ஆதிக்கமான 21, 39 போன்ற எண்களிலும், புதன் ஆதிக்கமாகிய 14, 23, 32, 41, 50, 59, போன்ற எண்களிலும், சூரிய ஆதிக்கமான 19, 37, 46, 64 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

***பின்பற்ற வேண்டியவை:***

யோகமான எண் - 3, 5.
யோகமான திகதிகள் - 3, 12, 21, 30; 5, 14, 23; 1, 10, 19.
யோகமான நிறம் - ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூ நீலம், மஞ்சள்.
யோகமான மோதிரக்கல் - எமிதிஸ்ட், நீலக்கல்.
ஆகாத நிறம் - கறுப்பு, பச்சை, சிவப்பு.
ஆகாத திகதிகள் - 6, 15, 24; 8, 17, 26.

அடுத்த வாரம் பிறப்பெண் 3, கூட்டெண் 9 பற்றிப் பார்ப்போம்

# வெற்றி வீரர் வில்லியம் (1027 - 1087- நூற்றாண்டு)

## உலகை வியக்க வைத்தவர்கள்

**1066ஆம்** ஆண்டில் நார்மண்டி கோமகனான வில்லியம் இங்கிலாந்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் ஒரு சில ஆயிரம் வீரர்களுடன் ஆங்கிலேய கால்வாயைக் கடந்தார். அவருடைய வீர முயற்சி வெற்றி பெற்றது. இங்கிலாந்தின் மீது நடைபெற்ற படையெடுப்பு வெற்றியடைந்தது இதுவே இறுதி முறையாம். இந்த நார்மன் வெற்றி வில்லியத்திற்கும் அவருடைய சந்ததியாருக்கும் இங்கிலாந்தின் வரலாற்றையே பெரிதும் மாற்றியது. அவ்விளைவுகளைப் பற்றி அப்போது வில்லியமே உணர்ந்திருக்க மாட்டார்.

1027இல் வில்லியம் பிரான்ஸில் நார்கண்டியிலுள்ள பலாய்ஸ் எனும் நகரில் பிறந்தார். அவர் நார்மண்டி கோமகனான முதலாம் ராபர்ட்டின் ஒரே மகன். இவர் திருமணத்தின் மூலமாக பிறந்தவரல்லர். ஜெரூசலத்திற்குத் திருப்பயணம் சென்று திரும்பும்போது ராபர்ட் 1035இல் இறந்தார். அவர் செல்வதற்கு முன்னே வில்லியம் தமது வாரிசாக நியமித்திருந்தார். இவ்வாறாக வில்லியம் தமது 8ஆம் வயதில் நார்மண்டி கோமகனானார்.



வில்லியம் பதவியேற்ற போது, செல்வமும் ஆற்றலும் பெற்றவராக இல்லை. அவருடைய நிலைமை உறுதியில்லாதிருந்தது. அப்போது அவர் சிறுவனாக இருந்தார். அவரது அதிகாரத்திற்குட்பட்ட நிலமானியப் பிரபுக்கள் வயது முதிர்ந்தவர்களாக இருந்தனர். ஆகவே அவர்கள் மீது பற்றுக் கொண்டிருந்ததை விட, தம் அதிகாரத்தின் மீது ஆர்வம் கொண்டவர்களாக இருப்பதில் வியப்பில்லை. அதன் விளைவாக நாட்டில் குழப்ப நிலை நிலவியது. அப்போது வில்லியத்தின் பாதுகாவலர் மூவர் படுகொலை செய்யப்பட்டனர். அவருடைய ஆசிரியரும் கொலையுண்டார். பெயரளவில் தம் மேலாண்மையாளராக இருந்த பிரெஞ்சு மன்னர் முதலாம் ஹென்றியின் உதவியினால், வில்லியம் அந்த இளம் வயதில் உயிர் பிழைத்தார்.

1042இல் இளைஞரான வில்லியம் வீரர் பட்டம் பெற்றார். அதன் பிறகு அவர் அரசியல் நிகழ்ச்சிகளில் நேராகப் பங்கு பெற்றார். நார்மண்டியின் நிலமானியப் பிரபுகளுக்கெதிராக நீண்ட நாள் போர் புரிந்தார். இறுதியில் தமது ஆட்சியை உறுதியாக நிலைப்படுத்துவதில் வெற்றி பெற்றார்.(அவர் திருமணத்திற்குப் புறம்பாகப் பிறந்தவராதலின் அது அவரது அரசியல் வாழ்க்கைக்குப் பெருந்தடையாக இருந்தது. அவருடைய எதிரிகள் அவரைக் "கனவில் பிறந்தவன்" என்றே குறிப்பிட்டனர்). 1063இல் அவர் அண்மையிலுள்ள மேன்ய் மானிலத்தைக் கைப்பற்றினார். 1064இல் அவர் அடுத்துள்ள பிரிட்டன் மானிலத்தின் மேலாண்மையாளராகவும் ஏற்றுக் கொ.ள்ளப்பட்டார்.

1042 முதல் 1066 வரை புனிதர் எனப்படும் எட்வர்டு மன்னர் ஆண்டு வந்தார். எட்வர்டு குழந்தைகள் இல்லாமையினால், ஆங்கிலேய அரியணைக்கு உரிமை கொண்டாடப் பல முயற்சிகள் நடைபெற்றன. இரத்த உறவுப்படி எட்வர்டுக்குப் பின் பதவிக்கு வருவதற்கு வில்லியத்திற்கு அதிக உரிமை இல்லை. எட்வர்டின் அன்னை வில்லியத்தின் தாத்தாவினுடைய சகோதரி ஆயினும், வில்லியத்தின் திறமையைக் கண்ட எட்வர்டு வில்லியத்தை தமது வாரிசாக ஏற்றுக் கொண்டார்.

1064இல் ஆங்கிலேயப் பிரபுக்களுள் ஆற்றல் மிக்க பிரபுவும் எட்வர்டின் நெருங்கிய தோழரும் மைத்துனருமான ஹெரால்டு காட்வின் வில்லியத்தின் கையில் அகப்பட்டார். வில்லியம் அவரை நன்றாக நடத்தினார். ஆயினும் ஆங்கிலேய அரியணைக்குத் தாமே உரிமை உள்ளவர் என்பதை ஹெரால்டு ஏற்று வாக்குறுதி அளிக்கும்வரை வில்லியம் அவரை காவலில் வைத்திருந்தார். இவ்வாறு பெறப்படும் வாக்குறுதி சட்டபூர்வமாகவோ அற நெறிக்கேற்பவோ செல்லுபடியாகுமென பலர் நினைப்பதில்லை. ஹெரால்டும் அவ்வாறே கருதினார். 1066இல் எட்வர்டு இறந்ததும் ஹெரால்டுகாட்வின் ஆங்கிலேய அரியணைக்கு உரிமை கொண்டாடினார். (அரியணை உரிமை பற்றி பலமுறை முடிவு செய்து வந்த ஆங்கிலேய பிரபுக்களின் அவையாகிய) அறிவோர் அவை அவரைப் புதிய மன்னராகத் தெரிந்தெடுத்தது. தனது ஆட்சியைப் பரப்ப விரும்பிய வில்லியம், ஹெரால்டின் வாக்குறுதியைக் கண்டு வெகுண்டெழுந்தார். படைபலத்துடன் தமது உரிமையை நிலை நாட்டுவதற்காக இங்கிலாந்தின் மீது படையெடுக்க முடிவு செய்தார்.

வில்லியம் பிரான்ஸ் நாட்டின் கரையருகே தரைப் படையையும் கப்பற் படையையும் குவித்தார். 1066 ஆகஸ்ட் திங்களில் அவர் புறப்படத் தயாரானார். ஆயினும் கடுமையான வடகாற்று வீசியதால், அவருடைய பயணம் பல வாரங்களாகத் தடைப்பட்டது. இதற்கிடையில் நார்வே மன்னரான ஹெரால்டு ஹார்ட்ராட் வடகடலைத் தாண்டி வந்து இங்கிலாந்தின் மேல் படையெடுத்தார். ஹெராட்டுகாட்வின் வில்லியத்தின் படையெடுப்பை எதிர்ப்பதற்காகப் படைகளை இங்கிலாந்தின் தென் பகுதியில் நிறுத்தி வைத்திருந்தார். இப்பொழுது நார்வே மன்னரின் தாக்குதலை எதிர்ப்பதற்காக அவர் படைகளை வடக்கே கொண்டு போக நேர்ந்தது. செப்டம்பர் 25ஆம் நாள் ஸ்டா.:.ப்போர்டு பிரிட்ஜ் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் நார்வே அரசன் கொல்லப்பட்டான். அவருடைய் படைகள் சிதறியோடின.

**வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



> நான் சொல்வ தெல்லாம் பொய்.
> பொய்யைத் தவிர
> வேறொன்றுமில்லை
> *-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ,

சின்ன வயசில, படிக்கிற காலத்தில, நண்பர்களுக்கிடையில சண்டையை மூட்டி விடுவதற்குச் சொல்லுவினம். அவனுடைய மூக்கைத் தொடு பாப்பம் எண்டு சொல்லேக்கை, அதுக்கு எடுபட்டுப்போய் மாறிமாறி மூக்கைத் தொடப் போகேக்க, அதில எங்கேயோ கிடந்து வார கௌரவப் பிரச்சினையையும் கிளப்பி விடுவினம். அதுக்காகவே இன்னொருவர் தன்ர மூக்கைத் தொடவிடாதபடி மல்லுக்கட்டுவினம். பிறகென்ன சண்டைதான். உப்பிடி ரெண்டுபேர் சண்டை பிடிக்கேக்க அதுக்கு ஏற்பாடு செய்ததிருப்தியில பெடியள் சண்டையைப் பார்த்து சிரிச்சுக் கொண்டு இருப்பினம். கடைசியில வாத்தியார் வந்து சண்டை பிடிச்ச ரெண்டு பேருக்கும் காற்சட்டையில ரெண்டு போட்டு விரட்டிப்போட்டு அந்தக் கதையை இன்னொரு வாத்தியாரிட்டைச் சொல்லிச் சிரிப்பார். பிறகு அவைக்கு சிரிப்பை அடக்க முடியாமக் கிடக்கும், ஏன் தெரியுமோ. அவையும் உந்த மாதிரி மூக்குத் தொடப்போய் புழுதி குளிச்சி தங்கட வாத்திமாரிட்டை அடி வேண்டினவைதான் எண்ட அனுபவச் சிரிப்புத்தான் அது.

இப்பக்கூட உந்தக் கதையைப் படிக்கேக்கையும் பல பேரின்ர மனசுக்குள்ள பள்ளிக்கூடமும் பழைய நண்பர்களும் வந்து போவினம். ஏன் தெரியுமோ, உதையெல்லாம் கடந்தது தானுங்கோ வாலிபம். அனுபவிக்காதைவைக்காக நாங்களும் அழுவம். சரி.... சரி... ஏன் உந்தக் கதையைச் சொன்னனான் எண்டால் இந்த மாதம் ரெண்டாந் திகதி பார்ளிமெண் டுக்குப் போயிருந்தனான் எனக்கு சும்மாவே சில எம்.பி.மார் மேலை எரிச்சலா இருக்கும். ஏன் எண்டால் தாங்கள் யார், எதுக்காகப் பார்ளிமெண்ட் வந்த நாங்கள். தாங்கள் என்ன பேச வேணும் எண்டதுகளை விட்டுப்போட்டு காட்டுக் கூச்சல் போடுறதும், தேவையில்லாமல் அர்த்தமில்லாமல் சத்தம் போடுறதும் எண்டு எரிச்சல் வாற மாதிரி எதையாச்சும் செய்து கொண்டிருப்பினம்.

செங்கோலைத் தூக்கிக் கொண்டு ஓடுவாங்கள். சபைக்கு நடுவில் வந்து நிண்டு கொண்டு மற்றவருக்கும் கேக்காமல், தங்களுக்கும் கேக்காமல் கத்துவாங்கள். ஏன் சந்திரிகா அம்மையார் தீர்வுப் பொதியை முன் வைக்கேக்க, அதைப் பார்ளிமெண்டில வச்சு அப்போதும் எதிர்க்கட்சியாக இருந்த யூ.என்.பி.க் கட்சிக்காரர் எரிச்சிச்சினம். பிறகு காவி உடுப்புக்காரருக்கு அதுக்குள்ளேயே அடிச்சிச்சினம். போதாக்குறைக்கு பிடிக்கக்கூடாத இடத்தில பிடிச்சுக் கசக்கி அவர் வைத்தியசாலைக்குப் போய் வைத்தியம் பார்க்கும்படியாப் போனதெல்லாம் பழைய கதை. புதுக்கதை எங்கட கூட்டமைப்பு எம்.பி.மார் பார்ளிமெண்டில காட்டிற கூத்துத் தானுங்கோ. உந்தக் கூத்துகள் கொஞ்சம் ஓவராகிப் போட்டுதுங்கோ. போன ரெண்டாம் திகதி சிவாஜிலிங்கத்தார், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைப் பார்த்து, அரசாங்கத் தோட நிண்டுகொண்டு தமிழ் மக்களுக்கு துரோகம் பண்ணுறியல் எண்டு காச்மூச்செண்டு கத்தவும், பதிலுக்கு அவர், நீங்கள் முதலில சுயமா சிந்தியுங்கோ. சுயமா செயற்படுங்கோ எண்டு சொல்லவும், தகரக் கொட்டகைக்குள்ள நன்றியுள்ளது புகுந்த மாதிரி ஒரே சலசலப்பாப் போயிட்டுதுங்கோ. சபைக்குள்ள உதைப் பாத் துச் சிரித்துக் கொண்டிருந்த ஆளும் கட்சி அமைச்சர் ஒருவர் சிவாஜிலிங்கத்தைப் பார்த் தும் - கூட்டமைப்பு எம்.பி.மாரைப் பார்த்தும் - உங்களால முடியுமெண்டால் அமைச்சர் டக்ளஸோடை சபைக்கு நடுவில இறங்கிச் சண்டை போடுங்கோ பாப்பம் எண்டு உசுப் பேத்தவும், கூட்டமைப்பு எம்.பி.மாருக்கு அமைச்சர் டக்ளஸின்ர இயக்க வாழ்க்கையும் - அவர் பிஸிக்கலா பல வித்தைகளைக் கற்றவர் எண்டதும் தெரிஞ்சதாலை யோசிச் சினம்.

எண்டாலும் அமைச்சர் உசுப்பேத்தின திலஎடுபட்டு கௌரவப் பிரச்சினைக்காக சிவாஜிலிங்கத்தார் சபைக்கு நடுவில குதிச்சுப் போட்டாருங்கோ. கால் ஏலாத நேரத்தில மனிசன் கௌரவப் பிரச்சினையால வந்திட்டார் எண்டதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விளங்கியிருப்பார் போல. சபைக்கு நடுவில நிண்டு சண்டித்தனம் பண்ண முற்பட்டவரை நோக்கி எழுந்துபோன அமைச்சர் டக்ளஸ், கட்டிப்புடிச்சு ஏதோ சொல்லவும், சிவாஜிலிங்கம் எம்.பி.யும் அமைச்சர் டக்ளஸைக் கட்டிப்புடிச்சு ஏதோ சொல்லிச்சிரிச்சார். எங்க ரெண்டு பேரும் அடிபடப்போறாங்களோ எண்டு நாக்கைத் தொங்கப்போட்டுப் பாத்துக்கொண்டிருந்தவைக்கு முகத்தில அறைஞ்சமாதிரிப் போட்டுது. உந்தக் காட்சியைப் பொறுக்க ஏலாம விநோதகாரலிங்கம் எம்.பி. ஓடி வந்து சிவாஜிலிங்கம் எம்.பி.யை இழுத்துக்கொண்டு போயிட்டாருங்கோ. பிறகு அமைச்சர் டக்ளஸ் அவையைப் பாத்துச் சிரிச்சுப் போட்டு, போய் தன்ர கதிரையில இருந்துபோட்டார்.

உதில எனக்கு என்ன விளங்குச்சுது எண்டால் - யாரோ உசுப்பேத்தினம் எண்டதுக்காக நாங்கள் நாகரீகமில்லாம நடந்து கொண்டால் நமக்கும் கூடாது. தமிழ் மக்களுக்கும் கூடாது எண்டு அமைச்சர் டக்ளஸ் எண்ணியிருக்கலாம். உதையே சிவாஜிலிங்கத்தாருக்கும் சொல் லியிருக்கலாம். எண்டாலும் சிவாஜிலிங்கத்தார் உசுப்பேத்தலுக்கு எடுபட்டு பாஞ்சதைப் பாத்தால் அவர் இன்னும் சின்னப் புள்ளத் தனமாகவே இருக்கிறாருங்கோ. பள்ளிக்கூடத் தில விட்ட குழப்படிகளை பார்ளிமெண்ட் வரைக்கும் அவர் மறக்கவில்லை போல. கடைசியா ஒண்டு சொல்லுறன். யாரும் உசுப் பேத்தினமெண்டிட்டு உணர்ச்சி வசப்பட்டுப் போடாதேங்கோ. புரியுதோ. உங்களை சனம் அவதானிச்சுக் கொண்டிருக்கினம் எண்டதை மறந்து போடாதேங்கோ.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(09.02.2006 தொடங்கி 15.02.2006 வரை)

### சோதிட மாமணி தில்லை

#### இந்த வாரக் கிரக நிலை

மகரம் - சூரியன், புதன். மீனம் - இராகு. மேடம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. கன்னி- கேது. துலாம் - வியாழன். தனு - வெள்ளி.
சந்திரன் மிதுனம், கர்க்கடம், சிங்கம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நிலை நன்மை, காரியானுகூலம், பண வரவு, உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், உறவினர் உபத்திரம், குடும்பக் கலகம், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, கடன்சுமை, மனப்பயம், வெளியிட வாழ்க்கை, குடும்பப் பாரம், உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.) தொழில் அலைச்சல், மனப்பயம், வெளியார் உதவி, மனக்கலக்கம், தேக சுகக் கஷ்டம், குடும்பச் சுகம், இனசனக் கஷ்டம், உத்தியோகக் கவலை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் உயர்ச்சி, பணவரவு கஷ்டம், மறைமுக எதிர்ப்பு, பங்காளர் பகை, அந்நியர் தொல்லை, குடும்பப் பகை, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.) தொழில் உயர்ச்சி, பணவரவு, பெரியோர் சகாயம், மனக்குறை நீங்கும், இனசன நன்மை, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகக் கவலை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் உயர்ச்சி, பணக்கஷ்டம், பெரியோர் உதவி, பிரயாண மிகுதி, தேகசுகப் பயம், குடும்ப சிரமம், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் சிக்கல், மனக்கவலை, அந்நியர் உதவி, கௌரவக் குறைவு, குடும்ப நன்மை, செலவதிகம், உத்தியோகக் கவலை, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், சோம்பல் தன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் மந்தம், காரியத்தடை, பணவிரயம், அந்நியர் சகவாசம், தூர இடப் பயணம், தேகசுகக் கஷ்டம், குடும்பச்சுமை, உத்தியோக உயர்ச்சி, மாணவர் கல்வி மந்தம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கன்னி :** (உத்தராடத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் மேன்மை, பணவரவு, மனமகிழ்ச்சி, பிரயாண மிகுதி, வெளியிட வாசம், குடும்பப் பொறுப்பு, தேகசுகம், உத்தியோக நாட்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.) தொழில் மந்தம், பணச்செலவு, வீண்துயர், பெரியோர் சகாயம், மனக்குறை நீங்கும், குடும்பச் சுமை, உத்தியோகத் தொல்லை, மேலதிகாரிகள் அனுகூலம், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 07.**

**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி, பணவரவு, உயர்ந்த நிலை, வெளியிடவாசம், குடும்ப நன்மை, உத்தியோக முயற்சி, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் நன்மை, காரியானுகூலம், பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், குடும்ப பாரம், எதிர்பாரா செலவு, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்தி இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)


# இதய வீணை

தினமும்

மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்... செய்திகளாய்... நமது காதுகளில்

| | |
|---|---|
| கிழக்கு மாகாணம் | 107.9, 104.5 |
| வட மாகாணம் | 92.2 |
| கொழும்பு | 105.6 |

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www.tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |


## மஸ்கெலியா சண்டியர்





தனி இராச்சியத்திற்கு மனிதர்கள் மட்டுமல்ல, மிருகங்கள் கூட இப்போது ஆசைப்படுகின்றன. அந்த வகையில் இங்குள்ள காளை மாடு மஸ்கெலியா பிறவுண்லோ ஆடைத் தொழிற்சாலைக்கு முன்பாக தனிராச்சியம் புரிகிறது. இப் பகுதிகளில் தன்னினத்தைச் சேர்ந்தவர்களையும், வாகனங்களின் ஹோர்ன் சத்தங்களையும் அனுமதிப்பதில்லையாம். இதுவரையில் பல வாகனங்களைத் தனது கொம்புகளால் பதம் பார்த்ததால், கொம்புகள் மழுங்கிக் காணப்படுகிறது. இதிலிருந்து இவரின் சண்டித்தனம் புரியவில்லையா.....?



## 2ஆவது பிறந்த நாள் வாழ்த்து / 05.02.2006

### செல்வி ச. நிருஷா

ஜேர்மன் லிவகுசனில் வசிக்கும் சசிகரன் சஜிரூபி தம்பதியரின் செல்வப் புதல்வி நிருஷா தனது 2ஆவது பிறந்த நாளை 05.02.2006 அன்று ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். நிருஷா குட்டியை அப்பா, அம்மா மற்றும் இலங்கையிலுள்ள அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்திமார், சித்தப்பாமார், மனோனி, தனு, ஜேர்மனியிலுள்ள அப்பப்பா, அப்பம்மா, மாமா, அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான் கௌசிக், மச்சாள் கயாலி மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

–தகவல் :– டிக்சன் (பெரியப்பா) கொழும்பு.



## 5 ஆவது பிறந்த நாள் வாழ்த்து / 5 ஆவது பிறந்த நாள் வாழ்த்து / 1 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



T. ANNY FLORANE/21.10.05



T. ALAIN JOUSUVA / 16.12.2005



T. ARONE / 14.02.2006

நாவற்குழி கிழக்கு தச்சன் தோப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட திருச்செல்வம் (Johnson) Nancy தம்பதியின் செல்வப் பிள்ளைகள் தங்கள் பிறந்த நாளை பிரான்ஸில் பாரிஸில் தங்கள் அப்பா அம்மாவுடன் வெகுவிமரிசையாக கொண்டாடினார்கள். இவர்களை நாவற்குழியில் இருக்கும் அப்பம்மா, பெரியம்மாமார், பெரியப்பாமார், அண்ணாமார், அக்காமார், இந்தியாவில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா, மாமா, மாமி, மச்சான்மார், மலேசியாவில் உள்ள பெரியப்பா, பெரியம்மா, அக்கா, தங்கை, கனடாவில் பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், சித்தப்பா, சித்தி, தங்கை தம்பி, மாமாமார், லண்டனில் உள்ள சித்தப்பாமார், சித்திமார், அண்ணா, தம்பி, மச்சான், பெரியப்பா, பிள்ளைகள் நேசர் ஜேசுவின் நாமத்தில் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

–தகவல் :– ஜோன்சன் (அப்பா),பிரான்ஸ், தொ.இல.– 0698067246